ஆசிரியர் உரை



# ஆபாசம் பற்றிய நடைமுறை மற்றும் விபரமான தகவல்கள்

# The Nuts and Bolts of Pornography

Louis Rushmore

**Pornography** என்னும் ஆங்கில வார்த்தைக்கு தமிழில் **ஆபாசம்** என்று பொருள். இதை இன்னும் ஆழமாகச் சென்று அதன் பொருளைத் தேடினால் இந்த **Pornography** என்னும் பதம், பாலியல் அல்லது காம உணர்வுகளைத் தூண்டும் விதத்திலான சித்திரங்கள் மற்றும் கவிதைகளை வெளிப்படுத்துவது என்றும் பொருள்படுகிறது. இவ்வார்த்தையானது ஒரு கிரேக்கக் கூட்டுச் சொல்லாகும். **Porne** என்றால் **வேசி** என்றும், **Grapho** என்பதற்கு எழுத்து என்றும் பொருள். இதனடிப்படையில் **Pornography** என்பதற்கு ஆபாசமான எழுத்துக்கள் என்பதே இதன் நேர்மையான பொருளாகும். இதைக்குறித்து வேதாகமம் கடுமையாக எச்சரிக்கிறது.

இப்படிப்பட்ட ஆபாசத்தின் தாக்கத்தையும், எல்லையையும் அறிய, முதலாவது இதன் விளைவை நாம் கண்டறிய வேண்டும். பொதுவாக இந்த ஆபாசம் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது. ஒன்று, இலைமறை காயாக வெளிப்படுத்தப்படுகிறது. மற்றொன்று, எவ்வித ஒளிவு மறைவுமின்றி வெளிப்படையாகக் காட்டப்படுகிறது. இந்த இரண்டாவது வகை, உலக முழுவதும் ஒரு கொள்ளை நோயைப் போலப் பரவி வருகிறது. இலைமறை காயாகக் காட்டப்படும் ஆபாசம் மேற்கத்திய கலாச்சாரத்தை முழுவதுமாக ஆட்கொண்டு விட்டன. இன்று, விளம்பரம் மூலமாக சந்தைப்படுத்தப்படும் பொருட்கள் எல்லாவற்றிலும் (சிற்றுண்டி, ஆபரணங்கள், ஆடைகள், வாகனங்கள்) ஆபாசம் இருக்கிறது. இன்னும் திரைப்படங்கள், பாடல் காட்சிகள், வீடியோ கேம்ஸ், பத்திரிக்கைகள், புத்தகங்கள் மற்றும் இணையதளம் போன்றவைகளும் ஆபாசத்தால் நிரப்பப்பட்டிருக்கின்றன. இதினிமித்தம், இன்று சிறியோர் முதல் பெரியோர் வரை எல்லோருமே வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் ஆபாசக் காட்சிகளை எதிர்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. இப்படிப்பட்ட ஆபாசங்கள் பல மில்லியன் டாலர் வியாபாரமாகவும்

இழிவான மனிதர்களின் ஆசையைத் தூண்டும் ஒன்றாகவும் இருக்கும் வரை, தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமான சித்தத்திலிருந்து தனிப்பட்ட நபர்களையும் சமுதாயத்தையும் அது தூர இழுத்துச் சென்று கொண்டே இருக்கும் [ரோமர் 12:1,2].

மேலும், தேவனால் அங்கீகரிக்கப்பட்ட விவாகத்தில் இணையும் ஆண் மற்றும் பெண்ணிடையே காணப்படும் உறவின் மேன்மையை இந்த ஆபாசங்கள் வியர்த்தமாக்கி [ஆதி.2:24,25; மத். 19:4-6,9], கணவன் மனைவியிடையே காணப்படும் நெருக்கமான உறவின் அழகைக் கெடுத்துப்போடுகிறது [உன்.4:5; நீதி. 5:18-20 ; 1கொரி.7:15]. மேலும், கணவன் மனைவியிடையே காணப்படும் உறவை ஒழுக்க ரீதியாக எவ்வித முக்கியதுவமும் இல்லாத வெறும், சிற்றின்பத்திற்கான ஒன்றாகத்தான் இந்த ஆபாசக் காட்சிகள் காட்டுகின்றன. அதுமாத்திரமல்ல, இந்த ஆபாசக் காட்சிகள் ஆண்களையும், பெண்களையும், இளம் பருவத்தினரையும், முக்கியத்துவமற்ற, உயிரற்ற பொருட்களைப் போல தரம் தாழ்த்தி விடுகிறது.

> ஆபாசங்களை நம் வாழ்விலிருந்து முற்றிலுமாக நாம் அகற்ற வேண்டுமென்றும், அவைகளிலிருந்து நம்மை விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டுமென்றும் வேதாகம போதனைகள் நம்மை எச்சரிக்கின்றன.

இன்று, இணையதளத்தில் காணப்படும் தகவல்களில் பத்து சதவீதம் ஆபாசங்களை உள்ளடக்கியதாகத்தான் இருக்கிறது என்று சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இக்கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் நாள்தோறும் இணையதளத்தில் தேடப்படும் தகவல்களில் அதிகளவு ஆபாசங்களை உள்ளடக்கிய தாகத்தான் இருக்கிறது. இதற்குக் காரணம், ஆபாசத்தைக் காணும் ஆண்களும், பெண்களும், இதைத் தவறு என நினைப்பதில்லை. ஆபாசம் என்னும் கொள்ளை நோயானது மொழி, இனம், கலாச்சாரம், மற்றும் பொருளாதாரப் பாகுபாடின்றி, எல்லாத் தரப்பினரையும் பதம் பார்த்து விடுகிறது.

பழங்காலத்தில் சித்திரங்கள், கற்சிலைகள், மற்றும் எழுத்து வடிவத்தில் ஆபாசம் வெளிப்படுத்தப்பட்டது. ஆனால், இன்று நவீன கால தொழில் நுட்பங்கள் இதை மிகவும் எளிமைப்படுத்தி, பார்க்கும் விதத்தை முற்றிலும் மாற்றியிருக்கின்றது. அதாவது, தொழில் நுட்பத்தால் தகவல் சாதனங்கள் மாறின அளவுக்கு மனித இனம் 1யோவான் 2:16-ல் சொல்லப்பட்டுள்ளபடி, கண்களின் இச்சை, மாமசத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை என்னும் இந்த மூன்று விதமான பாவச்செயல்களினால் தூண்டப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இதினிமித்தம், ஆபாசம் என்னும் தொற்றுநோய், இவ்வுலக மக்களின் மனசாட்சியையே மாற்றி விடுகிறது.

இப்படிப்பட்ட ஆபாசங்களை நம் வாழ்விலிருந்து முற்றிலுமாக நாம் அகற்ற வேண்டுமென்றும், அவைகளிலிருந்து நம்மை விலக்கிக் காத்துக்கொள்ள வேண்டுமென்றும், வேதாகம போதனைகள் நம்மை எச்சரிக்கின்றன. **விபசாரஞ்செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று** (மத்தேயு 5:27,28) என்று நமதாண்டவர் ஆபாசங்களின் ஆணி வேர் இச்சை என்று ஆணித்தரமாகச் சொல்லுகிறார்! அதாவது, ஒரு ஸ்திரீயை இச்சையுடன் பார்ப்பது விபசாரத்திற்கான முன்னோட்டம் என்று சொல்லுகிறார். பிறகு, இச்சையின் தாக்கத்தை வலியுறுத்துவதற்காக உருவக நடையில் பேசுகிறார் நம் ஆண்டவர். உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு என்று சொல்லுகிறார். எனவே, ஒரு ஆண்மகன் திருமணத்திற்கு முன்னும், பின்னும் ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்த்தால் அது பாவமாகும்.

ஒருவர் பாவம் செய்வதற்கு வெளிப்புறமான சரீர செயல்பாடுகளில் ஈடுபட வேண்டிய அவசியமில்லை, உட்புறமான மனிதளவிலேயே பாவம் செய்து விட முடியும் என்று மத் 5:27-29 மற்றும் மாற்கு7:21-23, வசனப் பகுதிகளில் நம் ஆண்டவரின் வார்த்தைகள் வெளிப்படுத்துகின்றன. எப்படியெனில், **மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலை பாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும், புறப்பட்டு வரும். பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்.** இதினிமித்தம் மற்றவர்களுடைய பாவமான செயல்பாடுகளை நாம் அங்கீகரிக்கும்போது நாமும் பாவிகளாகிறோம் என்று ரோமர் 1:32-ல் நாம் காண்கிறோம். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரமாயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள்.

நாம் அப்படியிராமல், வேசித்தனத்திற்கு விலகியோட வேண்டும் என்று வேதவசனங்களால் எச்சரிக்கப்படுகிறோம் (1கொரி.6:18). இதினிமித்தம் நாம் எச்சூழ்நிலையிலும் மற்றவர்களுடைய பாவங்களுக்கு உடன்படக் கூடாது. மாறாக, நாம்

நம்முடைய எண்ணத்தையெல்லாம் கிறிஸ்துவுக்குள் கீழ்ப்படியச் சிறைபடுத்த வேண்டும்(2கொரி.10:5). **கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்** (பிலி.4:8). அப்பொழுது நாம், இவ்வுலகத்தையும் அதின் வியத்தகு காரியங்களையும் தேவபக்தியற்ற சீர்கேடான கண்களால் காணாமல், நம் சர்வ வல்லமையுள்ள தேவன் எப்படிப் பார்க்கிறாரோ அப்படி நாம் இவ்வுலகத்தைப் பார்க்க முடியும்.

ஆகவே, நம்முடைய பக்தி வாழ்வு தேவனுடைய பார்வையிலும், இவ்வுலகத்தாரின் பார்வையிலும் மேலோங்கிக் காணப்பட வேண்டுமானால் நாம் காண்கின்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் குறித்தும், இணையத்தில் நாம் தேடும், பார்க்கும் காட்சிகளைக் குறித்தும், நாம் போகின்ற இடங்களைக் குறித்தும், நாம் யாரோடு நேரத்தைச் செலவு செய்கிறோம் என்பதைக் குறித்தும் மிகுந்த ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும். ✞

## யாக்கோபு நிருபத்தில் நாவு

**1. அது ஒரு நெருப்பு (3:6)**

**2. அது அடங்காது (3:8)**

**3. அது பொல்லாங்குள்ளது (3:8)**

**4. அது அநீதி நிறைந்தது (3:6)**

**5. அது பெருமை நிறைந்தது (3:6)**

**6. அது கறைப்படுத்துகிறது (3:6)**

**7. அது ஆயுள் சக்கரத்தைக் கொழுத்திவிடுகிறது (3:6)**

**8. அது விஷம் நிறைந்தது (3:8)**

**9. அது தேவனைத் துதிக்கிறது (3:9)**

**10. அது பொய் சொல்லுகிறது (3:14)**

நிர்வாக ஆசிரியர் உரை

# கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ?
# Is there no balm in Gilead?

*E.Z.S. Rajanayagam*

**கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ?** என்பதை அடிப்படையாக வைத்து சில பாடங்களைக் கற்றுக்கொள்ள இருக்கிறோம். அதற்கு முன்பாக, கீலேயாத் பற்றியும், அங்கே கிடைக்கும் பிசின் தைலத்தின் சிறப்பு பற்றியும் கொஞ்சம் தெரிந்து கொள்வோம். முதலாவது, கீலேயாத் என்ற வார்த்தையின் பொருள் **பாறை போன்றது** அல்லது **உறுதியானது** என்பது. இது, யூதாவிலிருந்த ஒரு மலை [நியா.7:3] புகழ்மிக்க எலியா தீர்க்கன் பிறந்த மண் [1இராஜா.17:1]. சிறப்புகள் பலவற்றிற்குச் சொந்தமான இந்த கீலேயாத், அங்கே கிடைக்கும் பிசின் தைலத்தினிமித்தம் மேலும் சிறப்புப் பெற்றிருந்தது. இங்கே கிடைத்த பிசின் தைலமானது, முன் காலத்தில் இஸ்மவேலர்களால் எகிப்து தேசத்திற்கும் [ஆதி.37:23], பின் நாட்களில் யூதர்களால் தீரு போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது [எசே.27:17]. பெலஸ்தீனா தேசத்தில் தயாரிக்கப்பட்ட விலைமதிப்புள்ள பொருட்களில் இந்தத் தைலமும் ஒன்று [ஆதி.43:11] இதற்குப் பல காரணங்கள் உண்டு. அவைகளில் பிரதானமானது இதற்கிருக்கும் மருத்துவகுணம். குறிப்பாகக் காயங்கள் கட்டப்படுவதற்கு இது பயன்பட்டுள்ளது. இப்படிப்பட்ட தைலத்தைத்தான் எரேமியா தீர்க்கன் ஆவிக்குரிய ரீதியில் பாவத்தின் வஞ்சனையால் காயப்பட்டு, கட்டப்பட வேண்டிய நிலையிருந்த யூதர்களுக்கு உருவகமாகப் பயன்படுத்தியுள்ளார். காயம் ஆறாமல், முற்றிப்போன நிலையில்தான் **கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ** என்று கூக்குரலிடப்பட்டுள்ளது.

இப்பொழுது இதிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்களைப் பார்ப்போம்.

**இருதயக் கடினத்தினாலே தோற்றம் பெறுகிற பாவம், அதே நிலையில் எப்போதும் அங்கேயே குடியிருப்பதில்லை. ஒரு கட்டத்தில் அது தன்னை வெளிப்படுத்திச் செயல்பட ஆரம்பிக்கிறது.**

## I பாவம் என்னும் வியாதி

கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ' என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல்பாடம், பிரச்சனைக்கு எப்பொழுதுமே அடிப்படை பாவம் தான் என்பது.

ஆம், அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி, மனித வாழ்வில் காணப்படும் அநேகப் பிரச்சனைகளுக்குக் காரணமாக பாவம் இருந்து வந்துள்ளது. ஆன்மச் சீரழிவுக்கான காரணமாக மாத்திரமல்லாமல், சரீர வாழ்வின் கேட்டுக்குக் காரணமாகவும் பாவம் இருந்து வருகிறது. அன்றைய நாட்களில், யூதாவின் ஜனங்களுக்கு ஏற்பட்ட கசப்பான காரியங்களுக்கு, குறிப்பாக அந்நிய நாட்டிலே அடிமைகளாகக் காலம் தள்ள நேர்ந்ததற்குக் காரணம் பாவமே.

எந்த ஒரு பாமும் செயல் வடிவம் பெறுவதற்கு முன்னதாக, அது சிந்தையிலே தான் ஆரம்பமாகிறது. இதைப்பற்றி ஞானி சாலமோனைக் கொண்டு ஆவியானவர் கூறும்போது, **அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்** என்கிறார் [நீதி.23:7]. ஆகவேதான், அதே நீதிமொழிகளில் **எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள், அதினிடத்தினின்று ஜீவ ஊற்றுப் புறப்படும்** [நீதி.4:23] என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. இந்த யூதாவின் ஜனங்கள் எண்ணத்திலே கேடடைந்தவர்களாக முதலில் மாறி, பிறகுதான் பாவச் செயலுக்குத் தங்களை உட்படுத்தியுள்ளனர். எசேக்கியேல் தீர்க்கன் அவர்களைப் பற்றி **அவர்கள் கடின முகமும் முரட்டாட்ட இருதயமுமுள்ள புத்திரர்** என்று கூறியுள்ளார் [எசே. 2:4] இப்படிப்பட்ட இருதயத்தின் விளைவைக் குறித்து எரேமியா தீர்க்கன் சொல்லும் போது, **அவர்களோ கேளாமலும், தங்கள் செவிகளைச் சாயாமலும் போய் கேளாதபடிக்கும் புத்தியை ஏற்றுக் கொள்ளாதபடிக்கும், தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தினார்கள்**'' என்று [எரே.17:23].

இப்படி இருதயக் கடினத்தினாலே தோற்றம் பெறுகின்ற பாவம் அதே நிலையில் எப்போதும் அங்கேயே குடியிருப்பதில்லை. ஒரு கட்டத்தில் அது தன்னை வெளிப்படுத்திச் செயல்பட ஆரம்பிக்கிறது. ஆம், யூதர்களின் இருதயக் கடினம் அவர்களை விக்கிரகங்களின் பின்னால் போகச் செய்தது [எசே.6:9]. பாவம் அவர்களை, தேவனை விட்டுப் பிரிந்து போகும்படி செய்தது. இருதயக் கடினம் தேவனால் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பூர்வ பாதையை மறக்கும்படியாகச் செய்தது [எரே.6:16]. இப்படியாக, இருதயக் கடினமும், அது ஈந்த பாவமும் ஒரு தொற்று நோயாக மாறி எல்லோரையும் பாதித்து, ஒரு தேசமே தேவனை விட்டு வழி விலகிப் போகும்படி செய்தது.

ஆகையால், நாம் ஒவ்வொருவரும் இருதயத்தைக் கடினப்படுத்தி உண்மையானவைகளுக்கு நம்முடைய செவியை விலக்கி, ஆவிக்குரிய ரீதியில் தாறுமாறானவைகளுக்கு நம்முடைய நடைகளை ஒப்புக்கொடுத்து விடாமல், சத்தியத்தை மாத்திரம் நேசிக்கிறவர்களாக இருப்போம். இப்படிச் செய்வோமானால் தேவனால் கொடுக்கப்பட்ட சத்தியமானது நிச்சயம் நம்மை விடுதலையாக்கும் [யோவான் 8:32].

II பாவ வியாதிக்கான மருந்து

கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ என்பதும் யூதாவின் ஜனங்களைப் பிடித்திருக்கும் பாவ வியாதிக்கு மருந்து இல்லையோ என்பதும் ஒன்றுதான். எப்படி சரீரத்தில் ஏற்படும் ஒரு குறிப்பிட்ட வியாதி குணமாவதற்கு அதற்கான மருந்துகள் கொடுக்கப்படுகிறதோ அதுபோல யூதாவின் பாவ வியாதிக்கும், வேத வசனங்களைக் கொண்டு தேவனால் மருந்து கொடுக்கப்பட்டது. **கர்த்தரிடத்தில் உண்மையாய்த் திரும்புங்கள்** என்று 3:10–லும், **சத்தியத்தைத் தேடுங்கள்** என்று 5:1–லும், **பூர்வப்பாதையிலே நடவுங்கள்** என்று 6:6–லும் **கர்த்தருடைய சத்தியத்திற்குக் கீழ்ப்படியுங்கள்** என்று 9:13,14 வசனங்களிலும் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இவர்கள் தேவ சத்தியத்திற்குக் கீழ்ப்படியவில்லை. ஒருவேளை, தேவ எச்சரிப்புக்குக் கீழ்ப்படிந் திருந்தால் சிறையிருப்பும் வந்திருக்காது, அடிமைத்தனமும் வந்திருக்காது [எரே.4:28]. ஆனால், இவர்களோ தேவ கட்டளையைப் பகிரங்கமாக மீறி விட்டு, வலி தாங்க முடியாத கட்டம் வந்த போது, ஒன்றும் தெரியாதவர்கள் போல, **கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ** என்று கூப்பாடு போடுகிறார்கள்.

அன்பானவர்களே! எரேமியாவின் நாட்களில் உண்டான பாவ வியாதிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தீர்வுக்கும், புதிய ஏற்பாட்டிலே பாவ வியாதிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தீர்வுக்கும் ஓர் ஒற்றுமை இருப்பதைக் காண முடியும். ஆம், அங்கே கீலேயாத் மலை, இங்கே கல்வாரி மலை, அங்கே பிசின் மரம், இங்கே சிலுவை மரம், அங்கே பிசின் வடிந்தது, இங்கே இரத்தம் வடிந்தது, அங்கே பட்டயத்தைக் கொண்டு காயப்படுத்துவதால் வந்தது, இங்கே ஈட்டியால் விலாவில் குத்தியதால் வந்தது. பிசினுக்கு சரீரத்தைக் குணப்படுத்தும் ஆற்றல் இருந்தது. இங்கே கிறிஸ்துவின் இரத்தத்திற்கு ஆன்மாவைக் குணப்படுத்தும் வல்லமை இருக்கிறது. அங்கே, பிசின் விலை மதிப்புள்ளதாக இருந்தது. இங்கே, கிறிஸ்துவின் இரத்தமோ விலையில்லாததாக இருக்கிறது. இந்த மகத்துவமுள்ள இரத்தம் தான் மனிதனின் எல்லாப் பாவங்களையும் நீக்கி சுத்திகரிக்கும் வல்லமையுடையதாயிருக்கிறது [யோவான் 1:7].

ஆகையால், இனிமேலும் நாம் இப்படி கேட்கிறவர்களாக இல்லாமல், புதிய ஏற்பாடு சொல்லும் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு ஒப்புக்கொடுத்து அதன் படி மாத்திரம் வாழ்கிறவர்களாக இருப்போம்.

III இரண வைத்தியன் இருக்கிறார்

கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? என்ற வசனப் பகுதியிலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், பிசின் தைலம் மாத்திரமல்ல, இரண வைத்தியனும் அங்கே இருக்கிறார் என்பது.

எரேமியாவின் நாட்களில், கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ என்று அங்கலாய்த்தவர்கள், அத்தோடு நிறுத்தாமல், இரண வைத்தியனும் அங்கே இல்லையோ? என்றும், பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற் போனாள்? என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர். எப்பொழுதும், ஒரு காயத்திற்குப் போடப்படும் மருந்து மட்டும் இருந்தால் போதாது, அதைக் கட்டுவதற்கு வைத்தியனும் தேவைப்படுகிறார். எரேமியாவின் காலத்து மக்கள் பாவ வாழ்க்கையில் முழுகினவர்களாக இருந்தாலும், தங்கள் அறிவை முற்றிலும் அடகு வைத்து விடவில்லை என்பதற்கு இந்தக் கேள்வி ஒரு சான்று.

புதிய ஏற்பாட்டிலே, இயேசு வைத்தியராக இருக்கிறார் என்ற பொருளில் வசனங்கள் பல உண்டு. **இயேசு அதைக் கேட்டு பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்**(மாற்கு 2:17). லூக்கா 5:31–லும் இதே கருத்து உள்ளது. இப்பகுதிகளில், இயேசு வைத்தியராகச் சொல்லப்படுவதற்குக் காரணம், ஒருவேளை, அவர் பாவம் செய்யாதவராக இருந்தாலும், பாவ வியாதியின் தன்மையை அறிந்தவராகவும், அது தரும் வேதனையைத் தெரிந்தவராகவும், அதன் கொடுமையை அனுபவித்தவராகவும் இருக்கிறார் (ஏசாயா 53:3–9;1 பேதுரு 2:22, எபி 4:15).

ஆனால், அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி ஜனங்கள் தேவனுடைய வார்த்தைகளின் வல்லமையையும், கிறிஸ்துவினுடைய வார்த்தைகளின் மேன்மையையும் புரியாதவர்களாகவே வாழ்ந்து கொண்டுள்ளனர். எரேமியாவின் நாட்களில், அவர்களுடைய சரீர வாழ்க்கை சீரழிந்ததற்கும், நம்முடைய நாட்களில் கிறிஸ்தவ சமுதாயத்தின் ஆவிக்குரிய வாழ்க்கை அல்லல்பட்டுக் கிடப்பதற்கும் காரணம், தேவனுடைய வார்த்தைகளைப் புறக்கணிப்பதும், அவைகளை அப்படியே ஏற்றுக்கொள்ள மறுப்பதும் தான்.

ஆகையால், அன்பானவர்களே! எரேமியா காலத்து மக்களைப் போல, **கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ''? இரண வைத்தியன் இல்லையோ?** என்றெல்லாம் நாம் இன்னும் கேட்டுக் கொண்டிராமல், பரம வைத்தியராகிய இயேசுவும், எப்படிப்பட்ட பாவப் பிணியையும் போக்கும் அவருடைய இரத்தமும் இருக்கிறதென்பதை அறிந்து, அவருடைய வார்த்தைகளுக்கு நம்மை முற்றிலுமாக ஒப்புக் கொடுப்போம். அதன் மூலம் சரீர அழிவிலிருந்தும், ஆவிக்குரிய அழிவிலிருந்தும் நம்மைக் காப்பாற்றிக் கொண்டு, இயேசுவின் வருகையில் அவரோடே கூட எடுத்துக் கொள்ளப்பட்டு (1தெச.5:7) நித்திய வாழ்வுக்குப் பங்காளிகளாக மாறுவோம்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென். ✞

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| ஆபாசம் பற்றிய நடைமுறை... | Louis Rushmore | ...1 |
| கீலேயாத்திலே பிசின் தைலைம்... | E.Z.S. Rajanayagam | ...5 |
| தேவனுடைய ஆலயம் | Jerry Bates | ...11 |
| தேவபக்தியுள்ள வழிநடத்துநர்களும்... | Byron Nichols | ...14 |
| ஆவியின் அளவுகள்... | J.C. Choate | ...18 |
| மாய்மாலமான வாழ்வு... | P.C. Philemon Rajah | ...23 |
| சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க... | B. Arjunan | ...27 |
| கள்ளனும் கள்ள உபதேசங்களும் | E.Z. Selvanayagam | ...31 |
| கிறிஸ்துவின் சிந்தையை... | Benny Martin | ...35 |


## தேவன் – God


| | | |
|---|---|---|
| தேவ கோபாக்கினை | Betty Burton Choate | ...39 |
| தேவனுடைய கரம் | Bobby Dockery | ...42 |


## தேவனுடைய வார்த்தை – The Word Of God


| | | |
|---|---|---|
| அப்பத்தினால் மாத்திரமல்ல ! | Perry N. Hall | ... 44 |
| தகவலா – தூண்டுதலா... | Carroll Sites | ...46 |


## இரட்சிப்பு – Salvation


| | | |
|---|---|---|
| தேவனுடைய உண்மையுள்ள ... | Dale Grissom | ... 48 |
| இடுக்கமான வாசலை ... | Cecil may Jr. | ... 50 |
| நேரம் | Frank Chesser | ... 53 |
| மகிழ்ச்சியின் காப்பீடு | Pattric Morrison | ... 54 |
| என் எதிராளி | Betty Burton Choate | ... 57 |
| வேதாகம உண்மைகள் | Selected | ... 58 |


## சபை – The Church


| | | |
|---|---|---|
| வேதாகமம் போதிப்பது என்ன ? | Sunny David | ... 60 |
| ஆவிக்குரிய தலைவர்கள்... | Ronald D. Bryant | ... 64 |
| இயேசு கிறிஸ்து கட்டின சபை | Charles E. Burch | ... 67 |
| சரியான தெரிந்து கொள்ளுதல் | Selected | ... 69 |

## வாழ்வதற்கான உபதேசம் – Doctrine to Live by


| | | |
|---|---|---|
| எது சரியானது என்பதை எப்படி... | Albert Gardner | ... 70 |
| புரிந்துகொள்வதற்கான தேவை | Hollis Miller | ... 74 |
| தேவனுடைய முழுமையான ... | Steve Vice | ... 75 |
| மாற்றத்திற்கான அழைப்பு | Chad Ezelle | ... 77 |
| இரண்டு அறுவடைகள் | Kingsly Rajah | ... 78 |
| வசன ஆராய்ச்சி | Jerry Bates | ... 81 |


## செயலில் கிறிஸ்தவம் – Christianity in Action



| | | |
|---|---|---|
| இயேசு ஜனங்களை... | Neal Pollard | ... 84 |
| கிறிஸ்துவின் கேள்விகளுக்குப்... | Ardon Hinton | ... 86 |
| பரலோகம் போகும் ஒரே ஜனமா ? | Cory Colling | ... 88 |
| ஆத்தும ஆதாயம் செய்கிறவன்... | Rachel Nayagam | ... 90 |
| மோசேயின் வாழ்க்கையில் நான் யார் ? | Rebecca Rushmore | ... 93 |
| மோசேயின் வாழ்க்கையில் நான் எங்கே... | Rebecca Rushmore | ... 94 |


## ஆராதனை – Worship


| | | |
|---|---|---|
| நான் ஆராதிக்க வரும்போது | Michael L. King | ... 95 |
| பழங்கால ஆனால், புதுமையான | Charles Cash | ... 98 |
| சமாதானத்தின் தேவன் ... | Selected | ... 100 |


## அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை – Daily Christian living


| | | |
|---|---|---|
| வளையும் தன்மை | David Deffenbaugh | ... 101 |
| உபத்திரவம் வரும்போது | Clarence De Loach.Jr | ... 103 |
| பெருமையின் வேர் | Kevin Cauley | ... 105 |
| தாய்மை | Motherhood | ... 107 |



# தேவனுடைய ஆலயம்

## THE TEMPLE OF GOD

Jerry Bates

கிறிஸ்தவர்களில் பலர், இனி நமக்கு ஆலயம் என்று ஒன்று தேவையில்லை என்று நினைக்கிறார்கள். சரீரப்பிரகாரமான கட்டிடத்தைப் பொறுத்தவரை இது உண்மைதான். ஆனாலும், நமக்கு ஒரு ஆலயம் உண்டு, அது ஆவிக்குரிய ஆலயமாக இருக்கிறது. 1 கொரி.3:16-ல் பவுல், **நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறார் என்றும், அறியாதிருக்கிறீர்களா?** என்று கேட்கிறார். இதினிமித்தம், கிறிஸ்தவர்களாகிய நாம் தான் தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம் என்று பவுல் சொல்லுகிறார். ஆவிக்குரிய பிரகாரமாக தேவன் நமக்குள் வாசம் செய்கிறார். இதன் பொருள் எந்தவொரு கட்டிடமும் தேவனுடைய ஆலயமாகாது. ஆகவே, நாம் சபைக் கட்டிடத்தைப் பரிசுத்த ஸ்தலமாக எண்ணக்கூடாது. பன்னெடுங்காலத்துக்கு முன்பே மக்கள் ஆலயங்களில் நன்கு பரிச்சையமுடையவர்களாக இருந்தார்கள். எருசலேமிலும் தேவ ஆலயம் இருந்தது. வேறே தேவர்களைச் சேவித்த பட்டணங்களிலும் ஆலயங்கள் இருந்தன.

சபை தேவனுடைய ஆலயமாயிருக்கிறது என்னும் உண்மையிலிருந்து நாம் கீழ்க்காணும் பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும்.

**சபையானது தேவனும், மனிதனும், சந்திக்கும் இடமாக இருக்கிறது.**

யாத்திராகமம் 29:42,43-ம் வசனங்களில் மோசே, மனிதனை தேவன் ஆசரிப்புக் கூடாரத்தில் சந்திப்பதாக எழுதினார். ஆசரிப்புக் கூடாரத்திற்கு மாற்றாக ஆலயம் வந்தபோது, தேவனும் மனிதனும் சந்திக்கும் ஸ்தலமாக ஆலயம் மாறி இருக்கிறது. இன்று, சபையானது ஆவிக்குரிய ஆலயமாயிருக்கிறபடியால், தேவனும், மனிதனும் சந்திக்கும் இடமாக இப்போதும், எப்போதும் சபைதான் இருக்கிறது. ஆகையால், நாம் தேவனைச் சந்திக்க வேண்டுமென்றால், கட்டிடமாகிய ஆலயத்தில் அல்ல, ஆவிக்குரிய சபையில் நாம் இருக்க வேண்டும்.

சபையானது தேவன் வாசம்செய்யும் இடமாக இருக்கிறபடியால், தேவனுடைய ஆவி நம்மில் வாசம் செய்கிறது. இதைக்குறித்து எபேசியர் 2:22-ல், அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டு வருகிறீர்கள் என்றும், 1கொரி.6:16-ல், நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன் அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே [2கொரி.6:16]. தேவன், மனிதனோடு ஐக்கியம்கொள்ள விரும்புகிறார். நாமும், தேவனோடு ஐக்கியமாக இருக்கவேண்டுமென்றால், அவருடைய குமாரன் இரத்தம் சிந்தி சம்பாதித்த சபையிலே அங்கமாயிருக்க வேண்டும்.

## சபை ஒரு ஆராதனை ஸ்தலமாகவும் இருக்கிறது

1பேதுரு 2:5-ல், ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள் என்று அப்போஸ்தலன் பேதுரு குறிப்பிடுகிறார். யூதர்கள் தேவனைத் தொழுதுகொள்ளவும், பலிகளைச் செலுத்தவும் தேவாலயத்திற்குத் தான் சென்றார்கள். அதேபோல, இன்று நாமும், தேவனை அவருடைய குமாரன் மூலமாய் ஆராதித்து, அதினிமித்தம் அவருக்கு ஆவிக்குரிய பலிகளைச் செலுத்த சபைக்குச் செல்லுகிறோம். யோவான் 4:23, ல் **உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது. தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாய் இருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.** நாம், தேவனைத் தொழுதுகொள்ள சபைக்குத்தான் செல்லவேண்டும். இங்கே சபையின் முக்கியத்துவத்தைக் கவனியுங்கள். தேவனை உண்மையாக ஆராதிக்க விரும்பினால் அவரோடு கூட ஐக்கியம் கொள்ள விரும்பினால் நாம் சபைக்குள் இருக்க வேண்டும்.

## சபைக்குள் நாம் எப்படி பிரவேசிக்க முடியும்?

**நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்** [1கொரி.12:3]. சபையானது சரீரமாயிருக்கிறது என்று வேதாகமத்தில் எபேசியர் 1:22,23-ம் வசனங்கள் குறிப்பிடுகின்றன. கிறிஸ்துவை, தேவன் எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார். ஆகவே, ஒருவர் தேவனைச் சந்திக்கும் இடமாகிய சபைக்குள் மாத்திரமே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள

**ஒருவன் தேவனுடைய ஆலயயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம் [1கொரி.3:17]. இது மிகவும் கடுமையான எச்சரிக்கையாகும்.**

தேவாலயத்தைப் பரிசுத்தமாக வைப்பதில் தேவன் எவ்வளவு கவனமாக இருந்தார் என்பதை பழைய ஏற்பாட்டின் வாயிலாக நாம் பார்க்கும்போது இது இன்னும் தெளிவாகப் புரியும். அதாவது, ஆலயம் எப்படிக் கட்டப்படவேண்டுமென்ற வழிமுறைகளைக் குறிப்பாகக் கொடுத்து, அதில் யாரெல்லாம் பிரவேசிக்க வேண்டுமென்றும் தேவன் கட்டளையிட்டிருந்தார். எண்.19:20-ல் தீட்டுப்பட்டிருக்கிறவன் தன்னைச் சுத்திகரித்துக் கொள்ளாதிருந்தால் அவன் சபையில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான் என்னும் எச்சரிப்பை நாம் காண்கிறோம். இதினிமித்தம், நம் தேவன் சரீரப்பிரகாரமான ஆலயத்தைப் பரிசுத்தமாக வைத்துக்கொள்வதில் இவ்வளவு அக்கறை உடையவராக இருந்தால், ஆவிக்குரிய ஆலயம் எவ்வளவு பரிசுத்தமாக இருக்கவேண்டுமென்று நினைப்பார் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

நாம் தேவனுடைய ஆலயத்தைப் பரிசுத்தமாக வைக்க ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தேவனுடைய ஆலயமாக இருக்கும் நம் சரீரத்தைப் பாவத்தினால் தீட்டுப்படுத்தாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக, விபசாரம், வேசித்தனம், சரீரத்தைத் தீட்டுப்படுத்தும் காரியங்களிலிருந்து நாம் விலகியிருக்க வேண்டும் [1கொரி.6:19,20]. மேலும், தேவனால் அங்கீகரிக்கப்படாத காரியங்களை தேவனுக்குச் சொந்தமான ஆலயத்துக்குள் புகுத்தக்கூடாது. ✝

---

### உடன்படிக்கைப் பெட்டி வழிநடத்தும் போது மோசே....

- **பெட்டி புறப்படும்போது கர்த்தாவே எழுந்தருளும் உம்முடைய சத்துருக்கள் சிதறடிக்கப்படுவார்களாக உம்மைப் பகைக்கிறவர்கள் உமக்கு முன்பாக ஓடிப்போவார்களாக என்றும்..**
- **பெட்டி தங்கும்போது கர்த்தாவே அநேக ஆயிரவர்களாகிய இஸ்ரவேலரிடத்தில் திரும்புவீராக என்றும் மோசே சொல்லுவான்.**



## தேவ பக்தியுள்ள வழிநடத்துநர்களும், பின்பற்றுபவர்களும்; இருவருமே அவசியம்தான்

## Godly Leaders and Followers : Both are Essential

Byron Nichols

தேவன், தம்முடைய சபை எப்போதுமே ஒருங்கிணைந்த கூட்டமாக, ஒரு குடும்பமாக, தங்கள் பன்முகத் திறமைகளை அவருக்கென்று பயன்படுத்துகிற ஜனக்கூட்டத்தை உடையதாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறார். இன்னும், சபை அங்கத்தினர்கள் ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கிறவர்களாகவும், தேவனுடைய சித்தத்தைக் கற்றுக்கொண்டு, அதன்படி செய்யத் தங்களை அர்ப்பணிக்கிறவர்களாகவும் இருக்கவேண்டுமென்றும் தேவனால் எதிர்பார்க்கப்படுகிறார்கள். தேவனுடைய சபையானது வேதாகமத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட பெயர்களால் அழைக்கப்படுவதற்கான முக்கிய காரணம், தேவனுடைய மனதில் சபை எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றிய விரிவான விளக்கத்தைக் கொடுப்பதற்குத்தான்.

சபையைப் பற்றி வேதவாக்கியங்களிலிருந்து நாம் அதிகமாகக் கற்றுக்கொள்ளும்போது, சபையானது அதன் முதிர்ச்சியடைந்த நிலையில் சபையை வழிநடத்துபவர்களும், பின்பற்றுபவர்களும் அவசியப்படுகிறார்கள் என்பதை நாம் காண்கிறோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, தம்முடைய சபையைக் கட்டுவதாக வாக்குத்தத்தம் பண்ணினார் [மத்தேயு 16:18]. அப்படி வாக்குத்தத்தம் பண்ணின தமது சபை எப்படியிருக்க வேண்டுமென்று தேவன் விரும்பினாரோ அப்படி இருப்பதற்குத் தலைமைத்துவம் அவசியமாயிருந்தது. அந்தத் தலைமைதுவத்தை அளிப்பதற்கு கிறிஸ்து தாம் தெரிந்துகொண்ட தமது அப்போஸ்தலர்களை ஆயத்தப்படுத்தினார். சபை ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பாக, அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவோடு இருந்து, அநேகங் காரியங்களைக் கற்றுக்கொண்டு, புத்துணர்வோடு அவரது ஊழியப்பாதையில் நன்மைகள் நடந்தேற முக்கியப்பங்காற்றினவர்கள், கிறிஸ்து பரமேறின பிறகு, அவர்களது உத்வேகம் மங்கி, குறையத்தொடங்கி

விட்டது. ஆனால், அதற்கு முன்னமே இயேசு கிறிஸ்து அவர்களுக்குக் கொடுத்த மிகப்பெரிய பொறுப்பு நிறைவேறவும் அவர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தவும், பிதாவினிடத்திலிருந்து பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை அனுப்பிக் கொடுப்பதாக வாக்குத்தத்தம் பண்ணினார். நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரை பெற்றுக்கொள்ள மாட்டாது; அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள். என் நாமத்தினலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் [யோவான் 14:16,17,26]. மேலும், யோவான் 15:26 மற்றும் 16:7,8,13-15-ம் வசனங்களிலும் நமதாண்டவரின் கூற்றைக் கவனியுங்கள். பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும் பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சிகொடுப்பார். நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும், நியாயத்தைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.

சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்கும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்ட யாவையுஞ்சொல்லி வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன் என்று இயேசு உரைத்தார். இதினிமித்தம், அப்போஸ்தலர்களுடைய வேலை எளிதான ஒன்றாக இருக்கவில்லை என்றாலும், அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி நடந்தபடியால் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையில் இருந்த பரிசுத்தவான்களுக்கு தலைமைத்துவப் பண்புகளை அவர்களால் கற்றுக் கொடுக்க முடிந்தது.

அப்போஸ்தலர்களின் இந்த தலைமைத்துவ முயற்சிகளைக் கர்த்தர் ஆசீர்வதித்ததின் விளைவாக அநேகமாயிரம் ஜனங்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தார்கள். **கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும், தகப்பன்மார் அநேகர் உங்களுக்கு இல்லையே; கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன்** (1கொரி4:15). அப்போஸ்தலர்களுடைய சுவிசேஷத்தைக் கேட்டு மனமாற்றமடைந்தவர்கள் விசுவாசத்தில் முதிர்ச்சி அடைந்து சபையில் தலைமைத்துவப் பொறுப்புகளை ஏற்கும் அளவுக்கு வளர்ந்திருந்தார்கள்.

**நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் மகிமையை அடையும்பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு உங்களை அழைத்தார்** (2தெச.2:14). அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகமும், அதை தொடர்ந்து வரும் நிருபங்களும் அப்போஸ்தலர்கள், மூப்பர்களின் தலைமைத்துவப் பங்கைப் பற்றி சபைக்குப் போதித்தார்கள் என்பதற்குச் சான்றுகளாக இருக்கின்றன. 1 1தீமோத்தேயு 3.ம் அதிகாரம் மற்றும் தீத்து 1–ம் அதிகாரங்களில் மூப்பர்களைத் தெரிந்தெடுப்பது மற்றும் அவர்களுடைய பணி சம்பந்தமான வழிமுறைகள் தேவ ஆவியினால் ஏவப்பட்டு விவரிக்கப்பட்டிருக்கின்றன. கிறிஸ்துவினுடைய ஆவிக்குரிய சரீரமாகிய சபையின் பக்திவிருத்திக்குத் தகுதிவாய்ந்த மூப்பர்களின் பங்களிப்பு இன்றியமையாததாக இருக்கிறது.

> **கர்த்தருடைய சபையில் தேவபக்தியுள்ள வழி நடத்து நவர்களும், அர்ப்பணிப்புள்ள அங்கத்தினர்களும் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அவசியமாயிருக்கிறார்கள்.**

சபையை வழிநடத்த மூப்பர்கள் வேண்டுமென்பது அவசியமாக இருக்கிறபடியால் சபையிலே உபதேச சத்தியத்தின் விசுவாசத்திலே உறுதியாக நிலைத்திருக்கக் கூடிய அங்கத்தினர்கள் இருக்க வேண்டியதும் அவசியமாயிருக்கிறது. அப்படி ஒரு சபை கிறிஸ்து விரும்புகிறபடி இருக்க வேண்டுமென்றால், அச்சபையில், தகுதி வாய்ந்த மூப்பர்களும், அந்த மூப்பர்களின் வழிநடத்துதலுக்குத் தங்களைக் கீழ்ப்படிய ஒப்புக்கொடுக்கிற அங்கத்தினர்களும் இருக்க வேண்டுமென்று தேவனால் எதிர்பார்க்கப்படுகிறது. ஆதித் திருச்சபை தேவபக்தியுள்ள வழிநடத்துநர்களால் போதிக்கப்பட்ட சுவிசேஷத்தின் சத்தியத்திற்குத் தங்களை முழுமையாக அர்ப்பணித்த அங்கத்தினர்களால் மிகப்பெரிய வளர்ச்சியடைந்தது. இன்னுமாக, சபை தியாகப்பூர்வமான கிறிஸ்தவர்களான எப்பப்பிரா, பெபேயாள், கொர்நேலியு, ஆக்கில்லா அவன் மனைவி பிரிஸ்கில்லா, தீத்து,

ஸ்தேவான், லீதியாள், தொற்காள், தேமேந்திரியு மற்றும் தேவனால் மாத்திரம் பெயர் அறியப்பட்டிருக்கிற பல உண்மையுள்ள அங்கத்தினர்களால் ஆவிக்குரிய பிரகாரமாகவும், எண்ணிக்கை அடிப்படையிலும் மாபெரும் வளர்ச்சி அடைந்தது.

சபை தேவபக்தியுள்ள வழிநடத்துபவர்களாலும், அர்ப்பணிப்புள்ள சபை அங்கத்தினர்களாலும் சிறப்பான முறையில் செயல்பட முடியும். மேலும் கர்த்தருடைய சபையில் சேவை செய்யக்கூடிய விருப்பம் இருந்தால் தான் உண்மையான தலைவராக இருக்க முடியும். சில வேளைகளில், அர்ப்பணிப்புள்ள அங்கத்தினர்கள் கூட, தங்களுடைய தாழ்மையும், மகிழ்ச்சியும் நிறைந்த சேவையின் வாயிலாக மிகச்சிறந்த தலைமைப் பண்புகளை வெளிப்படுத்தக் கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, கர்த்தருடைய சபையில், தேவபக்தியுள்ள வழிநடத்துநர்களும் அர்ப்பணிப்புள்ள அங்கத்தினர்களும் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அவசியமாயிருக்கிறார்கள்.

✞

---


## மாபெரும் சபையின் தன்மைகள்

- ☆ கொடுக்கும் ஜனங்கள் [பிலி. 4:4-16]
- ☆ பணிவும், கீழ்ப்படிதலும், வேலை செய்யும் மனப்பான்மை யுமுள்ள ஜனங்கள் [பிலி. 2:4-8]
- ☆ அன்பான ஜனங்கள் [பிலி. 1:9,10]
- ☆ நீதியுள்ள ஜனங்கள் [பிலி. 1:11]
- ☆ தேறுகிற ஜனங்கள் [பிலி. 3:12-16]
- ☆ பரலோகத்தை எதிர்நோக்குகிற ஜனங்கள் [பிலி. 3:20]
- ☆ ஒற்றுமையான ஜனங்கள் [பிலி. 1:27, 28]
- ☆ பரலோகப் பயண சிந்தையுடைய ஜனங்கள் [பிலி. 1:9,10]
- ☆ பரிசுத்தமான ஜனங்கள் [பிலி. 4:18]

# ஆவியின் அளவுகள்

## *Measures of the Sprit*

**J.C. Choate**



கிறிஸ்துவைப்பற்றி அப்போஸ்தலன் யோவான் இவ்விதம் கூறினார். **தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார் தேவன் தமது ஆவியை அளவில்லாமல் கொடுக்கிறார்** (யோவான் 3:34) கிறிஸ்துவுக்கு ஆவியை அளவில்லாமல் தேவன் அளித்தார் என யோவான் குறிப்பிடும்போது அவர் என்ன அர்த்தத்தில் அவ்வாறு கூறினார்? அளவுக்கு வரம்பு உண்டு. வேறுவிதமாகக் கூறினால் ஆவியை கிறிஸ்துவுக்கு ஒரு அளவோடு மட்டும் தேவன் கொடுத்திருப்பாரேயானால் அந்தக் குறிப்பிட்ட வரம்பிற்குள்தான் ஆவியின் வல்லமையை அவர் பயன்படுத்தியிருக்க முடியும். ஆனால், தேவன் ஆவியை அவருக்கு அளவுடன் கொடுக்காமல். மாறாக, அளவில்லாமல் கொடுத்தார். ஆவியின் வல்லமையை கிறிஸ்து உபயோகிக்கும்போது தேவனோ அல்லது ஆவியானவரோ இவருக்கு எந்தவிதக் கட்டுப்பாடுகளையும் விதிப்பதில்லை என்பதே அதற்குப் பொருள்.

தேவன் கிறிஸ்துவுக்கு ஆவியை அளவில்லாமல் கொடுத்தார் என்று சொல்லும்போது, மற்றவர்களுக்கு அளவுடன்தான் கொடுத்தார் எனக் கருத முடியும். ஆம், அப்போஸ்தலர்களுக்கு, அவர்கள் யார்மேல் கைகளை வைத்தார்களோ அவர்களுக்கும் மற்றும் எல்லா கிறிஸ்தவர்களுக்கும் அவரவர்களுக்கான அளவின் படியாகவே கொடுக்கப்பட்டது.

ஆவியானவரை அளவில்லாமல் பெற்றுக்கொண்ட கிறிஸ்து பிசாசுகளைத் துரத்தவும், மரித்தோரை எழுப்பவும், கடலின் புயலை அமர்த்தவும், தண்ணீரை ரசமாக்கவும், தண்ணீரின் மேல் நடக்கவும் இன்னும் இது போன்ற பல அற்புதங்களையும் செய்யக்கூடியவராக இருந்தார். எனவே, இவை எல்லாவற்றிற்கும் மேலாக யோவான் எழுதியதைப் பாருங்கள். **இந்தப் புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும் விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது** [யோவான் 20:30,31].

மேற்சொன்ன எல்லாவற்றையும் கடந்த ஓர் உண்மை என்னவென்றால், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைப் பிறருக்கு அளிக்கும் அதிகாரத்தை இயேசு பெற்றிருந்தார் என்பதாகும். பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கை அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்க அவரால் மட்டுமே முடிந்தது. குறிப்பிட்ட சீஷர்கள், பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படியாக அவர்களின் மீது கைகளை வைக்கும் வல்லமை மாத்திரமே அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால், அவர்கள் யாரையும் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானப்படுத்த முடியவில்லை. அப்போஸ்தலர்கள் கைகளை வைத்ததால் வல்லமையைப் பெற்றுக்கொண்ட சீடர்கள் அதை மற்றவர்களுக்குக் கொடுக்க முடியவில்லை.

ஆவியானவரை அளவுடன் பெற்றவர்களை இங்கு நாம் பார்ப்போம். அப்போஸ்தலர்களிலிருந்து இன்றைய கிறிஸ்தவர்கள் வரையிலும் உள்ள சகல கர்த்தரின் பிள்ளைகளும் பரிசுத்த ஆவியானவரை, திருமுழுக்கு அளவிற்குப் பெற்றிருக்க வேண்டும் அல்லது பெற்றுக்கொள்ள வேண்டும் என நம்புகின்றனர். இது உண்மை அல்ல என்பதை இப்பொழுது நாம் காணப் போகிறோம். தேற்றரவாளன் அல்லது பரிசுத்த ஆவியானவரை அப்போஸ்தலர்களுக்கு மட்டும் அனுப்புவதாக இயேசு வாக்களித்திருந்தார் என்பதை முதலில் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அவரைப் பின்பற்றிய எல்லாருக்கும் இந்த

வாக்குத்தத்தத்தை அவர் அளிக்கவில்லை. யோவான் புத்தகத்துக்கு நாம் திரும்பும்போது அங்கே அப்போஸ்தலர்களிடம் பேசிய கர்த்தர்தான் அவர்களை விட்டு விலகிப் போவது பற்றியும் அவ்வாறு சென்றபின் தேற்றரவாளனை அவர்களிடம் அனுப்புவது பற்றியும் கூறுகிறார். அந்தத் தேற்றரவாளனே பரிசுத்த ஆவியானவர் என அடையாளம் காட்டப்படுகிறார் [யோவான் 14:26].

அவர்கள் 12 பேர் மட்டுமே இருந்தனர் செய்ய வேண்டிய பணியோ ஏராளமாக இருந்தது.

கிறிஸ்து தொடர்ந்து கூறுவதைப் பார்ப்போம். **பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும் பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார். நீங்களும் ஆதி முதல் என்னுடனே இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பார்கள் என்றார்** [யோவான் 15:26,27]. மீண்டும் அவர் கூறுகிறார். **நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாக இருக்கும். நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார். நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்தில் அனுப்புவேன் [யோவான் 16:7]. தொடர்ந்து, சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல் தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார் என்றார்** [யோவான் 16:13]. இப்போது மேற்சொன்ன வசனங்களில் கர்த்தர் யாருடன் பேசிக் கொண்டிருந்தார்?

இயேசு என்ன பேசிக்கொண்டிருந்தார் என நீங்கள் கவனித்து பார்த்தால், ஆரம்பத்திலிருந்தே அவருடன் கூட இருந்த அப்போஸ்தலர்களிடம் பேசிக்கொண்டிருந்தார் என்பது மிகத் தெளிவாகத் தெரியும் [யோவான் 15:27]. அப்படியானால் கேள்வி இதுதான், கர்த்தர் தமது வாக்கை நிறைவேற்றினாரா?

இறுதியாக, நடந்தது என்னவென்று நாம் காணும் முன்னர், தனது பரலோகத் தந்தையிடம் செல்லுவதற்கு முன்பு அப்போஸ்தலர்களிடம் நமது கர்த்தர் அறிவித்தவைகளைத் தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். **என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார் [லூக்கா 24:49]. லூக்கா, மேலும் தெயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலர்களுக்குப், பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்ட பின்பு, அவர் எடுத்துக் கொள்ளப்பட்ட நாள்**

வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங் குறித்து, முதலாம் பிரபந்தத்தை உண்டு பண்ணினேன். அவர் பாடுபட்ட பின்பு, நாற்பது நாளாகவும் அப்போஸ்தலர்களுக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடன் பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது அவர்களை நோக்கி யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால், நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார் [அப்.1: 1-5]. அதன்பின்பு, இயேசு கூறினார். பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார் [அப்.1:8]. இந்த அறிக்கைகளிலிருந்து நிச்சயமாக இயேசு கிறிஸ்துவே பரிசுத்த ஆவியின் வல்லமையை அப்போஸ்தலர்களுக்கு வாக்களித்தார் என்பதை நாம் காண முடியும். அது உண்மையாக இருக்கும்போது, அவ்வல்லமையைப் பெற்றவர்கள் யார்? அப்போஸ்தலர்கள் மட்டுமா அல்லது பொதுவில் எல்லா விசுவாசிகளுமா?

இப்போது, அப்போஸ்தலர் நடபடிகள் 2ம் அதிகாரத்திற்குத் திருப்பிக்கொண்டு என்னோடு வாசியுங்கள். பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும், அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லோரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள் [அப்.2 : 1-4]. அந்த அதிகாரத்தைப் படிக்கும்போது அப்போஸ்தலர்கள் திரளான மக்களிடையே போதித்துக் கொண்டிருந்ததையும், அதிலே மூவாயிரம் பேர் வரை நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர் என்றும் பார்க்கிறோம். தொடர்ந்து நாம் வாசிக்கையில் எல்லாருக்கும் பயமுண்டாயிற்று அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டது [அப்.2:43] என உள்ளது.

ஆகவே, திருமுழுக்கு அளவிலான பரிசுத்த ஆவியை அப்போஸ்தலர்கள் மட்டுமே பெற்றுக்கொண்டனர் என்பதே இதன் முடிவாகும். ஆனால், அவர்கள் 12 பேர் மட்டுமே இருந்தனர்; செய்ய வேண்டிய பணியோ ஏராளமாக இருந்தது. அப்போஸ்தலர் நடபடிகள் 6–ம் அதிகாரத்தில், பரிசுத்த ஆவியும், ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழு பேரை சீடர்களிலிருந்து தெரிந்துகொண்டு அப்போஸ்தலர்கள் ஜெபம்பண்ணி அவர்கள் மேல் கைகளை வைத்து, பரிசுத்த ஆவியின் வல்லமையை அவர்களுக்கு அளித்தனர் என்று காண்கிறோம். ஆனால், இந்த மனிதர்கள் ஏற்கனவே பரிசுத்த ஆவியால் நிறைந்திருந்தினர் என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். ஏற்கனவே, அவர்கள் பெற்றுக்கொண்டதற்கும், கைகளை வைத்துப் பரிசுத்த ஆவியின் அளவைப் பெற்றுக்கொண்டதற்கும் என்ன வித்தியாசம்? இந்த ஏழு பேரும் முன்பு பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருக்கவில்லை. ஆனால், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தபோது, அற்புத அடையாளங்களைச் செய்யமுடியாத அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தனர்.

கைகளை வைக்கும் அளவிலான பரிசுத்த ஆவியை அப்போஸ்தலர்கள் மட்டுமே அவர்களுக்குக் கொடுக்க முடிந்தது. அது ஒரு அற்புதங்கள் செய்யும் அளவிலான பரிசுத்த ஆவியாகும். இறுதியாக, இன்று எல்லோரும் ஒரே அளவிலான பரிசுத்த ஆவியை மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அது கர்த்தருக்குக் கீழ்ப்படியும் எல்லாருக்கும் கொடுக்கப்படும் பரிசுத்த ஆவி. ✝

---

## நம் இரட்சகரை சிலுவையிலறைந்த பாவங்கள்

**அறியாமை என்னும் பாவம்** (அப். 3 : 17)

**பகை என்னும் பாவம்** (மத்தேயு 7 : 20)

**பொறாமை என்னும் பாவம்** (மாற்கு 5 : 11)

**அவிசுவாசம் என்னும் பாவம்** (யோவான் 1 : 11)

**சுயநலம் என்னும் பாவம்** (மத்தேயு 26 : 14 – 16)

# மாய்மாலமான வாழ்வு

# Hypocritical Life

*P.C. Philemon Rajah*

ஆண்டவர் இயேசு தனது மலைப்பிரசங்கத்தில் மாய்மாலமான வாழ்க்கை வாழ்ந்த யூதமதத் தலைவர்களையும், முன்னோடிகளையும் கடிந்து பேசுகிறதை மத்தேயு 7:1-5 வசனங்களில் நாம் வாசிக்க முடியும். இந்த மாய்மாலமான வாழ்வு எப்படிப்பட்டது என்பதையும் ஆண்டவரை விசுவாசிக்கிற நாம் வாழ வேண்டிய வாழ்வைப் பற்றியும் அறிந்து கொள்வோம்.

### 1. மாய்மாலம் என்றால் என்ன?

மத்தேயு 7:5 மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகை பார்ப்பாய். ஆண்டவர் யூத மத முன்னோடிகளை மாயக்காரனே எனச் சாடுகிறார். இதன் பொருள் நடிப்பவர், பாசாங்கு செய்பவர், போலியானவர் மற்றும் ஏமாற்றுபவர் என அர்த்தப்படுகிறது. இது உண்மையற்ற நேர்மையற்ற தரமற்ற வாழ்வினைக் குறிக்கிறது.

### 2. மாய்மாலத்தின் நான்கு தன்மைகள்

சிறையிலிருந்து மீந்து வந்த யூத மக்களின் மாய்மாலமான வாழ்வை மல்கியா தீர்க்கதரிசி தத்ரூபமாக நமக்கு வெளிப் படுத்துகிறார். மல்கியா 2:9-13 வரை உள்ள வசனப்பகுதியில் நாம் அதை வாசிக்க முடியும்.

#### அ. யூதர்களின் மாய்மாலம், அவர்களது ஆவிக்குரிய புரிதலை மூடி மறைத்தது.

மல்கியா 2:9 நீங்கள் என் வழிகளைக் கைக்கொள்ளாமல் வேதத்தைக் குறித்துப் பட்சபாதம் பண்ணினபடியினால், நானும் உங்களை எல்லா ஜனத்துக்கு முன்பாகவும் அற்பரும் நீசருமாக்கினேன்.

யூதர்கள் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவில்லை. இப்படிப்பட்ட அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்வின் நிலைபற்றிய சரியான புரிதலுமின்றி தங்கள் தவறைப் (கீழ்ப்படியாமை) புரிந்து

கொள்ளாமல் வாழ்ந்தனர். ஆகையால், மல்கியா தீர்க்கதரிசியின் வாயிலாக தேவன் அவர்களை மிகவும் கடுமையாகச் சாடி குற்றம் சாட்டுகிறார்.

எரேமியா 9:8 **அவர்கள் நாவு கூர்மையாக்கப்பட்ட அம்பு, அது கபடம் பேசுகிறது; அவனவன் தன் தன் அயலானோடே தன் தன் வாயினாலே சமாதானமாய் பேசுகிறான். ஆனாலும் தன் உள்ளத்திலே அவனுக்குப் பதிவிடை வைக்கிறான்.** வெளிப்படையாக நன்றாக சிரித்துப் பேசிவிட்டு, உள்ளத்திலோ அவனுக்குப் பதிவிடை [தீங்கை] வைக்கின்றனர். **உள் ஒன்று வைத்து, புறம் ஒன்று பேசுவோர் உறவு கலவாமை வேண்டும்** என முது மொழி சொல்லப்பட்டுள்ளது. ஒருவரைப் பற்றி அவருக்கு முன்னும் அவருக்கு பின்னும் புரட்டிப் பேசுவது என்பது துரோகச் (Treachery) செயலாகும். இது சாத்தானின் தந்திர வலையாகும். இது **சொல்வது ஒன்று, செய்வது ஒன்று** என முரண்பாடாகச் செயல்படுவதாகும். இப்படிப்பட்டவர்களை விட்டு விலகும்படி பவுல் தீமோத்தேயுவிற்கு எச்சரிக்கை கொடுக்கிறார்.

**ஆ. யூதர்களின் மாய்மால நடைமுறை, அவர்களின் பரிசுத்தத்தை அழித்து விட்டது.**

தேவனுடைய பிள்ளைகள், உலகத்தாரை மணப்பது என்பது அருவருப்பானதாகும்; அது தேவனுக்குச் செய்கிற துரோகமாகவும், பரிசுத்தத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்குவதாகவும் இருக்கிறது. இஸ்ரவேலர்கள், இஸ்ரவேலரல்லாதவர்களைத் திருமணம் செய்ய நியாயப்பிரமாணத்தின்படி தடை செய்யப்பட்டது [உபா.7:3] மேலும் அதின் அபாயங்களும் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. யாத். 34:16 **அவர்கள் குமாரத்திகளில் உன் குமாரருக்குப் பெண்களைக் கொள்ளுவாய்; அவர்கள் குமாரத்திகள் தங்கள் தேவர்களை உன் குமாரரையும் தங்கள் தேவர்களைச் சோரமார்க்கமாய்ப் பின்பற்றும்படி செய்வார்கள்.** புதிய ஏற்பாட்டிலும் கிறிஸ்துவின் இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்பட்டு, இரட்சிக்கப்பட்ட ஒருவர், இரட்சிக்கப்படாத ஒருவரை திருமணம் செய்வது என்பது தடை செய்யப்பட்டதாகவே இருக்கிறது [1கொரி.6:14-18].

மாய்மாலம் என்பது கீழ்ப்படிதலை எப்பொழுதும் தடுக்கின்றதாயிருக்கிறது [எசே. 5:11] ஆண்டவர் இயேசுவும் இப்படிப்பட்ட செயல்களைச் செய்பவர்களை மிகவும் எதிர்த்தார்.

**இ. மாய்மால வாழ்வு தேவ தண்டனையைப் பெற்றுத் தருகின்றது.**

இரட்டை மனம், மாய்மாலம், நடிப்பு, துன்மார்க்கம், எப்பொழுதுமே தேவ ஆசீர்வாதத்தைத் தடை செய்து, தேவ தண்டனையை வரவழைக்கிறது (கலா.6:7). **மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ண வொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.** இயற்கையின் நியதியைப் பற்றி வேதாகமம் பேசுகிறது, மனிதன் எதை விதைக்கிறானோ அதை அறுப்பான். மாய்மாலத்தை போலியை விதைப்பவர்கள் தண்டனையை அறுப்பார்கள்.

உண்மையானவர்கள் தேவனாலே காக்கப்படுவது எவ்வளவு நிச்சயமான ஒன்றோ, அதேப்போல, மாய்மாலக்காரர்கள் தண்டிக்கப்படுவதும் நிச்சயம். தேவன் மனிதனைத் தண்டிக்கும்படியாகப் படைக்கவில்லை என்றாலும், அவர்கள் தாங்கள் விதைத்த போலியான வாழ்வின் பலனை அனுபவிக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தங்களைத் தாங்களே தள்ளிக் கொள்கின்றனர்.

**ஈ. மாய்மாலக்காரர்களின் நிலைப்பாடு ஆபத்தானதாக இருக்கிறது.**

நாம் ஆவிக்குரிய வகையில் சர்வ வல்ல தேவனுக்கும், சரீர ரீதியில் தேவனால் படைக்கப்பட்ட ஆதாமிற்கும் என ஒரே தகப்பனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம். ஆகையால் துரோகத்தைத் துரத்தி விடுவதற்குப் பதில், அது இரகசியமாக இருக்கிறபடியினால், அதைத் தொடர்கிறவர்களாக இருப்பது என்பது அபத்தமானதாக இருக்கிறது. ரோமர் 2:1 **ஆகையால், மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி, போக்குச் சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத் தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய்.** நான் ஒருவர் செய்த தவறை அவருக்கு உணர்த்தி அவரை குற்றவாளியாகத் தீர்க்கிறேன். அதே தவறை நான் செய்யும் பட்சத்தில் நான் குற்றப்படுத்திய நபரோ, அலல்து மற்றவர்களோ அல்ல, என்னை நானே குற்றவாளியாகத் தீர்க்கிறேன். இங்கே, பிரச்சனை மற்றவர் தவறை உணர்த்துவது அல்ல, அதே தவறை நான் செய்வதுதான்!

குற்றத்தை உணர்த்துவது, அதாவது குற்றப்படுத்துவது எளிது, வாழ்வது மிகக் கடினம் என யாராவது சொன்னால், அது மிகவும் அபத்தமானதாகும். ஏனெனில், அவர்கள் அந்த குற்றத்தைச் செய்யாமல், இன்னும் வாழப் பழகவில்லையே தவிர, அது கடினமான ஒன்றல்ல. இயேசு என் நுகம் இலகுவானது என்கிறார் [மத்.11:28-30], பாவம் செய்யாமல் வாழ்வது என்பது சாத்தியமாகத்தான் இருக்கிறது. ஏனெனில், நாம் வாழ்கின்ற இந்தப் பாவ உலகில் அநேக தேவனுடைய பிள்ளைகள் வாழ்ந்து நமக்கு சாட்சிகளாக இருக்கின்றனர் [எபி.11].

வெறும் இம்மைக்குரிய விஷயங்களுக்காக மட்டுமே தேவனை சார்ந்திருந்தாலும், தேவனை தேடுவது என்பதும் மிகவும் அபத்தமானதாகும்.

மனந்திரும்புதலில் நிலைத்து நின்று மற்றும் கனி கொடுக்க வேண்டும். மாறாக, பாவத்திற்கு மீண்டும் மீண்டும் திரும்புவது என்பது அபத்தமானதாகும். திருந்திவிட்டால் அதற்கு ஏற்ற வாழ்வை வாழ வேண்டும்; பழைய வாழ்வைத் தொடரக்கூடாது. மத்தேயு 3:8 **மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்.** நம்முடைய வாழ்க்கையினால், அதாவது, நாம் வாழ்கின்ற முறையினால் தேவனுக்கு மகிமையைத் தர வேண்டும். ✝

## மனதின் பாவங்கள்

**தீமையான எண்ணங்களைப்பற்றி கேடான மனது**
**(மத்தேயு 5 : 27,28)**

**சுயமதிப்பைப்பற்றி மேட்டிமையான மனது**
**(ரோமர் 12 : 16)**

**அவிசுவாசத்தைப்பற்றி சந்தேகிக்கும் மனது**
**(லூக்கா 24 : 38)**

**கவலைகளைப்பற்றி சிந்திக்கும் மனது**
**(லூக்கா 12: 29)**



**பறிக்க நினைக்கும் சுயநலமான மனது**
**(லூக்கா 12 : 17-21 )**

# சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க நான் கடனாளியாயிருக்கிறேன்

## *I Am A Debtor To Preach The Gospel*

*B. Arjunan*

மனிதன் பலவகையில் கடன்பட்டு கடனாளியாகின்றான். அப்போஸ்தலனாகிய பவுல் தன்னை சுவிசேஷ கடனாளி என்று அழைத்து அறிமுகப்படுத்துகிறார். அவர் சுவிசேஷித்தினிமித்தம் யாரிடமாவது கடன் வாங்கி கடனாளியானாரா? அல்லது சுவிசேஷத்தை அறிவிக்காதது ஒரு கடனாக இருக்கிறது என்று கூறுகிறாரா? அவர் சுவிசேஷத்தினிமித்தமாக யாரிடமும் கடன் வாங்கவில்லை. அநேகர் கர்த்தர் நிமித்தமாக இந்தக் கடனை நாங்கள் அடைந்தோம் என்று சொல்லுகிறார்கள். கர்த்தர் எவரையும் கடனாளியாக்க விரும்பவில்லை. அவர் எண்ணிலடங்கா ஆசீர்வாதத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார். ஆகையால், எந்த ஒரு நபரும் கடன்பட வேண்டிய அவசியம் இல்லை. அப்போஸ்தலனாகிய பவுல் இங்கு சொல்லக்கூடிய கடன், சுவிசேஷக்கடன். அவர் அநேகருக்குச் சுவிசேஷத்தை அறிவித்து வந்திருந்தும் இன்னும் நான் இந்த விஷயத்தில் கடனாளியாகவே இருக்கிறேன் என்கிறார். இதுகுறித்து ரோமர்1:14-ல் **கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும், நான் கடனாளியாயிருக்கிறேன்** என்கிறார். கிரேக்கர் எப்படிப்பட்டவர்கள்? ஞானத்தைத் தேடக்கூடியவர்கள். ஞானத்தைத் தேடக்கூடியவர்கள் ஞானமாக இருப்பார்கள் அல்லவா? அப்படிப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டுமென்றால் நமக்கும் ஞானம் அவசியம். அந்த அளவு ஞானமுள்ளவர்களாக இருந்தால்தான் அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்க முடியும். இந்த ஞானவான்களுக்குப் போதிப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல.

வேதம் சொல்லுகிறது; **ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தைத் தேவன் பைத்தியமாக்கவில்லையா?** (1கொரி.1:20). உலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாக இருக்கிறது. அவர் சர்வவியாபி என அறிகிறோம். ஆனால், ஞானத்தைத் தேடுகிறவர்கள் சொற்பஞானத்தைப் பெற்றுக் கொண்டவுடன் தங்களைப் பெரிய ஞானிகளாகவும்,

ஞானவான்களாகவும் எண்ணி மற்றவர்களை அசட்டை பண்ணுவார்கள். அப்படிப்பட்டவர்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்க நாம் அநேக காரியங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. இயேசுவின் பிறப்பையும், அவருடைய மரணத்தையும் அவர்களுக்கு விளக்கமாக எடுத்துச் சொல்ல வேண்டும். பொதுவாக, பள்ளியில் முதலாம் வகுப்பில் உள்ள மாணவர்களுக்கு கற்றுக் கொடுப்பது சுலபம். அதே பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கின்ற மாணவனுக்கு கற்றுக்கொடுப்பது சற்று கடினம். ஏனென்றால், அவன் பாடம் சம்பந்தமாக அநேக கேள்விகள் கேட்கக்கூடும். முதலாம் வகுப்பில் உள்ள மாணவனுக்கு நாம் கற்றுக் கொடுப்பதே பாடம், அதை அப்படியே தலையை ஆட்டிக்கொண்டு கேட்பான். ஆனால், பத்தாம் வகுப்பு மாணவன் சற்று தேறியிருப்பதால் அநேகக் கேள்விகளைக் கேட்பான். அதைப்போல, இந்தக் கிரேக்கர்கள் ஞானத்தைத் தேடக்கூடியவர்கள். அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிப்பதில் பவுல் இன்னும் கடனாளியாகவே இருப்பதாக சொல்லுகிறார். அப்படியானால், இன்னும் அநேகருக்கு அவர் சொல்ல வேண்டியவராயிருக்கிறார் என்றும் அறிகிறோம். நாமும் நம்மைச்சுற்றியுள்ள மக்களுக்கு சுவிசேஷம் அறிவிப்பதில் கடனாளியாகவே இருக்கிறோம்.

பவுல் அந்நியர்களுக்கும் கடனாளி என்கிறார். அந்நியர்கள் யார் என்று நாம் பார்க்கும்போது, தேவனை ஏற்றுக்கொள்ளாதவர்கள் எல்லோருமே அந்நியர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய விருப்பப்படி தேவனை ஆராதிக்கக்கூடியவர்கள் அவர்களுக்கும் உன்னதமான சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும். இது ஆண்டவருடைய கட்டளையாயிருக்கிறது. ஆகையால், சீஷர்கள் உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தை அறிவித்தனர். ஒருமுறை யூதர்கள் மத்தியில் பவுலும் பர்னபாவும் ஊழியம் செய்த வேளையில் யூதர்கள் ஜனக்கூட்டங்களைக் கண்டபோது பொறாமையினால் நிறைந்து பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு எதிரியாய்ப் பேசி, விரோதித்துத் தூஷித்தார்கள். **அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்லவேண்டியதாயிருந்தது. நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம் என்றார்கள்** [அப்.13:46]. இப்படி, சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருந்த யூதர்களைவிட்டு புறதேசங்களுக்கும் கடந்து சென்று சுவிசேஷத்தை அறிவித்தார்கள். மேலும், **நீர் பூமியின் கடைசி பரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை புற ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற தேவ வாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிற படியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள்** [அப்.13:47]. சுவிசேஷத்தை அறிவிப்பதில் பவுல் வெட்கப்படாத ஒரு கிறிஸ்தவனாக இருந்து

அறிவித்துக் கொண்டிருந்தார். அது என்மேல் விழுந்த கடமையாக இருக்கிறதென்றும், அதற்கு நான் கடனாளி என்றும் சொல்லிக் கொண்டார். இது, உலக முழுமைக்கும் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு மாபெரும் இரட்சிப்பின் சுவிசேஷ நற்செய்தியாகும். இந்த சுவிசேஷ நற்செய்தியை அசட்டை பண்ணாமல் அதற்குக் கீழ்படிவாயானால் அது உன்னை இரட்சிக்கும். உன் குடும்பத்திற்கும் அது இரட்சிப்பைக் கொண்டு வரும்.

இந்த சுவிசேஷத்தைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் இதை அறிவிப்பதில் கடனாளிகளாகவே இருக்கிறோம். நலமான காரியம் ஒன்று நம் நாட்டில் நடக்கிறது என்றால் அதை அப்படியே மறைத்து வைப்போமா? உடனே எல்லோருக்கும் அதை அறிவிப்போம் அல்லவா? அதைக்காட்டிலும் மேலானது இந்த சுவிசேஷம். உலகத்தில் உள்ள எல்லா நற்செய்திகளும் உலகத்திற்குரியவைகளே. ஆனால், கர்த்தருடைய மரணம் அடக்கம் உயிர்த்தெழுதலின் செய்தி உன்னதத்திற்குக் கொண்டு செல்லக்கூடியது. ஆகையால், இது உலகத்திற்கும் மேற்பட்ட ஒரு உன்னதமான செய்தியாகும். இந்த சுவிசேஷத்தைப் பாதரட்சைகளைப்போல உங்கள் கால்களில் தொடுத்துக்கொண்டு, நீங்கள் செல்லும் இடமெங்கும் இச்செய்தியை அறிவிக்க வேண்டும். இப்பணி ஒரு உன்னதமான பணியாக இருக்கிறது. சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என வேதம் சொல்லுகிறது.

பவுல் ஞானிகளுக்கும் கடனாளி என்கிறார். ஞானவான்களுக்கு உபதேசம் பண்ணுவது சற்று கடினமான காரியம் தான். அவர்கள் உலக ஞானத்தைப் பெற்று இருக்கிறார்கள். வேதம் **ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து புத்தியை அவமாக்குவேன் என்று எழுதியிருக்கிறது** (1கொரி.1:19). நாம் முன்னமே படித்தபடியாக தேவனுடைய பார்வையில் ஞானம் என்பது பைத்தியமாயிருக்கிறது.ஞானமாக செய்துவிட்டோம் என்று அநேகர் நினைப்பார்கள். ஆனால், அந்த ஞானம் சில காலங்களுக்குப்பின் ஒன்றுமில்லாது போகிறது. இதை நம்முடைய கண்களால் காணமுடிகிறது. நம்முடைய முற்பிதாக்களுடைய அரண்மனைகளை நோக்கிப்பாருங்கள். அந்த நாட்களில் அவைகள் எவ்வளவு கெம்பீரமாகக் கட்டப்பட்டிருந்திருக்கும். ஆனால், அவைகளின் தற்போதைய நிலைமையை எண்ணிப்பார்க்கும்போது ஒன்றுமில்லாமற் போகிறது. அதேவேளையில், தேவனுடைய சிருஷ்டிப்புகளில் ஒவ்வொன்றையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அவைகள் மாறாதவைகளாகவும், அழியாதவைகளாகவும் இருக்கிறது. அன்று முதல் இன்று வரை சந்திரன் நிலைத்திருக்கிறது. சூரியன் ஒளியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. மேலும், பவுல் குறிப்பிடும்போது; **இயேசு கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கமாகிய என் சுவிசேஷத்தின்படியே உங்களை ஸ்திரப்படுத்த வல்லவரும், தாம் ஒருவரே**

**ஞானமுள்ளவருமாயிருக்கிற தேவனுக்கு இயேசு கிறிஸ்துவின் மூலமாய் என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்** என்று ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதி முடிக்கிறார் [ரோமர் 16:26,27]. இப்படி எண்ணிலடங்கா காரியங்களை, தேவன் ஞானமாய் சிருஷ்டித்திருக்கிறார். அவருடைய ஞானத்திற்கு முன்பாக மனித இனம் எம்மாத்திரம். ஞானத்தை நம்பிக்கொண்டிருக்கிற ஞானிகளுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும். அந்த ஞானத்திலே அவர்கள் கெட்டுப்போய் விடக்கூடாது. ஆகையால், ஞானிகளுக்கும் நான் கடனாளி என்கிறார்.

மூடருக்கும் நான் கடனாளி என்கிறார். மூடர் தேவனுடைய காரியங்களை அசட்டை பண்ணுகிறவர்கள். அவர்களுக்கும் சுவிசேஷம் சொல்லப்பட வேண்டும். அவனோ மூடன், அவனுக்கு சுவிசேஷத்தை அறிவித்தால் அதை அவன் கேட்பானா? அதை அசட்டைபண்ணுவான். பின்பு, அவனுக்கு இரட்சிப்பு உண்டாவது எப்படி? ஆகையால் அப்படிப்பட்டவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கும்படி தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டவர் அப்போஸ்தலனாகிய பவுல். ஒருவரும் கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல. ஆகையால் எல்லோருக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும்.

**பவுலுடைய உறுதியான தீர்மானம் என்ன?**

சுவிசேஷத்தை அறிவிப்பதை தன்னுடைய உயிர்மூச்சாகக் கொண்டிருந்தார். **ஆகையால் ரோமாபுரியிலிருக்கிற உங்களுக்கும் என்னால் இயன்றமட்டும் சுவிசேஷத்தை, பிரசங்கிக்க விரும்புகிறேன்** என்றார் [ரோமர்1:15] சுவிசேஷத்தை அறிவிப்பதினாலே சோர்வுக்கோ, இயலாமைக்கோ இடமில்லை. அது தன்மேல் விழுந்த கடமையாகவே பவுல் எண்ணினார். ஆசியா முழுமைக்கும் சுவிசேஷத்தை முதல் நூற்றாண்டு காலத்தில் அறிவித்த ஒரு மாபெரும் உன்னதமான அப்போஸ்தலன். இவரைப்போல இன்று ஒவ்வொருவரும் சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு அறிவிப்பதில் தன்னைக் கடனாளி என்று சொல்லிக்கொள்ள வேண்டும். சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டிய ஜனங்கள் அதிகமாக இருக்கிறார்கள். பல மொழி பேசுகிறவர்களும், பல இனத்தவர்களும், பலவிதமான பழக்கவழக்கங்களைக் கொண்டவர்களும் நாம் வாழும் இந்தப்பூமியில் இருக்கிறார்கள். அவர்களுக்கும் சுவிசேஷம் சென்றடைய வேண்டும்.

கர்த்தருடைய கட்டளையை நாம் ஒவ்வொருநாளும் நிறைவேற்றப் பாடுபட வேண்டும். உலகத்தில் பலவிதமான காரியங்களில் கர்த்தருடைய பிள்ளைகள் கடனாளிகளாக இருக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுலைப் போல சுவிசேஷக் கடனாளிகளாக உங்களை நிமிர்த்திக் கொள்ளுங்கள். மற்றொன்றிலும் கடன்படாதிருங்கள். கர்த்தர் உங்களுடைய முயற்சியை ஆசீர்வதிக்கும்படியாக ஜெபிக்கிறோம். ✞

# கள்ளனும், கள்ள உபதேசங்களும்

## Thief And The False Doctrines

E.Z. Selvanayagam

தற்காலத்தில் மக்கள் எல்லாவற்றையும் நேர் வழியை விட குறுக்கு வழியில் எளிதில் அடைய முடியும் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். படிக்காமலே பாஸ், உழைக்காமலே ஊதியம், தகுதியில்லாமல் பதவி இப்படி எத்தனையோ.... வர வர விதைக்காமலே அறுவடை செய்ய முடியும் என்று சொன்னால் கூட அதையும் நம்பி ஏற்றுக் கொள்வார்கள் போல் தெரிகிறது.

இம்மாதிரியான சிந்தனையோட்டம் மார்க்க விஷயத்தையும் விட்டு வைக்கவில்லை. மனந்திரும்பாமலேயே இரட்சிப்பு, கர்த்தருடைய சித்தம் செய்யாமலே மோட்சப் பிரவேசம் சாத்தியமா? என்பன போன்ற சிந்தனைகள் மக்கள் மனதிலே நெளிகின்றன. இதை மோப்பம் பிடித்துக்கொண்ட சில பேர்வழிகள் அவைகளை நாங்கள் பெற்றுத் தருகிறோம். அதற்கு நாங்கள்தான் மொத்த விநியோக உரிமையாளர் என்று உத்திரவாதம் அளித்து அவர்களுக்கு ஒரு போலி திருப்தியை ஏற்படுத்தி விட்டு, அதற்கு ஈடாக இழிவான ஆதாயங்களைப் பெற்று, சௌகரியமான வாழ்க்கை நடத்தி உலா வருகின்றனர். அவர்கள் வசதியாக வாழ்வதைப் பற்றி நமக்கு ஒன்றும் பொறாமை இல்லை. ஆனால், அதனால் விளையும் விபரீதங்களை எண்ணும்போது துக்கப்படாமல் இருக்க முடியவில்லை.

பொதுவாகவே, மனந்திரும்பின வாழ்க்கையை மேற்கொள்ள முடியாதவர்களும் ஆன்மீக விஷயங்களில் அக்கறையற்றவர்களும் இப்படிப்பட்ட பேர்வழிகளின் அரைகுறைப் போதனைகளைக் கேட்டு, தேவ வசனத்தை மேலும் அசட்டை செய்கிற நிலைமை உருவாகிறது.

உதாரணமாக, ஞானஸ்நானம் இரட்சிப்புக்கு அவசியம் என்ற காரியத்தை விளக்குவதற்கு நாம் தேவ வசனங்களை ஆதாரமாக எடுத்து வைக்கும் பொழுது, இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட கள்ளன் எந்த ஞானஸ்நானம் பெற்றான்? அவனை இன்று நீ என்னுடனே கூட பிரதீசிலிருப்பாய் என்று ஆண்டவர் ஏற்றுக் கொள்ளவில்லையா? என்று எதிர்க் கேள்வி போட்டு விட்டு, நம்முடைய

பதிலுக்குக்கூடக் காத்திராமல் விருட்டென்று எழுந்து சென்றுவிடுவர். மேற்படி நபர்கள், சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து ஏதாவது ஒரு வகை ஆதாயத்தை எதிர்பார்த்து முகஸ்துதிக்காக எதையாவது சொல்லி வைத்திருப்பார்கள். அதை அவர்கள் குரங்குப் பிடியாகப் பிடித்துக் கொண்டு, நாம் எடுத்து வைக்கிற எந்த நியாயத்தையும் ஏற்றுக்கொள்ள மறுத்து விடுவார்கள்.

அந்த நபருடைய விசுவாசக் கப்பலை கவிழ்த்தது எது? இரட்சிப்புக்கு விசுவாசம் மட்டுமே போதும், கள்ளன் ஞானஸ்நானம் இல்லாமலே இரட்சிக்கப்பட்டது போலே நாமும் ஞானஸ்நானம் இன்றி இரட்சிப்படையலாம் என்ற தவறான உபதேசம் தான். இயேசு கிறிஸ்து விரும்பினால் யாரையும், எப்படியும் இரட்சிக்க முடியும் என்பதில் நமக்கு ஒன்றும் சந்தேகம் கிடையாது. சொல்லப்போனால், விசுவாசம் இல்லாதவரைக் கூட அவரால் இரட்சிக்க முடியும். மத்தேயு ஒன்பதாம் அதிகாரத்திலும், மாற்கு இரண்டாம் அதிகாரத்திலும் திமிர்வாத நோயாளி ஒருவனுடைய பாவங்களை மன்னித்த சம்பவம் ஒன்றை வாசிக்கிறோம் [மத். 9:2; மாற். 2:1-5]. அந்த நோயாளிக்கு விசுவாசம் இருந்ததா? இல்லையா? தெரியவில்லை. ஆனால், கொண்டு வந்தவர்களுடைய விசுவாசத்தைப் பாராட்டி நோயாளியின் பாவத்தை மன்னித்ததாக வசனங்கள் கூறுகின்றன. அப்படியானால், ஒருவருக்காக மற்றவர் விசுவாசித்தால்கூடப் போதும் என்று சொல்லலாமா? சிந்தியுங்கள்.

மாற்கு 16:16. மற்றும் எபி 11:6. ஆகிய வசனங்களைக் கவனியுங்கள். இரட்சிக்கப்படுவதற்கு ஒவ்வொருவரிடத்திலும் விசுவாசம் காணப்பட வேண்டும் என்று கூறுகிறது. ஆனால், திமிர்வாதக்காரனிடத்தில் விசுவாசம் இருந்ததோ இல்லையோ அவனை இரட்சித்திருக்கிறார். அந்த சம்பவத்தை எடுத்துக்காட்டாக வைத்துக்கொண்டு நான் விசுவாசிக்க மாட்டேன். ஆனால், நான் இரட்சிப்படைய வேண்டும் என்று வாதிட முடியுமா? கூறப்பட்டுள்ள சம்பவங்களைத் தொகுத்து அதன் முடிவான கருத்து என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும்.

**கள்ளன் பழைய உடன்படிக்கையின் கீழ் வாழ்ந்தது மரித்தான்:**

கள்ளன் பழைய உடன்படிக்கையின் கீழ் வாழ்ந்தது மரித்தான். இயேசு மரிக்கும் வரையில் அந்த உடன்படிக்கை அமுலில் இருந்தது. புதிய ஏற்பாடு அமுலுக்கு வருவதற்கு இயேசு மரித்தாக வேண்டும். அதைப் பற்றிய விளக்கத்தை எபி 9: 15-17. வசனப்பகுதியில் பார்க்கலாம். இரட்சிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் தேவை என்ற கட்டளையை இயேசு உயிரோடெழுந்த பிறகு தான் கொடுத்தார்.

[மத். 28:18-20; மாற்கு 16:15,16 அப். 2:38]. ஆகவே, பழைய உடன் படிக்கையின் காலத்தில் வாழ்ந்த கள்ளனுடைய இரட்சிப்பு, புதிய உடன்படிக்கையின் கீழ் வாழ்கின்ற நமக்குப் பொருந்தாது. நாம், இயேசு கிறிஸ்துவின் கட்டளையின்படி விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றாலே இரட்சிப்பை அடைய முடியும்.

சரி, இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியம் என்கிறீர்களே! அதை நான் சிறு குழந்தையாக இருக்கும்போதே பெற்றுக் கொண்டேன். பின்னர் அதை உறுதி செய்து திடப்படுத்துதலும் பெற்றிருக்கிறேன் என்று வாதம் செய்வர். தர்மசங்கடமான நிலை, பிசாசு என்னென்ன மாதிரியான தடைக் கற்களை வழி நெடுக வைத்திருக்கிறான் பாருங்கள். மாற்கு 16:15, 16-ல் **விசுவாசித்து** என்று கூறி, அப். 2: 38-ல் **மனந்திரும்பி** என்பதையும் சேர்க்கப்பட்டிருப்பதை நீங்களே உங்கள் வேதாகமத்தை எடுத்து வாசித்துப் பாருங்கள்.

ஒரு கேள்வி? சிறு குழந்தைக்கு பரலோகத்தின் இரகசியங்களைச் சொல்லி விசுவாசிக்க வைக்க முடியுமா? அதற்குத் தானே திடப்படுத்துதல் என்று ஓர் விளக்கம் வருகிறது. முன்னொரு காலத்தில் நமது நாட்டில் பால்ய விவாகம் என்ற ஒரு முறை இருந்தது. அதையே தவறு என்று சட்டம் இயற்றித் தடுத்து விட்டனர். நாம் இன்னும் அதே போன்ற கஷ்டத்தை ஆன்மீக வாழ்வில் விளைவிக்கும் குழந்தை ஞானஸ்நானத்தை இன்னும் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம். அதற்கு எங்கே முன் உதாரணம்? எங்கே பொருள்? முன் உதாரணமும் இல்லாத அர்த்தமும் இல்லாத ஒன்றை வெளிச்சத்தின் பிள்ளைகள் என்று சொல்லிக்கொள்ளுகிற நாம் இன்னும் செய்து கொண்டிருக்கலாமா? தவறு செய்து கொண்டிருந்தோம், அதைப்பற்றி நமக்கு வருத்தம் இல்லை. ஆனால், தவறு என்று தெரிந்த பிறகும் அதை விட்டு விடாமல் சப்பைக் கட்டுக் கட்டிக் கொண்டிருப்பது தேவனுக்குப் பிரியமாயிருக்குமா? [அப். 17:30].

ஒருவேளை, குழந்தைகள் கிறிஸ்தவத்தை மறுதலித்து விடக் கூடாது, ஆகவே அவர்களை குழந்தைப் பருவத்திலிருந்தே பழக்குவிக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள் என்று நம்புகிறேன். உங்கள் பிள்ளைப் பாசமும், கிறிஸ்தவப் பற்றும் தேவ சித்தத்துக்கு எதிராகச் செயல்படும்படி உங்களை ஏவுகிறதைக் கவனிக்க வில்லையா? எது முக்கியம்? தேவனுக்குக் கீழ்ப்படிவதா? நம்முடைய பாரம்பரிய வைராக்கியமா? [1 சாமு. 15:22,23. ஏசாயா 66:2; மத் 15:8,9].

அதையும் தாண்டி வருவோமானால் இன்னும் ஒரு பாராங்கல். தெளித்தலும், ஊற்றுதலும் கூட ஞானஸ்நானம் தான்; ஆனால் இதைப்பற்றி எங்கு தேடி வாசித்தாலும் இல்லவே இல்லை. ஆனால், இயேசுவின் ஞானஸ்நானத்திலிருந்து, கொடுக்கப்பட்ட அனைத்து ஞானஸ்நானமும் முழுக்கு என்றுதான் வேதாகமம் கூறுகிறது. இருந்தபோதிலும், இரண்டாயிரம் ஆண்டுகளாகியும் அந்தத் தவறைத் திருத்திக்கொள்ள விரும்பாத ஆயிரக்கணக்கான மக்கள் தாங்கள் திருமுழுக்குப் பெற்றுவிட்டோம் என்றே எண்ணிக் கொண்டிருக்கின்றனர். அறியாமை, நிர்விசாரம் என்னும் ஆயுதங்களைப் பிசாசு எவ்வளவு திறமையாகப் பயன்படுத்துகிறான் என்று நினைக்கும் போது அவனுடைய ஆற்றலை வியக்காமல் இருக்க முடியாது.

1. மூல மொழியாகிய கிரேக்கத்தில் [பாப்டிஸோ] என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அகராதியில் அதன் அர்த்தம் மூழ்கடித்தல், அமிழ்த்துதல், என்று கொள்ளலாம்.

2. யோவான் தண்ணீர் மிகுதியாயிருந்த இடத்தில் ஞானஸ்நானம் கொடுத்து வந்தான் [யோவான் 3:23].

3. ஞானஸ்நானம் – அடக்கம் [ரோமர் 6:3–5].

4. மறு ஜென்ம முழுக்கு [தீத்து 3:5]

எத்தனையோ தவறான உபதேசங்கள் மெல்ல மெல்ல முதலாம் நூற்றாண்டு மெய்க் கிறிஸ்தவத்துக்குள் நுழைந்து கிறிஸ்தவத்தின் தூய்மையைக் கெடுத்து மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட பல்வேறு மதங்களில் இதுவும் ஒன்று என்ற நிலைக்குத் தாழ்த்தி விட்டது.

நண்பர்களே! எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று பவுல் கூறிய அறிவுரை வசனத்தை [1தெச. 5:21] மனோவாஞ்சையாய் ஏற்றுக்கொண்டு தவறுகளைக் களைந்தெறிவோம். இதில் வெட்கப்பட ஒன்றுமில்லை. சத்துருவாகிய சாத்தான், மிகத் தந்திரமும், அனுபவமுள்ள எதிரி, நம்மைப் பல விதத்திலும் ஏமாற்றி வஞ்சித்து விடுகிறான் என்பது ஆண்டவருக்குத் தெரியும். ஆகவே, நாம் உண்மையைத் தெரிந்துகொண்டு அவரிடத்திற்கு எப்பொழுது திரும்பி வந்தாலும் நேசக்கரம் நீட்டி நம்மை ஏற்றுக்கொள்வார். அப்போஸ்தலர்களுடைய உபதேசங்களை மட்டுமே கைக்கொண்டு, மனித ஞானத்தால் கறைப்பட்டிருக்கிற கிறிஸ்தவத்தைத் தூய்மைப்படுத்துவோம். வேதம் விளம்பினதை விவரித்துச் சொல்வோம். வேதம் விளம்பாததற்கு உடன்படவே மாட்டோம் என்று சூளுரைத்து ஒன்றுபடுவோம். ✝

# கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாயிருப்போம்.

## Let's have mind of Christ

*Benny Martin*

இந்த உலகத்திலே நாம் எல்லா வகையான பிரச்சனைகளையும் பார்க்கிறோம். உதாரணமாக, பகை, போர், கொலைகள், கருக்கலைப்பு, பாலியல் பலாத்காரங்கள், சமுதாயப் பிண்ணனியை அடிப்படையாக வைத்து பட்சபாதம் காட்டுதல், வியாபாரங்களில் ஏமாற்று, மோசடி, திருட்டுப் போன்ற காரியங்கள் இந்த உலகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதுபோன்ற காரியங்கள் நம்மை அதிகமாக துக்கப்படுத்துகின்றன. இவைகளின் முடிவைக் காண நாம் விரும்புகிறோம். ஒருவேளை, நாம் இந்த உலகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கும் காரியங்களைப்போல நம் கிறிஸ்தவர்கள் மத்தியில் நடைபெறுவதில்லை என்று நினைக்கத் தோன்றும். ஆனால், இதைப்பற்றி நீங்கள் ஆழமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று உங்களை நான் உற்சாகப்படுத்துகிறேன். உலகம் முழுவதையும் நாம் பார்க்கும் போது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையை பிரிவினை, மாய மாலம், கள்ள உபதேசங்கள், கிறிஸ்தவர்கள் உலகத்தாரைப் போன்று வாழ்க்கை நடத்துதல், பொய், ஏமாற்று, சபை காரியங்களில் ஈடுபாடின்மை போன்ற காரியங்கள் சீரழித்து வருகின்றன.

மேலும், இன்றைய நாட்களில் அநேக கிறிஸ்தவர்களின் இல்லங்களில் வேத வாசிப்பும், ஜெபமும் கிடையாது. அதுமாத்திரமல்லாமல் கிறிஸ்தவர்கள் அனுதினமும் தங்கள் குழந்தைகளுக்கு வேதாகமத்தைப் போதிப்பதில்லை. இன்னும் அநேக கிறிஸ்தவர்கள் தேவனையும் அவருடைய ராஜ்ஜியத்தையும் விட, அதிகமாக உலகப் பொருட்களை நேசிப்பதும், தேவனுடைய ராஜ்யம் விரிவடைவதற்காக கொடுக்க வேண்டிய அளவிற்கு காணிக்கைகளைக் கொடுக்காமல் இருப்பதுமாய் இருக்கிறார்கள்.

கிறிஸ்தவர்கள் மத்தியில் நடைபெறும் இதுபோன்ற காரியங்கள் நம்மை அதிகமாகத் துக்கப்படுத்த வேண்டும். சபையிலே இது போன்ற காரியங்களைக் களைந்தெறிய நாம் பாடுபடவேண்டும். இது போன்ற பிரச்சனைகள் எல்லாம் உலகத்திலும், சபையிலும் ஏன் காணப்படுகின்றன? அநேகப் பிரச்சனைகள் ஜனங்கள் சரியாக சிந்திக்காமல் இருப்பதால் தான் ஏற்படுகின்றன. நாம் எப்படிப்பட்ட சிந்தையுடையவர்களாய் இருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ அப்படி சிந்தியாமல் இருப்பதால் அநேக பிரச்சனைகளை நாம் சந்திக்கிறோம். உலகத்தில் இருப்பவர்கள் மாம்சப் பிரகாரமாகச் சிந்திக்கிறார்கள். இன்றைய நாட்களில் அநேக விசுவாசிகள் உலகத்தில் உள்ளவர்களைப் போல் சிந்திக்கிறார்கள். அநேக கிறிஸ்தவர்கள் எல்லோரும் இப்படித்தான் நினைக்கிறார்கள், சொல்கிறார்கள், செய்கிறார்கள் என்றெல்லாம் பேசக்கேட்டிருக்கிறோம்.

பிரியமானவர்களே! நாம் இப்படித்தான் சிந்திக்க, பேச, செயல்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரா? இந்தக் கேள்விகளுக்கு வேத வசனங்களின் துணைகொண்டு நான் பதிலளிக்க விரும்புகிறேன். ரோமர் 12:22 ல் நீங்கள் இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்.... பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் என்று நாம் வாசிக்கிறோம். அதாவது, தேவன் நாம் இந்த உலகத்தின் மக்களிலிருந்து வித்தியாசமாயிருக்க வேண்டும் என்று விரும்புகிறார். நாம் இந்த உலகத்திலிருந்து வித்தியாசமாயிருக்க வேண்டுமென்றால், நீங்களும், நானும் வித்தியாசமாயிருக்க வேண்டும். நாம் உயிர்வாழ தேவன் இந்த உலகத்தைத் தான் நமக்குத் தந்திருக்கிறார். ஆயினும், நாம் கிறிஸ்தவர்கள் என்ற தனித்தன்மையை இந்த உலகத்தில் பதிக்க வேண்டும். இது நாம் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாய் இருந்தால் சாத்தியமாகும். பிலிப்பியர் 2:5-ல் கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது என்று வாசிக்கிறோம். இதன் அர்த்தம் என்னவென்றால் நாம் கிறிஸ்துவைப் போலவே சிந்திக்க வேண்டும். அவருடைய உணர்வுகளைக் கொண்டிருக்க வேண்டும். அவரைப் போலவே நோக்கம் உடையவர்களாய் இருக்க வேண்டும். இது தேவனிடத்திலிருந்து நமக்கான கட்டளையாயிருக்கிறது.

**கிறிஸ்துவின் சிந்தையை எப்படி வளர்த்துக் கொள்வது?**

முதலாவது, கிறிஸ்துவைப்போல சிந்திக்க நமக்குத் தீவிரமான, உண்மையான ஆசை இருக்க வேண்டும், நம்முடைய மனதை நாம் அடக்க வேண்டும், அவருடைய வார்த்தைகளை நாம்

தியானிக்க வேண்டும். நம் மனதை இயேசுவின் வார்த்தைகளால் நிரப்ப வேண்டும். சரி, அடுத்ததாக கிறிஸ்துவின் சிந்தையின் தன்மைகளைப் பார்ப்போம்.

**I. தாழ்மை:**

**அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார்** [பிலிப்பியர் 2:6,7]. நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்து தாழ்மைக்கு சிறந்த முதன்மாதிரியாக இருக்கிறார். பெருமையும், கர்வமும் பிடித்த இந்த உலகத்தில் ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாகிய இயேசு தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். நாமெல்லாரும் இயேசு கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்ற கட்டளை பெற்றிருக்கிறோம். இந்தப் பெருமையானது கர்த்தர் வெறுக்கும் காரியங்களில் ஒன்றாக இருக்கிறது. மனமேட்டிமை உள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன் [நீதிமொழிகள் 16:5].

**II. அன்பு:**

**அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்** [1யோவான் 4:8]. அன்பான தேவனை பெற்றுக் கொண்டிருக்கிற நாம் அன்பிலே குறைவுள்ளவர்களாயிருக்கிறோம். முன்பு ஒரு காலத்தில் கிறிஸ்தவர்கள் அன்புக்குப் பேர்போனவர்கள். நான் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். ஆதிக் கிறிஸ்தவர்கள் தங்கள் நிலங்கள், உடைமைகளையெல்லாம் விற்று இல்லாதவர்களுக்குக் கொடுத்து உதவி செய்தார்கள், எனவே, சகோதரர்கள் மத்தியில் சமத்துவம் ஏற்பட்டது. ஆனால், இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் மத்தியில் அன்புக்கு மிகப்பெரிய குறைச்சல் ஏற்பட்டுள்ளது. கிறிஸ்து எவ்வளவு அன்பும் மனதுருக்கமும் உடையவராக இருந்தார். எனவே, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொண்டு அன்பில்லாமல் இருந்தால் அப்படிச் செய்வது வீணான காரியமாகும். யோவான் 13:34,35 வசனங்களில்

**கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையை பிரிவினை, மாயமாலம், கள்ள உபதேசங்கள், கிறிஸ்தவர்கள் உலகத்தாரைப் போன்று வாழ்க்கை நடத்துதல், பொய், ஏமாற்று, சபை காரியங்களில் ஈடுபாடின்மை போன்ற காரியங்கள் சீரழித்து வருகின்றன.**

இயேசு நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்; நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார். நாம் மற்றவர்களிடம் அன்பு செலுத்துவதினால் கிறிஸ்துவின் நாமத்தை நிச்சயமாகவே மகிமைப்படுத்த முடியும். இந்த உலகமானது கிறிஸ்தவர்களிடமிருந்து அதிகமான காரியங்களை எதிர்பார்க்கிறது. ஏதோ ஒரு தவறான காரியத்தைக் கிறிஸ்தவர்கள் செய்துவிட்டால் இவர்களா இப்படிச் செய்தார்கள் என்று ஆச்சிரியத்தோடு கேட்பதுண்டு.

ஏனென்றால், கிறிஸ்துவைப்பற்றியும், கிறிஸ்துவின் போதனைகளைப் பற்றியும் உலகத்தாருக்குக் கூட ஓரளவு தெரியும். எனவேதான், நம்மிடமிருந்து நற்குணங்களை அவர்கள் அதிகமாக எதிர்பார்ப்பார்கள். கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் நாம் கிறிஸ்துவின் சீஷர்களென்று இந்த உலகம் அறிந்துகொள்ளும்போது தேவனுடைய நாமம் மகிமைப்படும். ஆவியின் கனியைக் கொடுக்க கிறிஸ்தவர்களாகிய நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஆவியின் கனியில் அன்புதான் முதலிடத்தைப் பிடிக்கிறது. அன்பானது, எல்லா நற்காரியங்களுக்கும் ஊற்றும் உறைவிடமுமாயிருக்கிறது. நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்போது, நிச்சியமாகவே நாம் தேவனிடத்தில் அன்பு கூருவோம். அப்போது அவருடைய கற்பனைகளையும் கைக்கொள்ளுவோம். மேலும், இந்த உலகத்தாரை விட நாம் வித்தியாசமாயிருக்க வேண்டும் என்று தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். எனவே, உலகத்திலும்,சபையிலும் ஏற்படும் பிரச்சனைகளைத் தவிர்க்க நாம் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாய் காணப்படுவோம், கிறிஸ்தவர்களாயிருந்து உலகத்திலே ஒரு தாகத்தை ஏற்படுத்துவோம், தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துவோம். ✞

---

## ஆசாரியனுக்கான மூன்று ஆசீர்வாதங்கள்

* **கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து உன்னைக் காக்கக்கடவர்**
* **கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்க பண்ணி உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர்**
* **கர்த்தர் தம்முடைய முகத்தை என்மேல் பிரசன்னமாக்கி உனக்குச் சமாதனம் கட்டளையிடக்கடவர்**

தேவன்

# தேவ கோபாக்கினை

## The Worth of God

*Betty Burton Choate*

தேவ சாயலில் மனிதர்களாகிய நாம் படைக்கப்பட்டிருக்கிறோம். இந்த விஷயத்தில் பல காரியங்கள் உள்ளடக்கம். நாம் தேவ சாயலில் படைக்கப்பட்டிருக்கிறோம் என்பதன் பொருள், நாம் அழிவில்லா ஆத்துமாக்களைப் பெற்றிருக்கிறோம் என்பதாகும். இன்னும் இதற்கான விளக்கம் நீண்டு கொண்டே போகிறது.

நாம் பேசவும், சிந்திக்கவும் ,முடிவெடுக்கவும் அறிவிலும், திறனிலும், கற்றுக்கொள்ளவும், வளரவும் முடியும். நம்மால், அன்பு, சமாதானம், மகிழ்சி, வேதனை, கோபம் போன்ற உணர்வுகளை உணர முடியும். இதினிமித்தம் நம்மால் தவறானதை விடுத்து சரியானதையும், தீமையை விடுத்து நன்மையானதையும் தெரிந்துகொள்ள முடியும்.

நான் திரையரங்குக்குச் சென்று படம் பார்த்ததில்லை. வீட்டில் தொலைக்காட்சிகளிலும் படங்கள் பார்ப்பது எனக்குப் பழக்கமில்லாத ஒன்று. ஆனாலும், Son Of God (தேவ மைந்தன்) என்னும் படத்தைக் குறித்து நான் சில காரியங்களைக் கேள்விப்பட்டபடியால், அப்படத்தைப் பார்க்க நானும் ஆசைப்பட்டு அப்படத்தைப் பார்த்தபோது, அப்படத்தின் தயாரிப்பாளரும், கதாசிரியரும், வேத வாக்கியங்கள், இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பற்றி எவைகளை பதிவு செய்திருக்கிறதோ அவைகளிலிருந்து மாறுபட்ட காரியங்களை வெளிப்படுத்தி, அவைகளை ஏன் துணிகரமாக மாற்றினார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. இத்திரைப்படம் வேதவாக்கியங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற சம்பவங்களை சற்று திரித்து சித்தரித்திருந்தாலும், ஒரு வழியாக அத்திரைப்படத்தைப் பார்த்து முடித்தேன். உதாரணமாக, இயேசு கிறிஸ்துவின் கல்லறை தோட்டத்தில் இருப்பதற்கு பதிலாக, மலைப்பாங்கான இடத்தில் இருப்பதாகக் காட்டியிருக்கிறார்கள். அப்படியிருந்தாலும் கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை உணர்வுப்பூரமாக, ஆணித்தரமாகப் பதிவு செய்திருக்கிறார்கள். அப்படத்தைப் பார்த்து நான் கதறினேன். சிலநேரங்களில் கிறிஸ்து நம்மீது காட்டிய அன்புக்காகவும், நம்மீது பாராட்டிய இரக்கத்திற்காகவும், நன்றியால் பூரித்து ஆனந்தக் கண்ணீர் விட்டேன். ஆனாலும், அவர் துன்பப்படுத்தப்பட்ட விதத்தை நினைக்கையில் அதிலும் குறிப்பாக,

நம் ஆண்டவர் அநுபவித்த பாடுகள், பரியாசங்கள், சித்திரவதைகள், போன்றவற்றை நான் அத்திரைப்படத்தின் வாயிலாக கண்டு கொண்டிருக்கும்போதே, என் இருதயமே வெடித்துப் போனாதுபோல ஓர் உணர்வு எனக்கு ஏற்பட்டது. அப்போது, நம் ஆண்டவரைத் துன்பப்படுத்தியவர்கள் மீது எனக்கு வெறுப்புணர்வு அதிகமானது. அதினிமித்தம், அக்கயவஞ்சகர்கள் இக்கொடிய, செயலை நம் கர்த்தருக்குச் செய்யும்போது, அவர் ஓரே வார்த்தையினாலே அவர்களை அழித்திருக்க வேண்டியதுதானே, என்று நான் எனக்குள் நினைத்தேன். அவ்வேளையில், அத்தீயவர்களின் கைகளினால் அத்தனை துன்பங்களையும் சகிப்பதற்கு நம் ஆண்டவருக்கு எத்தனை வலிமை இருந்திருக்க வேண்டும்!

தேவனுக்கும் உணர்வுகள் உண்டு என்பதை நான் நினைத்துப் பார்க்கிறேன். வேதவாக்கியங்களில் தேவ கோபத்தைப் பற்றி 200–க்கும் அதிகமான முறை குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு சந்தர்ப்பத்தில் இஸ்ரவேலர்களுடைய கலகத்தின் காரணமாக தேவன் கடுங்கோபமடைந்து, **பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த ஜனங்களைப் பார்த்தேன்; இவர்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள், ஆகையால் என் கோபம் இவர்கள் மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப் போடவும் நீ என்னை விட்டுவிடு; உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்றார்** (யாத்திராகமம் 32:9,10).

நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் பட்ட பாடுகளையும் அடைந்த வேதனைகளையும், நான் பார்த்துக் கொண்டிருந்தபோது, எனக்குள் எழுந்த ஆச்சர்யம் என்னவென்றால், வணங்காக் கழுத்துள்ள ஜனங்களாயிருந்த இஸ்ரவேல் ஜனங்களை அழிக்க விரும்பிய தேவன் தம்முடைய சொந்தக் குமாரனுக்கு இப்படிப்பட்ட கொடுமைகள் நடந்தபோது கொதித்தெழாதது ஏன்? என்பதே எனக்குள் எழுந்த ஆச்சரியமாகும்.

அதன் பின்புதான், கிறிஸ்துவைக் கொடுமைப்படுத்திக் கொலை செய்த அக்கொடியவர்களை அழிக்கும் நிலைக்குத் தேவனை தள்ளிக் கொண்டிருந்தான் பிசாசு. ஆனால், தேவனோ அதற்கு இடங்கொடாமல், அவர்களும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று சித்தங்கொண்டிருந்தார். அதனால், அவர்கள் மீது இரக்கங்கொண்டு அவர்களை விட்டுவிட்டார். சர்வத்தையும் அறிந்திருக்கிற சர்வஞானியான நம் தேவன், சாத்தான், வெற்றிபெற ஒருபோதும் அனுமதிப்பதே இல்லை. ஆகவேதான், இயேசு கிறிஸ்து தமக்கு இழைக்கப்பட்ட எல்லா அநீதிகளையும் சகித்துக்கொண்டார். அதேபோல், தேவனும் தம்முடைய குமாரன் பட்டபாடுகளைச் சகித்துக்

கொண்டார். ஆனாலும், இறுதியில் மூன்று மணி நேரம் இவ்வுலகத்தை தேவன் அந்தகாரப்படுத்தினார் (மத்தேயு27:45). அதன் பிறகு, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், எல்லாம் முடிந்தது என்று சொல்லி தம்முடைய ஆவியை பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுத்தார். அதினாலே, மிகப்பெரிய ஓர் மாற்றம் ஏற்பட்டது. வேதாகமமும் இதை பதிவு செய்திருக்கிறது. வரலாற்றுச் சுவடுகளும் இதற்கு ஆதாரமாக இருக்கின்றன.

ரோம வரலாற்று ஆசிரியர் பிலிகன் என்பவர் இது குறித்து தனது விளக்க உரையில் குறிப்பிடும்போது, முதல் நூற்றாண்டில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மிகப்பெரிய சூரிய கிரகணம் ஏற்பட்டது என்றும் ஆறாம் மணி வேளையில் பகல் இரவாக மாறியதென்றும், வானத்தில் நட்சத்திரங்கள் தெரிந்ததென்றும், பிதினியா என்ற இடத்தில் மிகப்பெரிய பூகம்பம் ஏற்பட்டு அதினிமித்தம், நிக்கேயா என்னும் பட்டணத்தின் ஒரு பகுதியை அப்பூகம்பம் புரட்டிப்போட்டதாகவும் பதிவு செய்திருக்கிறார். இதை அகழ்வாராய்ச்சி சான்றுகளும் உறுதிசெய்கின்றன. பூமியில் இரண்டு மிகப்பெரிய பூகம்பங்கள் நிகழ்ந்துள்ளதை கற்பாறை படிமச் சான்றுகள் மூலம் கண்டறிந்துள்ளனர். முதல் நூற்றாண்டில் கி.பி–26க்கும், 36–க்கும், இடையே மிகப்பெரிய பூகம்பங்கள் ஏற்பட்டுள்ளதை தொல்பொருள் ஆராய்ச்சி முடிவுகளும் வெளிப்படுத்துகின்றன.


இப்போது, இரட்சிப்பு நிச்சயமாக்கப்பட்டிருக்கிறது. அதற்காக இரத்தப்பலி செலுத்தப்பட்டிருக்கிறது. இவைகளுக்கு தேவன் இரண்டு விதமாகப் பதிலளித்தார். 1. உடனடியாகப் பூமியைக் குலுங்கச் செய்து பாடம் புகட்டினார். இதினிமித்தம் கடினமான இருதயத்தைக் கொண்டிருந்த நூற்றுக்கதிபதியையும், மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்று சொல்ல வைத்தது (மத்.27:54). இது, தேவன் தம்முடைய குமாரனை மனிதர்கள் கொடுமைப்படுத்தியதற்கான தேவகோபாக்கினையின் வெளிப்பாடாகும். 2. இயேசுகிறிஸ்துவைக் கொன்றவர்களெல்லாரும் மரணத்திற்குப் பாத்திரராயிருந்தும், தேவன் அவர்களை அழிக்காமல் அவர்கள் வாழும்படி வகை செய்தார். எப்படியெனில், இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறையுங்கள் என்று ஆக்கிரோஷமாகச் சத்தமிட்டவர்கள் தான், பேதுருவின் முதல் பிரசங்கத்தைக் கேட்டு கிறிஸ்துவின் இரத்தத்தாலே கழுவி பரிசுத்தமாக்கப்பட்டு சபையிலே சேர்க்கப்பட்டார்கள் என்று அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரம் நமக்குப் போதிக்கிறது. ✞

தேவன்

# தேவனுடைய கரம்

# THE HAND OF GOD

*Bobby Dockery*



இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப் போகவில்லை [ஏசாயா59:1]. தேவனுடைய மற்றும் கர்த்தருடைய கரம் என்னும் சொற்றொடர், வேதாகமத்தில் பல இடங்களில் இடம்பெற்றிருக்கிறது. இச் சொற்றொடரானது, நாம் தேவனைத் துதித்துப் பாடும் பல பாடல்களிலும் இடம்பெற்றிருக்கிறது.

## சிருஷ்டிப்பின் கரம்

நாம் வாழும் இவ்வுலகத்தை தேவக்கரம் சிருஷ்டித்தது. என்றாலும், நாத்திகமும் தேவநம்பிக்கையும் உள்ள உலகத்தில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வேதாகமத்தில் இடம்பெற்றுள்ள சிருஷ்டிப்பின் காரணிகள், முன்னணி செய்தித்தாள்கள் மற்றும், பத்திரிக்கைகளிலும், பள்ளிப்பாடப் புத்தகங்களிலும் மறுக்கப்படுகின்றன. ஆனால், ஒரு கேள்வி, நாம் வாழும் இப்பூமி எங்கேயிருந்து வந்தது? இதற்கு ஆதாரப்பூர்வமான ஒரே ஒரு பதில்தான் உண்டு. தேவனுடைய சர்வவல்லமையுள்ள குரல் ஒலித்தது, அவருடைய கரம் அசைந்தது, இவ்வுலகம் உண்டானது. **நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர், வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது** [சங்கீதம் 102:25].

## பராமரிப்பின் கரம்

நம்மை உருவாக்கின கரம் நம்மை போஷித்துக் காப்பாற்றுகிற கரமாகவும் இருக்கிறது. சகல பிராணிகளின் ஜீவனும், மாம்சமான சகல

மனுஷரின் ஆவியும், அவர் கையிலிருக்கிறது [யோபு 12:10]. நிச்சியமாகவே தேவனுடைய கரம் எல்லாவற்றிலும் இருக்கிறது. பராமரிப்பின் கரம் ஆசீர்வாதம் மற்றும் பாதுகாப்பின் கரமாகவும் இருக்கிறது. தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும் ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர் [சங்கீதம் 46:1]. நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது[யாக்கோபு 1:7]. அவருடைய கரங்கள் தொடர்ச்சியாக வானத்தின் பல கனிகளைத் திறந்து, மனித இனத்தின் மீது அபரிதமான ஈவுகளை வருஷிக்கப்பண்ணுகின்றன [மல்கியா3:10].

## இரட்சிப்பின் கரம்

மனிதன் தேவனுடைய அன்பின் கரத்துக்கு விரோதமாகக் கலகம் செய்து பாவம் செய்தான். இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்த படியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும், இதுவுமாயிற்று [ரோமர்5:12]. ஆனால், தேவன் தமது மிகுந்த இரக்கங்களால் பாவிகளை இரட்சிக்க விரும்புகிறார். எப்படியெனில், அவர் தமது கரங்களை விரித்து, பாவிகள் தம்மிடத்தில் திரும்பி வரவேண்டும் என்று நிற்கிறார். கீழ்ப்படியாதவர்களும் எதிர்த்துப் பேசுகிறவர்களுமாயிருக்கிற ஜனங்களிடததிற்கு நாள் முழுவதும் என் கைகளை நீட்டினேன் [ரோமர்10:21] என்று தேவன் உரைக்கிறார். இழந்துபோன உலகிற்கு கரங்களை நீட்டிய தேவ அன்பின் நிரூபணமாக இயேசு கிறிஸ்துவின் ஊழியம் இருக்கிறது. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் [மத்தேயு11:28] என்கிறார். ஆனால், பாவிகளின் சம்மதமின்றி தேவன் அவர்களை இரட்சிப்பதில்லை. இரட்சிக்கப்பட விரும்புகிறவர்கள் தேவனுடைய இரட்சிப்பின் கரத்தை, கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலம் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

தேவனுடைய சிருஷ்டிப்பின் கரம் இவ்வுலகத்தையும், நம்மையும் உண்டாக்கியிருக்கிறது. அவருடைய பராமரிப்பின் கரம் நம்மை போஷித்துக் காப்பாற்றி பராமரித்து வருகிறது. அவருடைய இரட்சிப்பின் கரம் இவ்வுலகிலுள்ள அனைவரும் இரட்சிக்கப்பட நீட்டப்பட்ட நிலையில் இருக்கிறது. 1பேதுரு 5:6-ன் படி, அவர் நம்மை ஏற்றகாலத்தில் உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கரங்களுக்குள் அடங்கியிருப்போம். ✞

தேவனுடைய வார்த்தை

# அப்பத்தினால் மாத்திரமல்ல !

## Not by Bread Alone !

*Perry N. Hall*

அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார் (மத்தேயு4:4). இது நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்று கரையேறினவுடனே, சோதனைக்காரனான பிசாசின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது உதிர்த்த உன்னதமான வார்த்தைகள். இயேசு கிறிஸ்து நாற்பது நாட்கள் இரவும் பகலும் உபவாசம் இருந்தபடியால் மிகவும் பசியடைந்தார். இச்சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி கிறிஸ்துவின் மனதில் சந்தேகத்தை ஏற்படுத்த நினைத்தான் பொல்லாங்கன். இந்த யுக்தியை அவன் ஏதேன் தோட்டத்திலிருந்தே பயன்படுத்தி வருகிறான். தேவன் அப்படிச் சொன்னது உண்டோ? என்னும் யுக்திதான் அது. சாத்தான் எப்போதுமே நம்மிடத்தில் வந்து நம் மனதில் தேவனுடைய வார்த்தை, அன்பு, வல்லமை போன்றவற்றைக் குறித்து சந்தேகத்தை ஏற்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறான். நாம், பிசாசுக்கு எதிர்த்து நிற்கும்போது அவன் நம்மை விட்டு ஓடிப்போவான் (யாக்கோபு 4:7).

> சாத்தான் எப்போதுமே நம்மிடத்தில் வந்து நம் மனதில், தேவனுடைய வார்த்தை, அன்பு, வல்லமை போன்றவற்றைக் குறித்துச் சந்தேகத்தை ஏற்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறான்.

பசி என்பது மனிதனிடத்தில் காணப்படும் உந்து சக்திகளுள் ஒன்றாக இருக்கிறது. இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும். மனிதனுடைய உடல் நலத்துக்கு அப்பம் ஓர் அவசியமான ஆகாரமாயிருக்கிறது. இங்கே, இயேசு கிறிஸ்து நம் வாழ்க்கையில் அப்பத்தை விட அவசியமான காரியங்களாக, தேவனோட நமக்கிருக்கும் உறவின் காரணமாக சாத்தானை நாம் மேற்கொள்ள முடியுமென்பதை வலியுறுத்துகிறார் என்று எழுதியிருக்கிறதே இதுதான் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுத்திய வார்த்தையாக இருக்கிறது. அவர், தேவனுடைய

வல்லமையுள்ள குமாரனாகவும், சர்வலோக சிருஷ்டிகராகவும், பரிசுத்த ஆவியினால் நிறைந்தவராகவும் இருந்தபோதிலும், என்று எழுதியிருக்கிறதே என்னும் எளிய, ஆழமான வார்த்தைகளுடன் தமது ஊழியத்தைத் தொடங்கினார். அவர் ஆவியின் பட்டயத்தினாலே சாத்தானை நேருக்கு நேர் எதிர்கொண்டார். நாமும் நமது ஆவிக்குரிய வாழ்வில் அப்படியே செய்ய வேண்டும். நம் இருதயமும், மனதும் தேவனுடைய வார்த்தைகளால் ஆட்கொள்ளப்பட வேண்டும். நம் நினைவுகளெல்லாம் என்று எழுதியிருக்கிறதே என்னும் வார்த்தையால் நிரப்பப்பட வேண்டும். தேவனுடைய வார்த்தையின் பட்சமாக நாம் இருக்க வேண்டும். அப்பொழுது நாம் அப்பத்தினால் மாத்திரம் பிழைக்கிறவர்களாக இல்லாமல், தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைக்கிறவர்களாக இருந்து, பிசாசைத் தோற்றடிக்க முடியும்.

சபையில், மூப்பர்கள், போதர்கள், பிரசங்கியர்கள், போன்ற தேவனுடைய மனிதர்கள் மூலமாகப் பிரசங்கிக்கப்படும் வார்த்தைகளால் நம் அன்றாட வாழ்வு போஷிக்கப்பட வேண்டும். அதற்கு, சபை அங்கத்தினர்களாகிய நாம், ஆராதனை மற்றும் வேதபாட வகுப்பு மற்றும் ஆவிக்குரிய ஆலோசனைக் கூட்டங்களில் பங்கேற்கும்பொழுது நம் அன்றாட வாழ்வில் ஆவிக்குரிய ஆகாரத்தால் போஷிக்கப்படுகிறோம் என்பதை உறுதி செய்ய முடியும்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஜீவ அப்பமாக இருக்கிறார். அவருடைய வார்த்தைகள் ஆவியாகவும், ஜீவனுள்ளதாகவும் இருக்கிறது. நாம் பூமிக்குரிய ஆகாரத்தைத் தேடுகிறவர்களாயிருந்தால் நம் ஜீவனை இழந்து விடுவோம். ஜீவ அப்பமாகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் நாம் வரும்போது ஒருக்காலும் பசி அடைவதில்லை; அவரிடத்தில் விசுவாசமாயிருக்கும்போது ஒருக்காலும் தாகமடைவதில்லை [யோவான் 6:35].

இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம். அப்படியிராமல் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் [1கொரி.15:19;மத்தேயு 6:33]. **மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வார்த்தையிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்.** ✝

# தகவலா-தூண்டுதலா-அல்லது மாற்றமா?

## Information - Inspiration - or Transformation ?

Carroll Sites

இவ்வுலகில் பலதரப்பட்ட புத்தகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. சாலொமோன் ஞானி, அநேக புஸ்தகங்களை உண்டுபண்ணுகிறதற்கு முடிவில்லை; அதிகப் படிப்பு உடலுக்கு இளைப்பு என்று எழுதுகிறார் (பிரசங்கி12:12). சில புத்தகங்கள் நமக்குத் தகவல்களைத் தருகின்றன. சில புத்தகங்கள் நமக்குத் தூண்டுகோலாக இருக்கின்றன. இவைகளுள் வேதாகமம் என்னும் புத்தகமும் உண்டு. அதுதான் மனிதனுடைய மாற்றத்திற்கான புத்தகம்.

நம் எல்லோருடைய வாழ்வும் மாற்றம் பெறவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். ஆகவேதான், தமது தாசனாகிய பவுலைக்கொண்டு தேவன் இவ்விதம் வெளிப்படுத்துகிறார். அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தரியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர்12:1,2) என்று எடுத்துரைப்பதின் வாயிலாக தேவன் மனிதர்களிடம் பரிசுத்தமான மாற்றத்தையே விரும்புகிறவராக இருக்கிறார்.

இங்கே, மறுரூபம் என்பது ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு முற்றிலுமாக மாறும் நிலையைக் குறிக்கிறது. அதாவது, மறுரூபமாகுதல் என்பது தோற்றத்திலும்,குணாதிசயத்திலும் மாற்றத்தைக் காட்டுவதாகும். அப்போஸ்தலனாகிய பவலும், அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார் (அப்.17:30) என்று எழுதுகிறார். மனந்திரும்புதல் என்பது நம் மனவிருப்பத்தின் மாற்றமாக இருக்கிறது. இது குறித்து ஆண்டவர் இயேசுவின் கூற்றைக் கவனியுங்கள் ஆயினும் உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்;

மூத்தவனிடத்தில் அவன் வந்து: மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சைத் தோட்டத்தில் வேலைசெய் என்றான். அதற்கு அவன்: மாட்டேன் என்றான்; ஆகிலும் பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான். இளையவனிடத்திலும் அவன் வந்து அப்படியே சொன்னான்; அதற்கு அவன்: போகிறேன் ஐயா, என்று சொல்லியும் போகவில்லை. இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின் படி செய்தவன் என்று கேட்டார். அதற்கு அவர்கள்: மூத்தவன்தான் என்றார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனென்றால், யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்திருந்தும் நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை; ஆயக்காரரும் வேசிகளுமோ அவனை விசுவாசித்தார்கள்; அதை நீங்கள் கண்டும், அவனை விசுவாசிக்கும்படியாகப் பின்பாகிலும் மனஸ்தாபப்படவில்லை என்றார் [மத்தேயு 21:28-32]. நாம், சில காரியங்களில் மனதை மாற்றும்போது, நம் வாழ்வில் மாற்றத்தைத் தொடங்குகிறோம்.

நீங்கள் உங்கள் வேதாகமத்தை எப்படி வாசிக்கிறீர்கள்? 1.தகவலுக்காக மாத்திரம் வாசிக்கிறீர்களா? 2. அதை வாசிக்கும்போது அது உங்களுக்கு வெறுமனே தூண்டுகோலாக மாத்திரம் இருக்கிறதா? வேதாகமத்தை வாசிப்பதால் அது உங்களுக்குள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகிறதா? சிந்தியுங்கள். ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள். அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயுமிருங்கள் என்று யாக்கோபு ஆசிரியர் தமது நிருபங்களில் வலியுறுத்துகிறார் [யாக்கோபு 1:21,22].

வேதாகமத்தைப் படித்து அதற்குக் கீழ்ப்படியுங்கள், அது உங்கள் வாழ்க்கையை மாற்றி மேலான வாழ்வுக்கு வழிநடத்துகிறது.

**வேதாகமமே நம்முடைய மாற்றத்திற்கானது**

✞

இரட்சிப்பு

# தேவனுடைய உண்மையுள்ள பிள்ளைகள்

## GOD'S FAITHFUL CHILDREN

Dale Grissom

கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது (சங்.116:15). சங்கீதப் புத்தகத்திலுள்ள இவ்வசனம் இவ்வுலகை விட்டுக் கடந்து சென்ற பல பரிசுத்தவான்களை நம் மனக்கண் முன் கொண்டுவருகிறது. இன்றைய நாட்களில் மருத்துவ விஞ்ஞானத்தில் மாபெரும் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தும் கூட, மரணத்தைத் தடுக்க முடியவில்லை. மரணம் என்பது மனித வாழ்வில் தடுக்க முடியாத தருணமாக இருக்கிறது. நாம் பிறந்தது எப்படி நிச்சயமோ, அப்படியே நாம் மரிப்பதும் நிச்சயமாயிருக்கிறது. ஒரு வேளை, மனிதன் மரியாமலிருப்பதற்கு ஓரேயொரு வழிதான் உண்டு. அது, நம் வாழ்நாட் காலத்திலேயே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகை. மற்றபடி, மரணம் எல்லாருமே ருசிபார்க்கும் ஒன்றாகவே இருக்கிறது. இதைக்குறித்து எபிரெய ஆசிரியர் அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே (எபி.9:27) என்று சொல்லுகிறார். தேவனுடைய உண்மையுள்ள பிள்ளைகளாக இருக்கிறவர்கள் என்றென்றும், அவரோடு ஜீவிக்க அந்த நித்திய வீட்டிற்குள் பிரவேசிப்பார்கள்.

> பரலோகம் என்பது மிகவும் அருமையான இடம். ஒருமுறை நாம் அங்கே சென்று விட்டால் பாவமும், பாடுகளும் நிறைந்த இப்பாழுலகத்தை நாம் மறுபடியும் விரும்பவே மாட்டோம்.

நம் அன்புள்ள தேவன் சிருஷ்டிப்பின் ஆரம்பத்திலேயே மனித இனத்துக்கு ஓர் இரட்சகர் தேவை என்று கண்டார். அதினிமித்தம் காலம் நிறைவேறினபோது தேவன் தம்முடைய திருச்சித்தத்தின்படி, தம்முடைய ஒரே பேறான குமாரனை, பரலோகத்திலிருந்து, இப்பூவுலகத்திற்கு நம்மை இரட்சிக்கும்படியாக அனுப்பினார். இயேசுவானவர் பாவமில்லாதவராயிருக்கிறபடியால், அவரே பூரணராயிருப்பதற்குப் பாத்திரமானவர். அவருடைய இரத்தம் சுவிசேஷ இரட்சிப்பின் திட்டத்திற்குக் கீழ்ப்படிகிறவர்களுடைய பாவங்களை எடுத்துப்போட்டு, அவர்களை முழுவதுமாகச் சுத்திகரிக்கிறது. கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்களாக இருக்கும் அருமையான சிலாக்கியத்தைப் பெற்ற

உண்மையுள்ளவர்களுக்குத் தேவன் வாக்களித்திருக்கிற நித்திய ஜீவனுக்காக, நாம் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். **நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரண பரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்** (வெளி.2:10).

அன்பின் அப்போஸ்தலன் யோவான் வெளிப்படுத்தின விசேஷம் 21:4,6,7ல் உண்மையுள்ளவர்கள் பரலோகில் அனுபவிக்கப் போகும் சமாதானத்தின் மகத்துவங்களை இங்கனம் விவரிக்கிறார். அவர்கள் கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை முந்தினவைகள் ஒழிந்து போயின.... அன்றியும், அவர் என்னை நோக்கி: ஆயிற்று, நான் அல்பாவும், ஒமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன். ஜெயங்கொள்கிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்.

பரலோகம் என்பது மிகவும் அருமையான இடம். ஒருமுறை நாம் அங்கே சென்று விட்டால் பாவமும், பாடுகளும் நிறைந்த இப்பாழுலகத்தை நாம் மறுபடியும் விரும்பவே மாட்டோம். நாம் அங்கே சந்தோஷத்தாலும், சமாதானத்தாலும் என்றென்றும் நிரப்பப்படுவோம். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியயிருப்பேன். ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன் (யோவான் 14:2,3).


***தேவனுக்கு உண்மையாயிருக்கும் பிள்ளைகளுக்கு அவர் எவ்வளவு அருமையான வாசஸ்தலத்தை வைத்திருக்கிறார் என்று எண்ணிப் பாருங்கள்!***

இரட்சிப்பு

# இடுக்கமான வாசலை போகிற போக்கிலே தேடுகிறவர்கள்

## CASUAL SEEKERS AT THE NARROW GATE

Cecil May Jr.



வேதாகமத்திலுள்ள சுவிசேஷப் புத்தகங்களில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பக்கமாக நம் கவனத்தை முழுமையாகத் திருப்பும்போது, அவரிடமிருந்து நம் ஆன்மாவின் வளர்ச்சிக்கான அநேகங் காரியங்களைக் கற்றுக்கொள்ள முடியும். அப்படிக் கற்றுக்கொள்ளுகிற காரியங்களின் வாயிலாக, ராஜ்யமாகிய சபையில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவருக்குள்ளும் அவசியம் இருக்க வேண்டியது கீழ்ப்படிதலும், அர்ப்பணிப்பும் தான்.

இயேசு கிறிஸ்துவின் போதனைகளைக் கேட்டு அநேகர் அவரிடத்தில் சீஷரானார்கள். அத்தருணத்தில், ஒருவர் சீஷராக எண்ண செய்ய வேண்டுமென்று அவரிடம் கேள்வி கேட்கப்பட்டது. அப்போது, அவர், யாரைப் பார்த்தும் என்னை உங்கள் இருதயத்தில் அழையுங்கள் என்றும், பாவிகளின் ஜெபத்தைச் செய்யுங்கள் என்றும் சொல்லவில்லை. மாறாக, அவருடைய அழைப்பு எப்போதுமே ஒட்டு மொத்த வாழ்க்கையின் பரிசுத்தத்திற்கான உடனடி கீழ்ப்படிதலின் செயல்பாடாகத் தான் இருக்கிறது. மற்றொரு தருணத்தில் இரட்சிக்கப் படுகிறவர்கள் சிலபேர்தானா என்ற கேள்வி அவரிடம் கேட்கப்பட்ட போது, அவர் இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்க வகை

தேடினாலும் அவர்களாலே கூடாமற்போகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (லூக்கா 13:23,24). இதினிமித்தம், அவர் பிரயாசப்படுங்கள், தேடுங்கள் என்று சொல்லி வித்தியாசப்படுத்துகிறார்.

தேடுங்கள் என்னும் சொல் எப்போது போகிறபோக்கிலே தேடுவதைக் குறிக்காது. ஆண்டவர் இயேசு மத்தேயு 6:33ல், முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தைத் தேடுங்கள் என்று சொல்லும்போது அது வெறுமனே தேடாமல் முழுமனதோடு தேவனைத் தேடுவதைக் குறிக்கிறது. அதேபோல், லூக்கா, 15:8-ல், நாம் தேவனை ஜாக்கிரதையாகத் தேடவேண்டுமென்று எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, நாம் போகிற போக்கிலே கர்த்தரைத் தேடுகிறவர்களாக இருந்தால், இயேசு கூறும் அந்த இடுக்கமான வாசல் வழியாய்ப் பிரவேசிக்க முடியாது. அப்படியிராமல், ஜாக்கிரதையாயிருந்து அவ்விடுக்கமான வாசல் வழியே பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள்.

நாம் பரலோகப் பாதையில் தற்செயலாகப் பயணிக்கவில்லை. ஏசாயா 35:8, அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும். அது பரிசுத்த வழி எனப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்து வருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையாயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை; துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை, அங்கே காணப்படவுமாட்டாது; மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது (மத்தேயு 5:6). தன் தாயைவிட, தகப்பனைவிட, பிள்ளையை விட, இன்னும் தன் ஜீவனை விட இயேசு கிறிஸ்துவை அதிகம் நேசிக்காதவன் அவருக்குச் சீஷனாயிருக்க முடியாது (லூக்கா 14:26). அவருக்கு உகந்தவராயிருக்க வேண்டுமென்றால் புதிதாய்ப் பிறந்த குழந்தை தாய்ப்பாலின் மீது வாஞ்சையாய் இருப்பது போல, நாமும் வளரும்படி தேவனுடைய வார்த்தையாகிய திருவசனத்தின் மீது வாஞ்சையாய் இருக்க வேண்டும் (1 பேதுரு 2:3).

சத்தியத்தை நேசித்து அதை உண்மையாய்த் தேடுகிறவர்கள் தேவனுடைய பராமரிப்பினால் ஜீவனுக்குப் போகிற வாசலைக் கண்டடைவார்கள். அதே நேரத்தில் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார் என்ற எச்சரிப்பையும் பெற்றிருக்கிறோம் (2 தெச.2:9-12) ஆகையால், நாம் ஜாக்கிரதையாக எதைத் தேடுகிறோமோ அதைக் கண்டடையச் செய்ய தேவன் வல்லவராயிருக்கிறார்.

நாம், ஒருவரும் ஒருபோதும் இரட்சிப்பைச் சம்பாதிக்க முடியாது. மாறாக, அது நம்முடைய விசுவாசத்தினாலும், தேவனுடைய கிருபையினாலும் நாம் பெற்றுக்கொள்ளும் தேவனுடைய ஈவாக இருக்கிறது (எபேசியர் 2:4,5). அப்போஸ்தலனாகிய பவுலினுடைய பிரசங்கத்தின் நோக்கமே கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்படியாக, ஒவ்வொருவருடைய கீழ்ப்படிதலைத் தட்டியெழுப்புவதுதான் (ரோமர் 1:7;16:26). **ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை** (மத்தேயு 7:21). என்றும், நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைகொள்ளுங்கள் (யோவான் 14:15) என்றும் சொல்லியுள்ளார்.

இதேபோல், ஆசா ராஜாவும், யூத ஜனங்களை அழைத்து, கர்த்தரைத் தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும் தேடுவோம் என்று உடன்படிக்கை செய்தான். அந்த யூத ஜனங்களும் தங்கள் முழு இருதயத்தோடும் முழுமனதோடும் கர்த்தரைத் தேடினார்கள். கர்த்தர் அவர்களுக்குத் தென்பட்டு இளைப்பாறுதலைக் கொடுத்தார் என்று காண்கிறோம். (2 நாளா.15:12-15). எனவே, இன்று கர்த்தரை யாராரெல்லாம் முழுமனதோடும், முழு இருதயத்தோடும், தேடுகிறார்களோ அவர்களுக்கு இளைப்பாறுதல் நிச்சயம் உண்டு. ✝

## நியாயத்தீர்ப்பு நாள் ஆச்சரியங்கள்

- **உண்மையாகவே நியாயத்தீர்ப்பு என்று ஒன்றிருக்கிறது என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்வார்கள் (எபிரெயர் 9:27)**
- **கிறிஸ்துவின் சத்திய வசனத்தின்படி நியாயந்தீர்க்கப்படுவதை எல்லாரும் காண்பார்கள் (யோவான் 12:48)**
- **ஒட்டுமொத்த மனித இனமும் அங்கே காணப்படும் (2 கொரி. 5:10)**
- **அந்த நாளில் யாருக்கும் இரண்டாவது வாய்ப்பு கொடுக்கப்படமாட்டாது (லூக்கா 16:14)**
- **அந்த நாளில் அவரவருடைய கிரியைக்குத்தக்கதாய் அவரவர்க்குப் பலனளிக்கப்படும் (ரோமர் 2:6)**

# நேரம் TIME

Frank Chesser

நித்தியத்தின் மடியிலிருந்து பிறந்ததுதான் நேரம். நம் தேவன் நித்தியவாசி என்றழைக்கப்படுகிறார் [ஏசாயா57:15]. மாறாக, மனிதனோ நேர அடிப்படையில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறான். அநித்தியமான மனித குலத்துக்கு ஒரு தற்காலிக ஏற்பாடாக நித்தியம் நேரத்தைக் கொடுக்கிறது.

அப்போஸ்தலனாகிய பேதுரு குறிப்பிடும்போது, நேரம் என்பது தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்ற ஒன்றாகப் பார்க்கப்படுவதில்லை. கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம். [2பேதுரு 3:8]. நேரம் ஆரம்பித்தபோது தேவன் இளமையாகவும் இருக்கவில்லை நேரம் முடிவடையும்போது அவர் முதுமையாய்ப் போவதுமில்லை. ஆதியிலே என்பது நேரம், பிரபஞ்சம் மற்றும் தேவனுடைய தொடக்கத்தைக் குறிக்கிறது [ஆதி.1:1]. நேரம் ஆரம்பமாவதற்கு முன்பிருந்தே நித்தியம் இருந்து வருகிறது. இதினிமித்தம் இப்பூமியிலுள்ள எல்லாமே நேரத்தால் வரையறுக்கப்படுகிறது. நேரத்தின் அஸ்தமனம் நித்தியத்தில் முன்குறிக்கப்படுகிறது.

நேரம் என்பது நித்தியத்தின் இடைவேளை அல்ல. ஏனென்றால், நேரத்திற்கு தொடக்கமோ முடிவோ இல்லை. உதாரணமாக நேரத்தின் கால அளவுகள் கணக்கில்லா வருடங்கள் என்று வைத்துக் கொள்வோம். இருந்தபோதிலும், முடிவேயில்லாத கரையுடைய நித்தியக் கடலில் நேரம் ஒரு சிறு கூழாங்கல்லாகத்தான் இருக்கும். மனிதனுடைய சரீரம் நேரத்திற்காக உருவாக்கப்பட்டது. ஆனால், அவன் ஆத்மாவோ நித்தியத்திற்காக உருவாக்கப்பட்டது. மனிதன் ஒரு வாசல் நிலைக்குள் பிரவேசிக்கும்போது அது ஜீவன் எனக் குறிக்கப்படுகிறது. அவன் அவ்வாசல் நிலையை விட்டு வெளியேறும்போது அது மரணம் எனக் குறிக்கப்படுகிறது. இப் பூமியில் மனிதனுடைய நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது, மனிதன் நிழலைப் போல நிலை நிற்காமல் ஓடிப்போகிறான் [யோபு. 17: 6 ; 14:2], மனிதனுடைய நாட்கள் கொஞ்சங்காலந்தோன்றி பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே என்று வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது [யாக்கோபு 4:14].

நேரம் பறந்து செல்லுகிறது. அது இப்பூமியிலுள்ள ஒவ்வொருவருக்கும் தவிர்க்க முடியாத முடிவைக் கொண்டு வருகிறது. துரு மக்குதல், மற்றும் மரணம் போன்றவைகள் அதன் நிரந்தரத் தோழர்களாக இருக்கின்றன. நம் நேரமும் கரைந்து கொண்டிருக்கிறது. இச்சூழ்நிலையில் முக்கியமான விஷயம் என்னவென்றால், தேவனை சந்திக்க நாம் ஆயத்தப்படுகிறோமா? நேரம் நித்தியத்தால் விழுங்கப்படும்போது நாம் எங்கே இருப்போம்? ✠

இரட்சிப்பு

# மகிழ்ச்சியின் காப்பீடு

## BLESSED INSURANCE

Patrick Morrison



என் வாழ்க்கை முழுவதும் நான் கிறிஸ்தவர்களால் சூழப்பட்டிருக்கிறேன். நான் இவ்வுலகத்தில் பிறந்தது முதல் என் வாழ்க்கை சபை சம்பந்தமான செயல்பாடுகளைச் சுற்றித்தான் இருக்கின்றன. அதாவது, ஆராதனை, ஐக்கியம், பாடல் போன்றவைகள். சிறு பிராயத்தில் தேவனை பாடல்களின் மூலமாகத் துதித்துப் பாடினது, என் இனிய நினைவுகளில் ஒன்றாக இருக்கிறது. இப்போதும் கூட, எனக்குப் பிடித்தமான விஷயங்களுள் ஒன்றாகவும் அது இருக்கிறது. சிறு வயதில், பாடும் பாடல்களின் அர்த்தத்தையும், முக்கியத்துவத்தையும் அறியாமல் பாடல்களைப் பாடியிருக்கிறேன். உதாரணமாக, அவர் செட்டையின் கீழ் அடைக்கலம் புகவே என்ற பாடல் வரியை அவர் சேட்டைகளின் கீழ் அடைக்கலம் புகவே என்று பொருளுணராமல் பாடியிருக்கிறேன். இவ்விதமாக என் சிறுவயதில் நான் பாடின பாடல்கள் என் நினைவலைகளின் ரீங்காரமாயிருக்கிறது.

நாம் இவ்வுலகில் வாழும்போது நம் வாழ்க்கை பாதுகாப்பாக இருக்க சில காப்பீடுகளைப் பெறுகிறோம். அவை ஆயுள் காப்பீடு, ஆரோக்கியக் காப்பீடு, வாகனக் காப்பீடு என்பவைகளாகும். இவைகள், நம் உயிரையும் உடைமையையும் காக்கிறது என்பதற்காக அதிகப்படியான பணத்தை நாம் சேமிக்கிறோம். ஏனென்றால், நம் எதிர்கால வாழ்வுக்கு ஓர் ஆதாரமான பிடிப்பு வேண்டுமென்பதற்காக. அதேபோல், நம் தேவன், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை ஆவிக்குரிய வாழ்வுக்காக கிறிஸ்துவை அருளியதன் மூலமாக நமக்கு நம்முடைய பாவங்களிலிருந்து விடுதலை பெறும்படியான மிகப்பெரிய காப்பீட்டை வழங்கி இருக்கிறார். இதினிமித்தம், தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நம்முடைய

ஆவிக்குரிய வாழ்க்கையில் நிச்சயமானவை என்பதை உறுதிசெய்ய முடியும். 2 பேதுரு 3:9 மற்றும் எபிரெயர் 6:12 வசனங்களில் தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். உங்களுக்கு நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாகும்படி நீங்கள் யாவரும் முடிவுபரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்க வேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம். தேவன் தம்முடைய வாக்குத்தத்தை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறபடியால் உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் அவரிடத்தில் நாம் சேர முடியும் (எபிரெயர் 10:22)

> நீங்கள் தேவனோடு நிற்கத் தெரிந்துகொண்டால் அவர் உங்கள் பக்கத்தில் இருக்கிறார் என்னும் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த ஒட்டுமொத்த உலகமும் நம்மைக் கைவிட்டாலும் கூட இயேசு கிறிஸ்து நம்மோடு நிற்பார்.

கடைசியாக, உங்கள் காப்பீட்டு ஆவணங்களை எப்போது சரிபார்த்தீர்கள்? அவ்வப்போது நாம் ஆவணங்களைச் சரிபார்த்து, அதில் மாற்றங்கள் தேவைப்பட்டால் அதைச் சரிசெய்து கொள்ளவேண்டும். நமக்குக் கொடுக்கப்பட்ட ஆவணத்தில் இடம்பெற்றுள்ள காரியங்களெல்லாம் காப்பீடு செய்யப்பட்டிருக்கின்றனவா என்பதை அவ்வப்போது சரிபார்த்துக் கொள்ளவேண்டும். உலகப் பிரகாரமான காப்பீட்டுத் திட்டங்களையே நாம் அடிக்கடி சரிபார்க்கும்போது, நம்முடைய ஆவிக்குரிய காப்பீடு சரியாக உள்ளதா என்பதை இன்னும் அதிக அக்கறை எடுத்துப் பார்க்க வேண்டும். நீங்கள் விசுவாசமுள்ளவர்களோ என்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள் உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசு கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள் (2கொரி.13:5). உங்கள் ஆவிக்குரிய காப்பீடு எப்படி இருக்கிறது?

உங்கள் வாழ்க்கையை நீங்கள் தேவனுக்கென்று ஒப்புக் கொடுக்கும்போது, நீங்கள் பாதுகாப்பான கரங்களில் இருக்கிறீர்கள் என்பதை நிச்சயத்துக்கொள்ள முடியும். இயேசு கிறிஸ்து நமது ஆத்துமாக்களை தேவனுடைய கரங்களில் வைப்பதின் மகத்துவத்தை நமக்கு உணர்த்துகிறார். நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்

கொள்வதுமில்லை. அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது. நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார் [யோவான் 10:28–30].

நீங்கள் தேவனோடு நிற்கத் தெரிந்துகொண்டால், அவர் உங்கள் பக்கத்தில் இருக்கிறார் என்னும் நிச்சயத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்த ஒட்டுமொத்த உலகமும் நம்மைக் கைவிட்டாலும் கூட, இயேசு கிறிஸ்து நம்மோடு நிற்பார் [2 தீமோ.4:16,17]. தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார் [ரோமர் 8:31]. இதினிமித்தம், உங்கள் வாழ்க்கையை கர்த்தருக்கு அர்ப்பணிக்க நீங்கள் உறுதி எடுத்துக் கொள்ளும்போது, ஒரு நல்ல பக்கத்து வீட்டுக்காரரைப் போல, இன்னும் அதைவிட மேலாக, தேவன் உங்களோடு இருப்பார். தேவன் நமக்குள் வாசம் செய்கிறார்.... நான் அவர்களுக்குள்ளே உலாவி அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே [2கொரி. 6:16]. அவர் நமக்குள் கிரியை செய்கிறார். ஏனெனில், தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார் [பிலி.2:13]. அவருடைய சமூகத்தை விட்டு நாம் எங்கும் ஓட முடியாது. உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர் நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர் [சங்.139:7,8].

நீங்கள் கிறிஸ்துவைப் பின்பற்ற உங்களை நீங்களே அர்ப்பணித்து விட்டால், கன்மலையிலிருந்து சமாதானத்தைப் பெறுவீர்கள். அந்தக் கன்மலை கிறிஸ்துவே [1 கொரி.10:4], அவரே நம் விசுவாசத்தின் மூலைக் கல்லாயிருக்கிறார் [எபே.2:20]. கிறிஸ்துவே சமாதானப் பிரபுவுமாயிருக்கிறார் [ஏசாயா 9:16].

மேற்சொல்லப்பட்ட காரியங்களை நீங்கள் நிச்சயமாகப் பெற்றிருக்கிறீர்களா? அப்படியில்லையென்றால், நீங்கள் எடுத்த ஆவிக்குரிய காப்பீடு சரியில்லை அல்லது காலாவதியாக நீங்கள் அனுமதித்து விட்டீர்கள். உங்கள் ஆத்துமாவின் இரட்சிப்பை நீங்கள் இன்றே நிச்சயப்படுத்திக்கொள்ள முடியும். அதாவது, இந்த மகிழ்ச்சியின் காப்பீட்டை இயேசு கிறிஸ்து மூலமாகப் பெற்றுக் கொள்ள முடியும்! ✞

# என் எதிராளி

## My Enemy

*Betty Burton Choate*

- ***என்*** மிக மோசமான எதிராளி நான்தான் என்பது என் வாழ்க்கையில் எவ்வளவு உண்மையாயிருக்கிறது?
- ***என்னை*** நான் காயப்படுத்திக் கொள்வதைப் போல வெளியிலுள்ள காரணிகள் என்னைக் காயப்படுத்த முடியாது.
- ***என்*** மோசமான மனப்பான்மையால் நான் என் வாய்ப்புக் கதவுகளை அடைத்து விட்டேன்.
- ***என்*** நம்பகத்தன்மையின்மையால் நானே என் பிரகாசமான நாட்களை இருளாக்கி விட்டேன்.
- ***என்*** காரியங்களை ஒத்தி வைப்பதினால் என் வாழ்க்கையில் பல நாட்களை விரயமாக்கி விட்டேன்.
- ***என்*** காரியங்களைச் செய்வதற்கு எம்முயற்சியும் எடுக்கவில்லை.
- ***என்*** சிறிய மனது என் பார்வையைச் சுருக்கி விட்டது.
- ***என்*** பொறாமைகள் நட்பை வளர விடாமல் தடுத்தன.
- ***என்*** வாய் பல பிரச்சனைகளுக்குக் காரணமாகிவிட்டது.
- ***என்*** குறுகிய பார்வையால் என்னை நான் காண முடியாமல் போனது.
- ***என்*** நல்லெண்ணங்களை என் எதிராளி நசுக்கிப்போட்டு விட்டான்.

நான் நானாகவே இருக்கிறேன்
நான் என்னவாக இல்லையோ அப்படி நான் இருக்க முடியாது.
ஆம், போகோ (Pogo) என்பவர் சொன்னது
நாம் நம் எதிரொளியைச் சந்தித்து விட்டோம். நாம் தான் அந்த எதிரொளி
நான் தான் என் மிகமோசமான எதிராளி
நான் எங்கேல்லாம் போகிறேனோ அங்கேல்லாம்
நான் என்னையே சுமந்து கொண்டு என்னவாக இருக்கிறேனோ
அப்படியே மற்றவர்களுடனும் நான் இருக்கிறேன்.

# வேதாகம உண்மைகள்

- வேதாகமத்தில் 35,66,480 எழுத்துக்கள், 8,10,677 வார்த்தைகள், 1189 அதிகாரங்கள் மற்றும் 66 புத்தகங்கள் உள்ளன.

- வேதாகமத்தில் நீண்ட அதகாரம் சங்கீதம் 119. மத்திய மற்றும் மிகக் குறுகிய அதிகாரம் சங்கீதம் 117.

- வேதாகமத்தில் மத்திய வசனம் சங்கீதம் 18-ம் அதிகாரம் 8-ம் வசனம்

- வேதாகமத்தில் மிக நீளமான பெயர் ஏசாயா 8-ம் அதிகாரம் 1-ம் வசனத்தில் இடம் பெற்றிருக்கிறது.

- வேதாகமத்தில் ஏசாயா 37 மற்றும் 2 ராஜாக்கள் 19 ஆகிய அதிகாரங்கள் ஒரே மாதிரியாக இருக்கும்.

- வேதாகமத்தில் நீளமான வசனம் எஸ்தர் 8:9 மிகச்சிறிய வசனம் யோவான் 11 : 35.

- வேதாகமத்தில் வாசிப்பதற்கு மிகச்சிறந்த அதிகாரம் அப்போஸ்தலர் 26.

- வேதாகமத்தில் ஞானமும், அறிவும், தேவனுடைய சிந்தையும் மனிதனுடைய நிலை மற்றும் இரட்சிப்பின் வழி பாவியின் அழிவு, விசுவாசிகளின் மகிழ்ச்சி, போன்றவை உள்ளடங்கியுள்ளது.

- வேதாகமத்தில் உபதேசங்கள் பரிசுத்தமுள்ளதாயும் போதனைகள் நம்மைக் கட்டுப்படுத்துகிறதாயும், வரலாறுகள் உண்மையுள்ளதாயும், அதன் முடிவுகள் மாறாததாயும் இருக்கிறது.

- வேதாகமத்தில் நம்மை வழிநடத்த வெளிச்சமும், நமக்குப் பெலன் கொடுக்க ஆவிக்குரிய அதிகாரமும், நம்மைத் தேற்றும் ஆறுதலும் நிறைவாக உள்ளது.

- வேதாகமத்தை தேவன் ஆயத்தமாக்கிக் கொண்டுவர 2500 வருடங்கள் ஆனது. அதை எழுதுவதற்கு 1600 வருடங்கள் ஆனது. தேவன் வேதாகமத்தின் காரியங்களை கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

- வேதாகமத்தில் சிறுபையன் என்று மூன்று முறையும், சிறு பெண் என்று இரண்டு முறையும் இடம்பெற்றுள்ளது.

- வேதாகமத்தின் மையக்கருத்தாக இயேசு கிறிஸ்து இருக்கிறார்.

- வேதாகமத்தை எழுதுவதற்கு தேவன் நாற்பது மனிதர்களைப் பணித்தார்.

- வேதாகமம் பயணிப்பவரின் வழிகாட்டியாக, கப்பலோட்டியின் வரைபடமாக, போர்ச்சேவகரின் பட்டயமாக இருக்கிறது.

- வேதாகமத்தை அலட்சியப்படுத்தாதேயுங்கள். அது செல்வச்சுரங்கமாகவும், ஆத்துமாவுக்கு ஆரோக்கியமாகவும் சந்தோஷ நதியாகவும் உள்ளது.

- வேதாகமம் உங்களுக்குத் தரப்பட்டுள்ளது. அது நியாயத் தீர்ப்பில் நிச்சயம் திறக்கப்படும்.

- ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மரித்தோரை எழுப்ப மேகங்கள் மேல் வரும்போது மகிழ்ச்சியின் கிரீடம் உங்களுக்கு வேண்டுமென்றால் வேதாகமத்தை வாசித்து, இழந்துபோன ஆத்துமாக்களை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துங்கள்.

### நியாயத்தீர்ப்பு

மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன். அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள். சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்து; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத் தீர்ப்படைந்தார்கள் (வெளி.20:12,13).

# வேதாகமம் போதிப்பது என்ன?

## What does the Bible Teach ?

*Sunny David*

கிறிஸ்தவர்கள் விசேஷித்த ஜனங்கள் என்று வேதாகமம் போதிக்கிறது (1பேதுரு 2:9). கிறிஸ்தவர்களாகிய நாம் விசேஷித்த ஜனங்களாயிருக்கிறோம். ஏனென்றால், உலகம் என்ன அளவுகோலை ஏற்படுத்தியிருக்கிறதோ அதின்படி நாம் வாழாமல், கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறவர்களாக இருக்கிறோம் (1பேதுரு 2:21). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தில் வாழ்ந்தபோது, எப்படி இவ்வுலகித்திற்குரியவராக இல்லையோ, அதேபோல் அவரைப் பின்பற்றுகிறவர்களும் உலகத்தாரல்ல என்று சொன்னார் (யோவான் 17:14-16). அப்போஸ்தலனாகிய பவுல் நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது என்கிறார் (பிலிப்பியர் 3:20). கிறிஸ்தவர்களாகிய, நாம் இப்பூமியில் வாழும்போது எந்த நாட்டில் வாழ்கிறோமோ அந்நாட்டின் பிரஜைகளாயிருக்கிறோம். குடியிருக்கும் நம் தேசத்தில் பொறுப்புள்ள குடிமக்களாக இருக்கிறோம். அதில் நம் முதல் பொறுப்பு, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து போதித்தபடி தேவனுக்கானதாயிருக்கிறது. மத்தேயு 6:33-ன் படி **முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூட கொடுக்கப்படும்.** ஆகவே, இப்பூமியில் நம் அன்றாட வாழ்க்கையின் செயல்பாடுகளெல்லாம், தேவனுடைய நாமம் மகிமைப்படத்தக்கதாய் இருக்க வேண்டும். **மத்தேயு5:16-ன் படி, இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது.**

இதினிமித்தம் கிறிஸ்தவர்களாகிய நாம், சகமனிதர்களின் ஆன்மாக்களுக்குப் பொறுப்பாளிகளாக இருக்கிறோம். இயேசு கிறிஸ்துவும் மத்தேயு 7:12-ல் **மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்** என்று போதித்தார். மற்றவர்கள் நம்மைப் பற்றி நன்றாகப் பேச வேண்டுமென்றும், நமக்கு நல்லது செய்ய வேண்டுமென்றும்,

மற்றவர்கள் நம்மை ஏமாற்றக் கூடாதென்றும், நம்மிடத்தில் பொய் சொல்லக்கூடாதென்றும், அவர்கள் நமக்குத் தீங்கிழைக்கக் கூடாதென்றும் விரும்புகிற நாம், இவைகளை முதலில் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டும் என்ற உறுதியான நிலைத்தன்மையைப் பெற வேண்டும்.

கிறிஸ்தவர்களான நாம், நம் தேசத்தின் சட்டங்களுக்குப் பொறுப்பாளிகளாகிய நாம், சக மனிதர்களிடமிருந்து, மோசங்களையும், தீங்குகளையும் அதே வேளையில் பாதுகாப்பையும், சுதந்திரத்தையும் அநுபவிக்கிறோம். ஒரு நிலையான அரசாங்கத்தால் மாத்திரமே இத்தகைய காரியங்களைத் தரமுடியும். அந்த அரசாங்கத்திடமிருந்துதான் அநுதினமும் நாம் பலவகையான சேவைகளைப் பெற்றுக்கொள்கிறோம். ஏனெனில், எந்தவொரு தனிமனிதனும் தண்ணீர் மின்சாரம், வடிகால் வசதி என்று தனக்குத் தானே ஏற்படுத்திக்கொள்ள முடியாது. ஆகவே, நாம் பொறுப்புள்ள நல்ல குடிமக்களாக இருக்கத் தவறும்போது தேவனுடைய காரியங்களில் தவறுகிறவர்களாகவே இருப்போம். அப்படியிராமல் நாம் அரசாங்கத்தின் சட்ட திட்டங்களை மதித்து நடக்க வேண்டும். அவைகளில் சில காரியங்கள் நமக்குப் பிடிக்காமல் இருக்கலாம். சில காரியங்கள் நாம் விரும்பிய வண்ணம் செயல்படுத்தப்படாமல் இருந்திருக்கலாம். ஆனாலும், அவைகளுக்காக நாம் முறுமுறுப்பதற்குப் பதிலாக, எவைகளை நாம் பெற்றிருக்கிறோமோ அவைகளுக்காக, தேவனுக்கு நன்றி செலுத்தி ஒவ்வொரு நாளையும் மகிழ்ச்சியாக அநுபவிப்போம்.

அதேவேளையில், தேவனுடைய சித்தத்தை மீறுகிற தேசச்சட்டம் ஏதாவது இருந்தால், கிறிஸ்தவர்களான நாம் அதற்குக் கீழ்ப்படியக் கூடாது. **அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும்: மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது என்றனர்** (அப்.5:29). இன்னும், கிறிஸ்தவர்களாகிய நாம் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஒருபோதும் ஈடுபடவே கூடாது. 1ரோமர் 12:17-21-ன் படி **ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள். எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது. நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்கு போஜனங்கொடு ; அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித் தழலை**

அவன் தலையின் மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு.

பூமியிலுள்ள அரசாங்கங்கள் எல்லாம் தேவனால் ஏற்படுத்தப்பட்டவைகள் தான் என்று கிறிஸ்தவர்களாகிய நாம் விசுவாசிக்கிறோம். இதினிமித்தம், உயர் பதவிகளிலிருப்பவர்கள் நல்லாட்சி செய்யாவிட்டாலும் கூட, நாம் நம் தேசச் சட்டத்திற்குக் கீழ்ப்படிகிற நல்ல குடிமக்களாகத் தான் இருக்க வேண்டும். ஏனெனில், நம் தேவனே எல்லாவற்றுக்கும் மேலானவர். அவருடைய சிருஷ்டிக்கு மறைவானவர்கள் எதுவுமில்லையென்று விசுவாசித்து,தேவனுக்குக் கீழ்ப்படிந்து சகல மனிதரோடும் சமாதானமாயிருக்க வேண்டும். நாம், தேவனை உண்மையாய் விசுவாசிக்கிறபடியால், அறியணையில் ஒரு கொடுங்கோன் அமர்ந்து நாட்டை ஆட்சி செய்தாலும், வேதாகமத்தில் தேவன் நமக்கு எவைகளைப் போதிக்கிறாரோ அவைகளைத்தான் நாம் பின்பற்ற வேண்டும். ரோமர் 13:1-7 -ம் வசனங்களின் படி, எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்படியக் கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான்; அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக் கொள்ளுகிறார்கள். மேலும் அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல, துர்க்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள்; ஆகையால் நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்க வேண்டுமானால் நன்மைசெய், அதினால் உனக்கு புகழ்ச்சி உண்டாகும். உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு அவன் தேவ ஊழியக்காரனாயிருக்கிறான். நீ தீமை செய்தால் பயந்திரு; பட்டயத்தை அவன் விருதாவாய்ப் பிடித்திருக்கவில்லை; தீமை செய்கிறவன் மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவ ஊழியக்காரனாயிருக்கிறானே. ஆகையால் நீங்கள் கோபாக்கினையினிமித்தம் மாத்திரமல்ல, மனச்சாட்சியினிமித்தமும் கீழ்ப்படிய வேண்டும்.

இதற்காகவே நீங்கள் வரியையும் கொடுக்கிறீர்கள். அவர்கள் இந்த வேலையை, பார்த்து வருகிற தேவ ஊழியக்காரராயிருக்கிறார்களே. ஆகையால் யாவருக்கும் செலுத்த வேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்; எவனுக்கு வரியைச் செலுத்த வேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்த வேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள்; எவனுக்குப் பயப்பட வேண்டியதோ அவனுக்குப்

பயப்படுங்கள்; எவனைக் கனம்பண்ணவேண்டியதோ அவனைக் கனம் பண்ணுங்கள்.

மேலும், 1பேதுரு 2:13-17-ம் வசனங்களில் நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள். மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி, தீமை செய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மை செய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ்சரி கீழ்ப்படியுங்கள். நீங்கள் நன்மை செய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல் தேவனுக்கு அடிமையாயிருங்கள்; எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்பு கூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம் பண்ணுங்கள் என்றும் பார்க்கிறோம்.

தேவனுக்குப் பயப்படுகிற தேசச்சட்டங்களுக்குக் கட்டுப்படுகிற கிறிஸ்தவர்கள் ஒருபோதும், அரசுக்கு எதிராகக் கலகம் செய்யமாட்டார்கள், வன்முறையில் ஈடுபடுபவர்களோடு கைகோர்க்க மாட்டார்கள். தேசச் சட்டம் தேவச்சட்டத்திற்கு எதிராக இருக்கும்போது நாம் அதை ஏற்றுக்கொள்ளக் கூடாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் தேவச்சட்டத்திற்கு இசைவாக தேசச்சட்டம் அமையத்தக்கதாக மக்களின் நன்மைக்காக நாம் ஜெபிக்க வேண்டும். அதே வேளையில், நாம் தேசச் சட்டத்தை மீறி ஒரு போதும் மாற்றத்தைக் கொண்டு வர முடியாது என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். ✞

## ஆவிக்குரிய பயிற்சியின் அவசியம்

நம்முடைய அறியாமையினாலும் அலட்சியத்தினாலும் சிறுபிள்ளைகளுக்கு நாம் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளைக்கொண்டு ஆவிக்குரிய பயிற்சி கொடுக்கத் தவறுவதினால், அவர்கள் கிறிஸ்துவின் தொடுதலை உணராமல் போய்விடுகிறார்கள். அப்போது உலகம் அவர்களைத் தொட்டுவிடும். சாத்தானின் வேலையாட்கள் அவர்களுக்கு இச்சை, வெறுப்புணர்வு, ஏமாற்று, பொய், அவமரியாதை, சந்தேகம், அவிசுவாசம் போன்றவற்றைக் கற்றுக்கொடுத்து விடுவார்கள்.

# ஆவிக்குரிய தலைவர்கள் - அவசியமான குணாதிசயங்கள்

## SPIRITUAL LEADERS - ESSENTIAL CHARACTERISTICS

Ronald D. Bryant

உணர்வு - ஆவிக்குரிய பிரகாரமாக உணர்வுள்ளவர்களாயிருப்பது தலைமைத்துவத்துக்கு மிகவும் அவசியமானதாகும். ஆம், சபை என்பது ஜனங்களாலானது. சபையிலுள்ளவர்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறார்கள். சபை ஐக்கியம் என்பது பார்ப்பதற்கு ஒரு சமூகக் கூடம் போலிருப்பதாலும், அதைவிட மேலானது அக்கூட்டம் இயேசு கிறிஸ்துவோடு உடன்படிக்கையில் இணைக்கப்பட்டுள்ள நித்திய ஆத்துமாக்களின் கூட்டமாயிருக்கிறது. அதன் அங்கத்தினர்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக போராடக்கூடியவர்களாக இருக்கிறார்கள். மேலும், சபையின் பணிகள், ஆவிக்குரிய கண்ணோட்டத்தில்தான் செயல்படுத்தப்படுகிறது. ஆவிக்குரிய தலைவர்கள், நித்தியத்திற்காக, ஆத்துமாக்களை கர்த்தருடைய காரியங்களில் பற்றுதலாயிருக்கும் படியாகவும், கர்த்தரை உண்மையாகச், சேவிக்கும்படியாகவும் அவர்களை உற்சாகப் படுத்தவேண்டிய பொறுப்பு தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

ஆவிக்குரிய தலைவர்கள், சபையில் சகோதர சகோதரிகள் எதிர்கொள்ளும் ஆவிக்குரிய போராட்டங்களைக் குறித்தும் உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும். அங்கத்தினர்களுடைய ஆவிக்குரிய ஆரோக்கியமும் முன்னேற்றமும், இவர்களுடைய தொடர் நோக்கமாயிருக்க வேண்டும். மேலும், அவர்கள் சின்னச் சின்ன பிரச்சனைகள் தனிப்பட்ட செயல்திட்டங்கள் மற்றும் தனிப்பட்ட குறைகளால் விசுவாசிகள் ஆக்கிரமித்து விடாதபடி, அவர்களைத் திசைதிருப்பி அப்படிப்பட்ட நேரங்களில் அவர்களுக்கு உதவிட வேண்டும். தேவனைக் கனப்படுத்துகிற காரியங்கள் நோக்கங்கள், முயற்சிகள் போன்றவற்றில் கவனம் செலுத்தவேண்டும். இவைகளை மந்தைக்கு [சபைக்கு] முன் மாதிரியாக வைக்க வேண்டும். ஜனங்களைச் சரியான சத்தியத்தில் வழிநடத்துகிறவர்களாக இருக்க வேண்டும். மாறாக, அவர்களைக் கடிந்து கொள்ளுகிறவர்களாக இருக்கக்கூடாது. சபையாரிடம் அவர்கள்

பேசும் பேச்சின் மூலமாகத் தேவன் கனப்பட வேண்டும். அதினிமித்தம் சபையானது பலப்படுத்தப்பட வேண்டும். இன்னும், அவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாக ஏவப்படும்போது, ஆவிக்குரிய அறநெறிகளை மற்றவர்களுக்குள் உட்புகுத்துவார்கள். அவர்கள் ஆவிக்குரிய சிந்தையுடையவர்களாக இருந்து நித்தியத்தை மையப்படுத்தி வேலைகளைச் செய்வார்கள். மற்றவர்களையும் அதைநோக்கி வழி நடத்துவார்கள்.

தேவபக்தியுள்ள தலைவர்களின் உண்மையான இரக்கம் மற்றும் அக்கறை எல்லா இடங்களிலும், எல்லாவற்றிலும் வெளிப்படையாகத் தெரிகிறது. அவர்களுடைய இரக்கம் மற்றவர்களைப் பலப்படுத்துகிறது. இதுவே, மற்றவர்கள் சேவை செய்யவும், சாதிக்கவும் அவர்களை உற்சாகப்படுத்துகிறது. மேலும், அவர்கள், தாங்கள் மற்றவர்களுக்கு ஊழியம் செய்கிறோம் என்பதையும், நித்தியத்திற்கு ஆத்துமாக்களை அழைத்துச் செல்ல ஆத்துமாக்கள் மீது கவனமாக இருக்கிறோம் என்பதையும் அறிந்திருக்கிறார்கள்.

**உண்மை** – ஆவிக்குரிய உத்தமத்திற்கு உண்மைத்தன்மை அவசியமாயிருக்கிறது. நேர்மை, வெளிப்படைத்தன்மை, தைரியம், அன்பு, அக்கறை போன்றவைகளையெல்லாம் உண்மையான ஆவிக்குரிய தன்மைக்கு அடையாளங்களாயிருக்கின்றன. ஆவிக்குரிய தலைவர்கள் தாங்கள் என்ன சொல்லுகிறார்களோ அதன் பொருளாகத் திகழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் வெளிப்படைத் தன்மையுடனும், அன்புடனும் பேசுவதின் அவசியத்தை நன்கு அறிந்திருக்கிறார்கள். கிறிஸ்துவை நேசித்து, அவரைப் பின்பற்றுகிற படியால், சத்தியத்தை அன்புடன் கைக்கொள்ளும் கட்டளை பெற்றிருக்கிறார்கள். அவர்கள் சத்தியத்தை அன்புடன் கைக்கொள்ளும்படி, தங்களை அற்பணித்திருக்கிறபடியால் அவர்கள் என்ன பேசுகிறார்களோ அதைக்குறித்து ஒத்திகை பார்க்க வேண்டியதில்லை. அன்பு எப்போதுமே ஒரேமாதிரியான, தூய்மையான பாதையில் பயணிக்கும் என்பதையும் அவர்கள் அறிந்தே இருக்கிறார்கள். அவர்கள் அன்புடன் சத்தியத்தைக் கைகொள்ளுகிறபடியால், பொய்த் தோற்றத்தையோ அல்லது மாயையையோ அவர்களால் ஒழித்துப்போட முடியும். தேவ பக்தியுள்ள தலைவர்கள் தங்கள் அன்றாட வாழ்விலும், அவர்களுடைய எல்லாச் செயல்பாடுகளிலும் அன்பையும், சத்தியத்தையும், உயர்த்திப் பிடிக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

**எளிமை:-** ஆவிக்குரிய தலைவர்கள் கடமையை இறுமாப்பாக அல்ல, பொறுப்பாகவும் அதே நேரத்தில் அதை எளிமையாகவும் செய்ய

வேண்டும். சத்தியம் மற்றும் நீதி தன்னகத்தே பெற்றுள்ள மாபெரும் அழகைக் கருத்தில் கொண்டு அவைகள் தங்கள் மூலமாக வெளிப்பட அவர்கள் ஆசைப்படவேண்டும். மேலும், ஆவிக்குரிய தலைவர்கள் தங்களை வழிகாட்டிகளாகப் பார்க்கிறவர்களுடைய இருதயங்களில் சத்தியம் மற்றும் நீதியின் தன்னிகரற்ற தன்மையைப் பிரயாசப்பட்டு உட்புகுத்த வேண்டும். எப்படி ஒரு நகை வியாபாரி நகையின் அழகிற்கும், மதிப்பிற்கும் குறைச்சலையோ, மதிப்பிழப்பையோ ஏற்படுத்துகின்ற எந்த ஒரு காரியத்தையும் செய்யமாட்டாரோ அதைவிட மேலாக, ஆவிக்குரிய தலைவர்களும், தேவனுடைய சத்தியத்தின் மதிப்பைக் கெடுக்கிற அல்லது குறைக்கிற எந்தவொரு காரியத்திலும் ஒருபோதும் ஈடுபடமாட்டார்கள். கிறிஸ்துவை சேவிப்பவர்கள் எளிமையான, உண்மையான வார்த்தைகளைக் கொண்டு ஜனங்களை உற்சாகப்படுத்துவார்கள். அவர்கள் பிரயோஜனமற்ற வார்த்தைகள் மற்றும் வார்த்தை ஜாலங்களைத் தவிர்ப்பார்கள் அவர்கள் மனுஷர் காணவேண்டுமென்றோ அல்லது மனுஷரைப் பிரியப்படுத்த வேண்டுமென்றோ ஊழியம் செய்வதில்லை.

அவர்களுக்குப் பதவி ஆசை இருப்பதுமில்லை. மனிதர்களுடைய மகிமையைத் தேடுவதுமில்லை. அவர்கள் தங்களை அல்ல, தாங்கள் செய்யும் வேலையைத் தான் முக்கியமாகக் கருதுவார்கள். அவர்கள் சுயநலம் மற்றும் சுய இஷ்டத்தின் அபாயங்களை நன்றாக அறிந்தவர்கள். அவர்களுடைய இருதயங்கள் தேவன் மீதான அன்பினால் ஆளப்படுகிறபடியால், அவர்கள் கிறிஸ்துவை உயர்த்த நாடுகிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் என்பதில் மட்டுமே திருப்தி கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

நீங்கள் மேற்சொல்லப்பட்ட குணாதிசயங்களை உடைய ஆவிக்குரிய தலைவராக கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்கிறீர்களா? ✞

---

### தெரிந்துகொள்ளுதல்

★ மோசே "அநித்தியமான பாவசந்தோசங்களை அனுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே" தெரிந்துகொண்டார்.

★ யோசுவா " நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்" என்று கர்த்தரை சேவிப்பதைத் தெரிந்து கொண்டார்.

★ சங்கீதக்காரனாகிய தாவீதும் மோசே மற்றும் யோசுவாவைப்போல சரியான ஒன்றைத் தெரிந்துகொண்டார். சங்கீதம் 119 : 30 ல் அவர் " மெய்வழியை நான் தெரிந்துகொண்டு உம்முடைய நியாயங்களை எனக்கு முன்பாக நிறுத்தினேன் " என்று சொன்னார்.

# இயேசு கிறிஸ்து கட்டின சபை

## The Church that Jesus Built

Charles E. Burch

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கட்டின சபை தீர்ககதரிசனத்தின் நிறைவேறுதலாகும். ஏசாயா தீர்க்கதரிசி இவ்விதம் தீர்க்கதரிசனம் உரைத்தார். கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடி வருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும் (ஏசாயா 2:2,3). இந்தத் தீர்க்கத்தரிசனங்களிலிருந்து நாம் அநேகங் காரியங்களைக் கற்றுக்கொள்ள முடியும்.

முதலாவது, கடைசிநாட்கள் என்று பார்க்கிறோம். அப்போஸ்தலனாகிய பேதுரு அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள நிகழ்வுகள், குறிப்பாக சபை ஸ்தாபிக்கப்பட்ட நிகழ்வுகளையெல்லாம் கடைசி நாட்கள் என்று சொல்லுகிறார். இரண்டாவது, ஏசாயா கர்த்தருடைய ஆலயம் என்று பேசுகிறார். கர்த்தருடைய ஆலயம் என்பது கர்த்தருடைய சபையாயிருக்கிறது. மூன்றாவது, சபை எருசலேமிலிருந்து வெளிப்படும் என்று எழுதப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில், சபை எருசலேமில் ஆரம்பமானது என்று காண்கிறோம். ஆகவே, ஏசாயா கர்த்தருடைய சபையின் வருகையைப் பற்றி முன்னறிவித்திருக்கிறார்.

நம் இரட்சகர் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாக, அவர் இவ்விதமாக வாக்குத்தத்தம் பண்ணினார். பேதுரு அவரை ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அறிக்கை பண்ணின பின்பு (மத்.16:16) கிறிஸ்து பேதுருவை நோக்கி: நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை (மத்.16:18) என்று வாக்குரைத்தார். அதாவது, இங்கே நம் கர்த்தர் தம்முடைய சபையைக் கட்டுவதாக வாக்குத்தத்தம் பண்ணினார். நான் என் சபையைக் கட்டுவேன் என்று அவர் சொன்னதைக் கவனியுங்கள். சபை என்னுடையது என்று அவர்

சொல்லும்போது, சபை அவருடையது என்று நாம் அறிந்து கொள்கிறோம்.

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு சபை மூப்பர்களிடம் சொல்லும்போது, இயேசு கிறிஸ்து தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்த சபை என்று சொல்லுகிறார் [அப்.20:28]. ஆகையால், கர்த்தருடைய சபை அவருடையது, மாறாக, மனிதனுடையது அல்ல. மேலும், தொடர்ந்து நீங்கள் கவனிக்கும்போது, கிறிஸ்து என் சபையைக் கட்டுவேன் என்று சொன்னார். என் சபைகள் என்று சொல்லாமல் என் சபை என்று ஒருமையில்தான் பேசுகிறார். பன்மையில் பேசவில்லை. பல பெயர்களுள்ள சபைகள் இப்பூமியில் இருக்கவேண்டும் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உபதேசிக்கவில்லை. ஆனால், தன்னை விசுவாசிக்கிறவர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று ஜெபித்தார். **அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன்** [யோவான் 17:21].

நம் ஆண்டவர் கல்லறையிலிருந்து எழுந்தபிறகு, வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார் [மத்.28:18]. ஆகவே, நமதாண்டவர் ஏற்கனவே, சகல அதிகாரத்தையும் பெற்றுவிட்டார். இதைவைத்துப் பார்க்கும்போது கர்த்தருடைய சபை அல்லாமல், வேறொரு சபையைத் தொடங்குவதற்கு எந்த மனிதருக்கும் அதிகாரம் இல்லை.

இன்றைய நாட்களில் காணப்படும் பலதரப்பட்ட சபைகள், எல்லோரும் ஒன்றாயிருக்க வேண்டுமென்ற தேவனுடைய திட்டத்தோடு முரண்படுகிறது. முடிவில், இயேசு கிறிஸ்து சபையை பிதாவினிடத்தில் ஒப்புக் கொடுப்பார். அதன் பின்பு முடிவு உண்டாகும். அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும், வல்லமையையும் பரிகரித்து தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். [1கொரி.15:24]. அப்படி பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் சபையில் நீங்கள் இருக்கிறீர்களா? இல்லையென்றால் தாமதம் வேண்டாம். இன்றே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, அவர் நாமம் தரிக்கப்பட்ட சபையில் அங்கம் வகித்து ஆசீர் பெறுங்கள்! ✞

# சரியான தெரிந்து கொள்ளுதல் !
# Right Choice

யோசுவா ஜனங்களை அழைத்து யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள் என்று கட்டளையிடுகிறார். வேதாகமத்தில் தெரிந்துகொள்ளுதல் என்று வரும்போது, சரியானதைத் தெரிந்துகொண்ட தேவதாசர்களை நாம் காண முடியும்.

**மோசே:** எகிப்தின் சகல சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்த மோசே, பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அநுபவிப்பதைத் தெரிந்து கொண்டார் என்று (எபி. 11:25) எபிரெயர் ஆசிரியர் எழுதுகிறார்.

**தாவீது:** சங்கீதக்காரனாகிய தாவீதுக்கு எதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்கிற அவசியம் ஏற்பட்டபோது, அவர், யோசுவாவைப் போல, மோசேயைப்போல மிகச் சரியானதைத் தெரிந்து கொண்டார். சங்கீதம் 119:30-ல் மெய் வழியை நான் தெரிந்து கொண்டு உம்முடைய நியாயங்களை எனக்கு முன்பாக நிறுத்தினேன் என்று சொல்கிறார்.

**மரியாள்:** லாசருவின் சகோதரியாகிய மரியாள் சரியானதைத் தெரிந்து கொண்டாள். இயேசு கிறிஸ்து இவளைப் பற்றிச் சொல்லும் போது, **மரியாள் தன்னைவிட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள் என்றார்.** லூக்கா 10:38 – 42 – ம் வசனப்பகுதியில், பின்பு அவர்கள் பிரயாணமாய்ப் போகையில் அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார். அங்கே மார்த்தாள் என்னும் பேர் கொண்ட ஒரு ஸ்திரீ அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக்கொண்டாள். அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள். அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள். மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, நான் தனியே வேலை செய்யும்படி என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார். நீங்கள் எதைத் தெரிந்துகொண்டிருக்கிறீர்கள்? அந்தத் தெரிந்து கொள்ளுதல் உங்களைப் பரலோகத்திற்கு அழைத்துச் செல்லுமா? ✞

# எது சரியானது என்பதை எப்படிச் சொல்ல முடியும்?

## *How Can We Tell what is Right?*

Albert Gardner

நாம் வீடுகட்டும்போது அளவுகோலைக் கொண்டு அளக்கிறோம். பொருட்களை வாங்கும்போது எடைபோட்டு வாங்குகிறோம். வங்கிக்கணக்கில் சரியான தொகையைக் கணக்கிட்டுத்தான் வரவு செலவு கணக்குப் பார்க்கிறோம்.

ஆனால், மதசம்பந்தமான காரியங்களில் உண்மையை நாம் எப்படித் தீர்மானிக்கிறோம்? இதைக்குறித்து நாம் வாக்கெடுப்பு நடத்தலாமா? எல்லோரும் ஒரே காரியத்தைச் செய்தால் அது சரியாகி விடுமா? மக்களில் அநேகர், ஒரு காரியத்தை விசுவாசித்து அதை நடைமுறைப்படுத்தினால் அந்தக் காரியம் சரியாகி விடுமா? உலகப் பிரகாரமான காரியங்களில் எது சரியானது என்பதைத் தீர்மானிக்க மேற்சொல்லப்பட்ட வழிமுறைகளை நாம் பின்பற்றுவதில்லை. அப்படியிருக்கும்போது, மதசம்பந்தமான காரியங்களில் நாம் ஏன் அப்படிச் செய்யவேண்டும்? நம்முடைய ஆத்துமா இம்முழு உலகத்தை விட மதிப்புமிக்கது. எனவே, எது சரியானது என்பதை உண்மையான சத்தியத்தைக் கொண்டுதான் தீர்மானிக்க வேண்டும்.

### எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிற வார்த்தைகள்தான் கடைசி வார்த்தைகளாயிருக்கிறது

பரலோகம் நம்முடைய இரட்சிப்பின் விருப்பமாயிருக்கிற படியால், தேவன், இயேசு கிறிஸ்துவில் இரட்சிப்பை வெளிப்படுத்தி, பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு எழுதிக் கொடுத்திருக்கிறார். மனிதர்கள் தேவனுடைய வார்த்தைகளோடு ஒன்றைச் சேர்க்கும்போது அல்லது அதிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போடும்போது அது மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். வேதாகமம் ஓர் வியத்தகு புத்தகம்! ஏனென்றால், இது பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டது. அதில் யூதர்களுக்கு இப்படிப்பட்ட எச்சரிப்பு விடுக்கப்பட்டது. **நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம்; அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்** (உபா.4:2).

அப்போஸ்தலனாகிய பவுல், 1கொரி.4:6-ல், கிறிஸ்தவ வாழ்க்கைக்கான திறவுகோலைக் கொடுத்திருக்கிறார். சகோதரரே எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ண வேண்டாமென்று நீங்கள் எங்களாலே கற்றுக்கொள்ளவும் என்றும் வேதாகமத்தின் கடைசிப் புத்தகமான வெளிப்படுத்தின விசேஷத்தில், தேவனுடைய வார்த்தைகளோடு கூட்டினாலோ, வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டாலோ அது எப்படிப்பட்ட மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் கடுமையான எச்சரிப்பு விடுக்கப்பட்டிருக்கிறது (வெளி.22:18,19).

## நமக்கு இது எப்படிப் பொருந்துகிறது?

கர்த்தருடைய பந்தியில் நாம் எப்போது பங்கேற்கிறோம்? இங்கே, கேள்வி, பெரும்பாலானவர்கள் எப்போது பங்கேற்கிறார்கள் என்பதல்ல, மாறாக, வேதாகமத்தை நாம் இறுதி ஆதாரமாக, அளவுகோலாக ஏற்றுக்கொண்டிருப்பது உண்மையானால், கர்த்தருடைய பந்தியில் நாம் எப்படி பங்குபெற வேண்டுமென்பதைக் குறித்து வேதாகமம் நமக்குப் போதிப்பது என்ன? வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான் (அப்.20:7). இதினிமித்தம், கர்த்தருடைய பந்தியை நாம் எப்போது அநுசரிக்க வேண்டும் என்பது பற்றி நமக்கு ஆதாரமான, ஆணித்தரமான, ஒரே போதனை, வாரத்தின் முதல் நாளிலே நாம் கர்த்தருடைய பந்தியை அநுசரிக்க வேண்டும் என்பதாகும். சபை வரலாற்றில் வேதாகமத்தில் உள்ள சபை வாரந்தோறும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றது என்பதைப் பரிசுத்த ஆவியானவர் தமது வாக்கியங்களில் விளம்பியிருக்கிறார்.

மறுபடியும், யார்? ஏன்? மற்றும் எப்படி? போன்ற கேள்விகள் ஞானஸ்நானம் சம்பந்தமாகவும் கேட்கப்படுகிறது. இதற்கான விளக்கத்தை மனிதர்களிடமிருந்து ஒருபோதும் எதிர்பார்க்கவே முடியாது. மாறாக, தேவ ஆவியினால் ஏவப்பட்ட வசனங்களிலிருந்துதான் இதற்கானவைகளை எதிர்பார்க்க முடியும். ஏனெனில், வேதாகமம்தான் இரட்சிப்பின் வழியை வலியுறுத்தும் வழிகாட்டியாக இன்றளவும் மிளிர்கிறது.

யாருக்கு தேவனுடைய வார்த்தையைக் கேட்டு உண்மையாய் மனந்திரும்பி கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று

அறிக்கையிடு பவர்களுக்கு. வேறுவிதமாகச் சொன்னால் தேவனுடைய வார்த்தையால் தங்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களுக்கு [அப்.2:38; 8:30, 17:30 மாற்கு 16:16 ரோமர் 10:10].

### ஏன்?

இரட்சிக்கப்படுவதற்கு அதாவது பாவமன்னிப்பைப் பெற்று, பாவங்கள் கழுவப்படுவதற்கு [மாற்கு 16:16; பேதுரு 3:21; அப்.22:16].

### எப்படி?

தண்ணீருள்ள ஓர் இடத்திற்கு வர வேண்டும். தண்ணீருக்குள் இறங்கி அதற்குள் மூழ்கி, எழுந்த பிறகு தண்ணீரிலிருந்து வெளியே வர வேண்டும். அப். 8:35-39; ரோமர் 6:3-5].

## உண்மையான ஆராதனையின் அளவுகோல் என்ன?

ஜனங்களால், ஆராதித்து விட்டு, உண்மையான ஆராதனையை அறிந்துகொள்ளாமல் இருக்கமுடியும். அத்தேன பட்டணத்திலிருந்து ஏராளமான விக்கிரகங்கள், அப்பட்டணத்து ஜனங்கள், அதிகமான தேவபக்தியுள்ளவர்களாக இருந்தார்கள் என்பதற்குச் சான்றாக இருக்கின்றன. எப்படியென்றால், நான் சுற்றித் திரிந்து உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன். நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன் [அப்.17:23] என்றார் அப்போஸ்தலன் பவுல்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஜனங்களிடத்தில் தேவபக்தியை உண்டாக்க வரவில்லை. ஏனென்றால், அவர்கள் ஏற்கனவே தேவபக்தியுள்ளவர்களாகத்தான் இருந்தார்கள். ஆனாலும், அவர்கள் சரியான ஆராதனையை ஏற்றெடுக்க உதவினார். தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் [யோவான் 4:24].

**தேவன் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆராதனை கீழ்க்காணும் தன்மைகளைக் கொண்டிருக்க வேண்டும்**

- தேவனுக்கு ஏறெடுக்கப்பட வேண்டும்
- சரியான மனநிலையோடு ஏறெடுக்கப்பட வேண்டும்
- தேவனுடைய வார்த்தையின்படி ஏறெடுக்கப்பட வேண்டும்.

மேற்சொல்லப்பட்டவைகளில் ஏதாவது ஒன்று குறைவுபட்டால் கூட, அது நம்முடைய ஆராதனையை வீணான ஒன்றாக மாற்றிவிடும் [மத்தேயு 15:9]. இத்தன்மைகள் தான் உண்மையான ஆராதனைக்கு அளவுகோலாக இருக்கின்றன. இதை ஒருவராலும் மாற்ற முடியாது. ஆனால், இந்த அளவுகோலைக் கொண்டு நம்முடைய ஆராதனையை தற்பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

## விக்கிரகங்களைப் பற்றி எப்படி?

அது ஒரு பொருட்டே அல்ல. தேவனுக்கு மாத்திரமே நாம் ஆராதனையை ஏறெடுக்க வேண்டும். ஜனங்கள் உண்மையற்ற மனநிலையில் தேவனை ஆராதிக்க முடியும்? ஜனங்கள் சில வேளைகளில் தாழ்மை மற்றும் கீழ்ப்படிதல் இல்லாமல், தேவனை ஆராதிக்கிறார்கள். அப்படிச் செய்யும்போது உண்மையான ஆராதனையை ஏறெடுப்பதில்லை.

தேவனுடைய அங்கிகாரத்தோடு நாம் கைதட்டலாமா, இசைக்கருவிகளைப் பயன்படுத்தலாமா? இது தேவனுடைய வார்த்தையின்படி இருக்க வேண்டும். இசைக்கருவிகளைப் புதிய ஏற்பாடு எங்கே அங்கீகரிக்கிறது?

வேதாகமம் தான் நம் வாழ்வின் வழிகாட்டியாக இருக்கிறது. அதைப் புரிந்துகொண்டால் பிரச்சனை எதுவுமில்லை. ஆனால், பிரச்சனை என்னவென்றால், வேதாகமம் இப்படித்தான் சொல்லுகிறது என்பதை நான் அறிவேன். ஆனால், இந்த நவீன காலத்தில் அதை நாம் செய்ய வேண்டுமென்று நான் நினைக்கவில்லை என்று அநேக ஜனங்கள் சொல்லுகிறார்கள். ஆனால், விசுவாசத்தை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுகிறார்கள். இம் மனநிலை மாறி, வேதாகமம் காட்டும் வெளிச்சத்தின் பாதையில் நடப்போம். அப்பாதைதான் பரலோகத்திற்கு நேராக நம்மை வழிநடத்துகிறது. ✝

வாழ்வதற்கான உபதேசம்

# புரிந்துகொள்வதற்கான தேவை

## The Need to Understand

*Hollis Miller*

கிறிஸ்தவ விசுவாசத்தின் மையம், ஒருவர், சபையில் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறார் அல்லது முழுக்குடும்பமும் ஞாயிறு ஆராதனைக்குச் செல்வதால் வாழ்க்கை எவ்வளவு நன்றாக இருக்கிறது என்பதைப் பொறுத்து அமையாது என்பதைக் கிறிஸ்தவர்கள் புரிந்து கொள்வது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சபையில் மகிழ்ச்சி மற்றும் ஞாயிறு ஆராதனையில் குடும்பமாகக் கலந்து கொள்வதால் ஏற்படும் நல் உணர்வு போன்றவைகளெல்லாம் ஒருவர் கிறிஸ்தவராக இருப்பதனால் கிடைக்கும் கூடுதலான ஆசீர்வாதங்களாகும். இவைகள் நம் ஆன்மாவுக்கான விசுவாசத்தின் மையம் அல்ல.

கிறிஸ்தவ விசுவாசத்தின் மையம் இயேசு கிறிஸ்துவாக இருக்கிறார். நம் வாழ்க்கையில் அவர் மையமாக இருக்கும்போது நாம் இக்கட்டில் இருந்தாலும் சரி, அமைதியான சூழ்நிலையில் இருந்தாலும் சரி நாம் மகிழ்ச்சியாக இருக்க முடியும். மாறாக, இவ்வுலகப் பிரகாரமான சந்தோஷங்களை ஒரு கிறிஸ்தவன் மையமாகக் கொண்டிருந்தால் ஒருவர் கோப்பையில் தேநீரை நிரப்புவதற்கு பதிலாக, தேநீரின் நறுமணத்தை மாத்திரம் நிரப்புவதற்குச் சமமாகி விடும்.

அப்போஸ்தலனாகிய பவுலிடம் ஒரு கிறிஸ்தவன் போய் தன்னுடைய விசுவாசம் மகிழ்ச்சியை அல்ல, மாறாக, துக்கத்தைதான் ஏற்படுத்தியிருக்கிறது என்று சொன்னால், அது அவருக்கு எவ்வளவு பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் என்பதைச் சற்று கற்பனை செய்து பாருங்கள். பவுல் நிச்சயமாக அந்த நபரிடம் உன் பாவங்கள் மன்னிக்கப்பட வில்லையா? உனக்குப் பரலோக நம்பிக்கை இல்லையா? உனக்கு ஜெபிக்கும் சிலாக்கியம் கொடுக்கப்படவில்லையா? நீ தேவனை ஆராதிப்பதில்லையா? சக கிறிஸ்தவர்கள் உனக்குச் சகோதரர்கள் இல்லையா? உன் விசுவாசம் மகிழ்ச்சிக்குப் பதிலாக எப்படி துக்கத்தை உனக்கு ஏற்படுத்தியிருக்க முடியும்? என்று பல கேள்விகளைக் கேட்டிருப்பார்.

ஆகையால் ஒருவர் கிறிஸ்தவனாயிருப்பது வேறு, சபையில் இருப்பது வேறு என்றில்லாமல், ஒருவர் நல்ல கிறிஸ்தவனாக இச்சமுதாயத்தில் வாழ வேண்டும். அப்படிப்பட்டதொரு வாழ்வை வாழ வேண்டுமென்றால், தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் உபதேச வாக்கியங்களுக்கு தன்னை முழுமையாகக் கீழ்ப்படுத்த வேண்டும். மேலும், கிறிஸ்தவ மார்க்கமானது பாடுகள், உபத்திரவங்கள் மற்றும் மகிழ்ச்சியான தருணங்கள் என்று எல்லாச் சூழ்நிலைகளையும் ஏற்றுக்கொள்ளுகிற, எதிர்கொள்ளுகிற மார்க்கமாயிருக்கிறது. இதைப் புரிந்துகொண்டு வாழ்வதுதான் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. ஏனென்றால், கிறிஸ்தவ விசுவாசத்தின் மையமாக இயேசு கிறிஸ்து இருக்கிறார். ✝

# தேவனுடைய முழுமையான ஆலோசனை

## The Whole Counsel Of God

*Steve Vice*

அப்போஸ்தலருடைய நடபடிகள் 20:26-ல் அப்போஸ் தலனாகிய பவுல் தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல் எல்லாவற்றையும் நான் உங்களுக்கு அறிவித்தபடியினாலே எல்லாருடைய இரத்தப் பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றைய தினம் சாட்சிகளாக வைக்கிறேன் என்று சொல்கிறார். ஜனங்கள் தேவனுடைய சித்தத்தைப் பற்றிய முழுமையான புரிந்து கொள்ளுதலைப் பெற்றிருக்க வேண்டுமென்று பவுல் விரும்பினார். இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரை அப்போஸ்தலர்களிடத்தில் அனுப்புவதற்கான இரண்டு காரணங்களாவன: 1. கிறிஸ்து அப்போஸ்தலர்களிடத்தில் சொன்ன எல்லாக் காரியங்களையும் நினைப்பூட்டும்படியாகவும் [யோவான் 14:26;2]. 2. சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தும்படியாகவுமே [யோவான் 16:13].

நம் தேசத்தின் நீதி மன்றங்களில் குற்றவாளியிடம், திரும்பத் திரும்ப நான் சொல்வதெல்லாம் உண்மை, உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை என்று வாக்கு மொழியைப் பெற்றுக் கொள்கிறார்கள். பாதி உண்மை பொய்க்குச் சமமானது என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள். ஆனால், நீதி நிலைநாட்டப்பட வேண்டுமென்றால், ஒட்டு மொத்த உண்மையும் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

நீ செய்ய வேண்டியதெல்லாம் இயேசுவை உன் இருதயத்தில் ஏற்றுக் கொள்; நீ இரட்சிக்கப் படுவாய் என்று சாதாரண மக்களைப் பார்த்து மதத் தலைவர்கள் சொல்வது சகஜமாகிவிட்டது. இது கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், வேதாகமம் இப்படி போதிப்பதில்லையே. யோவான் 1:12 இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதைக் குறித்துப் பேசுகிறது. ஆனால், இவ்வசனம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்பவர் இரட்சிக்கப்படுவார் என்று சொல்வதில்லையே. இது, இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களுக்கு தேவனுடைய பிள்ளையாகும்படியான அதிகாரம் கொடுக்கப்படும் என்று தான் சொல்கிறது.

ஒருவர் இரட்சிப்புப் பற்றி அறிந்துகொள்ள வேண்டியதெல்லாம் ரோமர் 10:9,10 வசனங்களில் இடம் பெற்றிருக்கிறது. ரோமர் 2:4 ல் தேவ

ஆவியினால் ஏவப்பட்ட எழுத்தாளர் மனந்திரும்புதலைப் பற்றிப் பேசினார். மனந்திரும்புதல் இல்லாமல் இரட்சிப்பு இல்லை என்பதை நாம் அறிந்திருக்கிறோம் [லூக்கா 13:3]. ஆனால், ரோமர் பத்தாம் அதிகாரம் மனந்திரும்புதலைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. எனவே, ரோமர் 10:9,10. ரட்சிப்பு என்பதற்கு தேவனுடைய முழுமையான ஆலோசனையாக இல்லை.

இன்னும் சிலர், எபேசியர் 2:8,9 வசனங்கள் இரட்சிப்பு சம்பந்தமாக அதிகாரப் பூர்வமான, இறுதியான வசனங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால், இது எபேசு பட்டணத்திலிருந்த கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் தங்களுக்கிருந்த விசுவாசத்தை அறிக்கை செய்வதை வியர்த்தமாக்குகிறது [அப்போஸ்தலர் 19:19]. மேலும், நாம் எபேசுப் பட்டணத்துக் கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் பெற்றதையும் மறந்து விடக்கூடாது [அப்போஸ்தலர் 19:5: எபே. 4:5] இப்படிப்பட்ட காரியங்களில் ஒருவர் தேவனுடைய முழுமையான ஆலோசனையை அறிந்துகொள்ள வேண்டுமென்றால், காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று வேதவசனங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும் [அப்போஸ்தலர் 17:11].

நம்மில் பலருக்கு வேதாகமத்தின் முக்கிய வசனமாகிய யோவான் 3:16 – ஐ மேற்கோள் காட்ட முடியும். ஆனால், நீங்கள் அதை மேற்கோள் காட்டும்போது கெட்டுப்போகாமல் என்பதற்குப் பதிலாக **கெட்டுப்போக மாட்டேன்** என்றும் வார்த்தையை உட்புகுத்துகிறீர்களா? ஒருவர் அப்படிச் செய்தால், அந்த நபர் இயேசு கிறிஸ்துவைப் பொய்யராக்குகிறார். ஏனென்றால், இதே புத்தகத்தில் 8:31–52 மற்றும் 12:42 ஆகிய வசனங்களில் அநேகர் கிறிஸ்துவின் பேரில் விசுவாசம் வைத்தார்கள். ஆனால், அவர்கள் இரட்சிக்கப்படவில்லை. யோவான் 3:16 தெளிவாக ஒருவரும் கெட்டுப்போகாமல் என்று சொல்கிறது. வேறுவிதமாகச் சொன்னால், ஒருவர் கெட்டுப்போவதற்கு வாய்ப்பு அதிகமாக இருக்கிறது என்பதையே இது காட்டுகிறது. அப்படி நடக்கக் கூடாது. ஆனால், அப்படி நடக்க வாய்ப்பு இருக்கிறது. ஒருவர் இரட்சிப்பைப் பற்றி எவைகளை அறிந்துகொள்ள வேண்டுமோ அவைகளை யோவான் 3:16 போதிக்கிறதா? அப்படி போதிப்பவர்கள் தேவனுடைய முழுமையான ஆலோசனையை போதிக்கத் தவறி விட்டார்கள் என்று தான் தெரிகிறது.

இயேசு தாமே, ஒருவர் தம்மை விசுவாசிக்க வேண்டும் என்று சொல்லியிருந்தால் அறிக்கையிடுவதும் இரட்சிப்புக்கு அவசியமான ஒன்றாகும் [மத்தேயு 10:32,33]. **நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்** என்று வெளிப்படையாகவே இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார். இந்தக் காரியத்தில் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் முழுமையான ஆலோசனையை நிராகரிக்கலாமா? பரிசேயரும் நியாய சாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாக தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்[லூக்கா 7 :30] நிராகரிப்பது மிகப் பெரிய சேதத்தை எற்படுத்தும். மேற்சொன்ன இவைகளில் மிக முக்கியமானது இரட்சிப்பாகும். ✞

# மாற்றத்திற்கான அழைப்பு

# A Call For Change

*Chad Ezelle*

**ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன் (லூக்கா 9:23).** இயேசு கிறிஸ்து உலக மக்களுக்காக மிகப்பெரிய தியாகத்தைச் செய்திருக்கிறார் என்பதை நாம் அறிந்ததே. இதினிமித்தம் நம்மிடத்தில் கேட்கப்படும் கேள்வியை நாம் நம் மனதில் எப்போதும் வைத்துக்கொள்ள வேண்டும். அக் கேள்வி கிறிஸ்து உங்களுக்குத் தியாகத்தை ஈவாக ஈந்ததின் காரணமாக உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எப்படிப்பட்ட மாற்றத்தைக் கொண்டுவந்திருக்கிறீர்கள்? என்பது.

கிறிஸ்துவுக்கான அர்ப்பணிப்பு வாரந்தோறும் சபைகூடி வருதலோடு நின்று விடுகிறதா? அல்லது கிறிஸ்துவின் தியாகம் இதைவிட அதிகமான மதிப்புள்ளதாக இருக்கிறதா? அப்படித்தான் இருக்கிறது என்று நம்புகிறேன். நீங்கள் உங்களை நேர்மையாகப் பரிசோதித்துப் பார்த்தால், வாரத்தில் ஒரு நாள் அல்லது இரண்டு நாள் கிறிஸ்தவர்களாக இருக்கிறீர்களா?

இது உண்மையானால் இது மாற்றத்திற்கான நேரம். தேவனுக்கு நீங்கள் முதலிடம் கொடுப்பதை விட வேறெந்தக் காரியமும் உங்கள் வாழ்வில் முக்கியத்துவத்தைப் பெற்றுவிடக் கூடாது என்பதில் உறுதியாய் இருங்கள். ஏனென்றால், கிறிஸ்தவம் வாரத்தில் ஒரு நாள் அல்லது இரண்டு நாள் மாத்திரம் அல்ல, அது எல்லா நாட்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

**ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போலக் கவனமாய் நடந்து கொள்ளப் பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள் (எபேசியர் 5:15-17).** ✝

வாழ்வதற்கான உபதேசம்

# இரண்டு அறுவடைகள்

## Two Harvests

*Kingsly Rajan*

**வி**தைப்பைக் குறித்தும், அறுவடையைக் குறித்தும் நாம் வேததாகமத்தில் காண்கிறோம். நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் கூட, மத்.13:30-ல் அறுவடை காலத்தில் களைகளைச் சுட்டெரிப்பதையும், கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பதையும் பற்றிக் கூறுகிறார். இந்த அறுவடையைக் குறித்த கருத்தை வெளி.14 ல் இருந்து தியானிப்போம்.

வசனங்கள் 14 முதல் 16 வரையிலும் ஒரு அறுவடையைப் பற்றியும், வசனங்கள் 17 முதல் 20 வரை மற்றொரு அறுவடையைப் பற்றியும் காண்கிறோம். இவை இரண்டுமே பூமியின் அறுவடைகள். முதலாவது அறுவடை **நன்கு விளைந்த** (வசனம் 15) பயிரைப் பற்றியது. இது நீதிமான்களைக் குறிக்கும் அறுவடை; வேத வசனத்திற்குக் கீழ்ப்படிந்து,இரட்சிக்கப்பட்டு, அந்த இரட்சிப்பை இறுதி வரை காத்துக் கொண்டவர்களைக் குறிக்கும் அறுவடை. மத்தேயு 13-ல் ஆண்டவர் குறிக்கும் அறுவடையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இவர்கள் களஞ்சியத்தில் (பரலோகத்தில்) பரமனோடு இருக்கும்படி அறுக்கப்பட்டவர்கள். தங்கள் **நீதியின் பலனை** அடையும்படி அறுவடை செய்யப்பட்டவர்கள்.

இரண்டாவது அறுவடையோ, பழுத்த திராட்சைப் பழங்களுக்கானது. இங்கு அறுக்கப்படுவது திராட்சைக் குலைகளானாலும், அவை **அநீதியின்** விளைவாக இருக்கிறது என்பதை வசனம் 19ல், **பூமியின் திராட்சைப் பழங்களை அறுத்து, தேவனுடைய கோபாக்கினை என்னும் பெரிய ஆலையிலே போட்டான்** என்று வாசிப்பதிலிருந்து பார்க்கின்றோம். பொதுவாக, திராட்சைப் பழங்கள் நற்பலனுக்கு ஒப்பாகக் கூறப்பட்டாலும், இங்கு அறுவடைக்கு சொல்லப்படும் திராட்சை பழங்கள் உபாகமம் 32:32.33 ல் கூறப்பட்ட பித்தும், கசப்பும், கொடிய விஷமும் உடையதாக இருந்திருக்க வேண்டும். அதினால்தான், அது அறுவடை செய்யப்பட்டு தேவனுடைய கோபாக்கினை என்னும் ஆலையிலே போடப்படுகிறது. மேலும், அந்த ஆலை நகரத்திற்கு புறம்பே இருந்தது (நரகம்), மிதிக்கப்பட்டது (தண்டனை), மேலும் இரத்தம் புறப்பட்டது (கொடிய வேதனை) என்று வாசிக்கின்றோம். இந்த அறுவடையையும் ஆண்டவருடைய வார்த்தையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் (மத்.13:30), இது களையாகவும் (பயனற்றது), சுட்டெரிக்கப்பட வேண்டியதாகவும் இருப்பதினால், அநீதியின் பலனை அடைபவர்களைப் பற்றியும், வேத வசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் நிலையையும், இரட்சிப்பை

பாதுகாத்துக் கொள்ளாதவர்களின் பரிதாப முடிவையும் பற்றி குறிப்பிடுகின்றது.

இங்கே இரண்டு அறுவடை என்பது, இரண்டு விதமான விதைகளை அல்லது இரண்டு விதமான வாழ்க்கை முறையை அல்லது பிரயாசங்களைக் குறிக்கின்றது.

நாம் தேவனுடைய வார்த்தையை விதைக்கக்கூடும் அல்லது மனிதர்களுடைய பாரம்பரியத்தை விதைக்கக்கூடும்! லூக் 8:11-ல், விதை என்பது தேவனுடைய வசனம் என்று கூறப்படுகின்றது. அந்த தேவ வசனத்தை பேதுரு அப்.2-ல், விதைத்ததினால் கிறிஸ்தவர்கள் உருவானார்கள். ஆனால், மத்.15:9ல் ஆண்டவர் எச்சரித்துச் சொன்னபடி, மனுஷருடைய கற்பனைகள் வீணான ஆராதனையும், கள்ளப் போதகர்களையும், கள்ளப் போதனையுமே உருவாக்கியது. சரி, இதை பரமபிதா ஏற்றுக் கொள்வாரா எனக் கேட்டால், மத்.15:13-ல் அவை வேரோடே பிடுங்கப்படும் என்கிறார். மேலும், அவை பரம பிதாவினால் நடப்படாதவை, வேத வசனம் என்னும் விதையினால் வளராதவை. ஆகவே, பிரியமானவர்களே! நாம் ஒவ்வொரு நாளும் எப்படிப்பட்ட விதையை விளைவிக்கின்றோம் அல்லது ஏற்றுக் கொள்கிறோம் என்பதைக் குறித்து கவனமாக, எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பரமபிதா நடாத நாற்றெல்லாம் என்றால், வேத வசனத்தினால் உருவாகாத சபைகளெல்லாம் என்பதும் அடங்கும்; மனித போதனைகளால் உருவாகி, செழிப்பாக இருக்கும் சபைகளும் அடங்கும். **தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்; [கலா.6:8].**

நம்முடைய விதைப்பு எப்படியோ, அறுவடையும் அதன் படியே இருக்கும். **மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்** [வசனம்7] என்று வாசிக்கின்றோம். இவ்வுலகில் தேவ பயமின்றி தம் சுய மாம்ச இஷ்டப்படி வாழ்பவர்கள், பரலோகம் செல்லும் எண்ணத்தை விட்டுவிட வேண்டும். அப்படியிராமல், உடனே மனந்திரும்பினால் வாய்ப்பு உண்டு!

யோபு 4:8ல். **நான் கண்டிருக்கிறபடி அநியாயத்தை உழுது, தீவினையை விதைத்தவர்கள். அதையே அறுக்கிறார்கள்** என்று வாசிக்கின்றோம். சரி, எப்படி ஒருவர் மாம்சத்திற்கென்று விதைக்கிறார் என்று பார்த்தால் கலா.5:19-21ல், சில மாம்சத்தின் கிரியைகளைப் பற்றி காண்கிறோம். இவற்றில் நம்முடைய பார்வையில் பெரிய சிறிய பாவங்கள் இரண்டுமே அடங்கும். ஒரு வேளை நம்மிடம், விபச்சாரம், விக்கிரக ஆராதனை போன்ற பாவங்கள் இல்லாவிட்டாலும், இன்னும் பகையையும், விரோதத்தையும், பொறாமையையும், பிரிவினையையும், சண்டையையும் வெளிப்படுத்துபவர்கள் மாம்சத்திற்கென்றே அதாவது, தண்டனைக்கென்றே [வெளி.14:19,20: மத்.13:30] விதைக்கிறார்கள்.

இதில் கவனிக்க வேண்டியது, மாம்ச பேதங்கள் என்னும் மாம்ச விதையும் ஆகும். எந்த சபையாக இருந்தால் என்ன? என்றும், எல்லாரும் விவிலியத்தில் இருந்து தானே போதிக்கிறார்கள்? என்றும் பரந்த மனதோடே நீங்கள் கிறிஸ்தவ மார்க்கத்தை நினைப்பவர்களானால், மார்க்க பேதம் என்னும் மாம்ச விதையை விதைத்து அழிவையே அறுக்கப் போகிறீர்களா! மனித போதனைகளையும் வேத வசனத்தில் சொல்லப்படாத எந்த உபதேசத்தையும் தேவன் எந்நிலையிலும் ஏற்றுக்கொள்ள மாட்டார் [கலா.1:6–9]. இன்றே நித்திய பரலோகத்தைக் குறித்துச் சிந்திப்பீர்!

**சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான். பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான் [2கொரி.9:6]**

நீங்கள் நன்மையை விதைப்பவரானாலும் [வேத வசனம்], தீமையை விதைப்பவரானாலும் [மாம்சத்திற்கென்று] எவ்வளவு விதைக்கிறீர்களோ அவ்வளவு பலன் உறுதி! நாம் தீமையை அல்ல நன்மையையே [ஆவிக்கென்றே] விதைக்க தீர்மானித்துள்ளோம் எனில் கவனிப்போம்:


உங்கள் தாலந்துகளை, நேரத்தை, வாய்ப்புகளை இப்படி அனைத்தையுமே அதிகமாக ஆவிக்கென்று, நீதிக்கென்றும் பயன்படுத்துங்கள் [மத்.25:14–40]. வேலைக்கென்று கொடுக்கும் நேரத்தைவிட, விசேஷங்களுக்கும், பொழுதுபோக்கிற்கும் செழவழிக்கும் நேரத்தை விட, சபையின் விசேஷ கூட்டங்களுக்கும், வேத ஆராய்ச்சிக்கும் ஜெபத்திற்கும் விதைக்க வேண்டும் [அப்.17:11; அப்.11:26]. **கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன் அதையே நாடுவேன் நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும் நான் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்** [சங்.27:4] என சங்கீதக்காரனைப் போல நாமும் நாடுவோமா!

மேலும், உலகக் கிரியைகளிலும், பிரயாசங்களிலும் நாம் பெருகுவதைவிட **கர்த்தருக்கள் நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும் கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக** [1கொரி.15:58]. தொற்கள் [அப்.9:36–39], பர்னபா [அப்.14:36,37], சாரிபாத் ஊர் விதவை [1 இராஜா.17], 2காசு போட்ட ஏழை விதவை [லூக்.21:1–4] போன்ற அநேகர் வேதாகமத்தில் சொல்லப்பட்டபடி ஆவிக்கென்று, வேத வசனத்தின்படி தாராளமாக விதைத்தவர்கள். நாமும் அவ்வாறே விதைப்போம்! ஏனெனில், நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம்! ஆகையால் ஆவிக்கென்று விதைப்போம்! நித்திய ஜீவனைப் பெறுவோம்! ✞

# வசன ஆராய்ச்சி

## ரோமர் 15 : 1 – 13

*Jerry Bates*



1. நம் ஒவ்வொருவரும் அவரவர் வாழ்க்கைக்குப் பொறுப்பாளிகளாக இருக்கிறோம். எனவே, மற்றவர் எதை விசுவாசிக்கிறாரோ அதற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. சரியா அல்லது தவறா?
2. சக கிறிஸ்தவர்களுக்கு என்னுடைய கடமை என்ன?
3. கிறிஸ்து தம்மைத் தாமே பிரியப்படுத்தும் வாழ்க்கைதான் வாழ்ந்தாரா? (வச.3)
4. இன்று நம் வாழ்வில் பழைய ஏற்பாட்டு வசனங்கள் எப்படிப் பிரயோஜனப்படுகின்றன? (வச.4)
5. இன்று நம்முடைய வாழ்க்கையின் நோக்கம் என்னவாக இருக்க வேண்டும்? (வச.6)
6. கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் என்ன செய்ய வேண்டும்? (வச.7)
7. கிறிஸ்து யாருக்கு ஊழியக்காரரானார், எதற்காக அப்படி ஆனார்?(வச.8)
8. புறஜாதிகள் தேவனுக்கு என்ன செய்வார்கள் என்னும் நம்பிக்கை நிலவியது?(வச.9)
9. எந்தப் பழைய ஏற்பாட்டு வசனத்தின் மேற்கோளாக ஒன்பதாம் வசனம் இருக்கிறது?
10. எந்தப் பழைய ஏற்பாட்டு வசனத்தின் மேற்கோளாக பத்தாம் வசனம் இருக்கிறது?
11. புற ஜாதிகள் உட்பட எல்லோரும் கர்த்தரை என்ன செய்ய வேண்டும்?

12. பன்னிரெண்டாம் வசனம் எந்தப் பழைய ஏற்பாட்டு வசனத்தின் மேற்கோளாக இருக்கிறது?

13. ஏசாயா தீர்க்கதரிசியால் பேசப்பட்ட ஈசாயின் வேர் யார்?

14. பவுல் இந்நிருபத்தை வாசிக்கிறவர்கள் ........................ நிரப்பப்பட வேண்டுமென்று ஜெபிக்கிறார்?

15. பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு................................ தேவன்........................ உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் உங்களை நிரப்புவாராக (வச.13)

## வசன ஆராய்ச்சி

அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும். நம்மில் ஒவ்வொருவனும் பிறருடைய பக்தி விருத்திக்கேதுவான நன்மையுடண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக்கடவன். கிறிஸ்துவும் தமக்கேப் பிரியமாய் நடவாமல்; உம்மை நித்திக்கிறவர்களுடைய நிந்தைகள் என்மேல் விழுந்தது என்று எழுதியிருக்கிறபடியே நடந்தார். தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும் படிக்கு முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது. நீங்கள் ஒருமனப்பட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படிக்கு பொறுமையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன் கிறிஸ்து தேவனுடைய மாதிரியின்படியே, நீங்கள் ஏகசிந்தையுள்ளவர்களாயிருக்கும்படி உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வாராக. ஆதலால் தேவனுக்கு மகிமையுண்டாக, கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டதுபோல நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ளுங்கள் மேலும், பிதாக்களுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்களை உறுதியாக்கும்படிக்கு, தேவனுடைய சத்தியத்தினிமித்தம் இயேசு கிறிஸ்து விருத்தசேதமுள்ளவர்களுக்கு ஊழியக்காரரானாரென்றும் புறஜாதியாரும் இரக்கம் பெற்றனிமித்தம் தேவனை மகிமைப்படுத்துகிறார்களென்றும் சொல்லுகிறேன். அந்தப்படி, இதினிமித்தம் நான் புறஜாதிகளுக்குள்ளே உம்மை அறிக்கைபண்ணி, உம்முடைய நாமத்தைச் சொல்லி, சங்கீதம்

பாடுவேன் என்று எழுதியிருக்கிறது. மேலும் புறஜாதிகளே அவருடைய ஜனங்களோடேகூடக் களிகூறுங்கள் என்கிறார். மேலும், புறஜாதிகளே, எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள்; ஜனங்களே எல்லாரும் அவரைப்புகழுங்கள் என்றும் சொல்லுகிறார்.மேலும், ஈசாயின் வேரும் புறஜாதியாரை ஆளும்படிக்கு எழும்புகிறவருமாகிய ஒருவர் தோன்றுவார்; அவரிடத்தில் புற ஜாதியார் நம்பிக்கை வைப்பார்கள் என்று ஏசாயா சொல்லுகிறான். பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத் தினாலும் உங்களை நிரப்புவாராக.

குறிப்பு : அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வசனப் பகுதியில் கிறிஸ்தவர்கள் சக கிறிஸ்தவர்களுக்கு ஆற்ற வேண்டிய பொறுப்புகளைப் பற்றி விவாதிக்கிறார். இதில், ஒருவருடைய பிரதான கடமை என்னவென்றால், சக கிறிஸ்தவர்களை பக்திவிருத்தி அடையச் செய்வதுதான். இதை உறுதி செய்யும் விதமாக பவுல் அப்போஸ்தலன் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை உதாரணமாகப் பயன்படுத்துகிறார். நம் அருமை இரட்சகர் தம்மைத் தாமே பிரியப்படுத்த இவ்வுலகத்திற்கு வராமல் தேவனுக்கும், மனிதனுக்கும், ஊழியம் செய்யும்படி வந்தார். அதுபோல நாமும், மற்றவர்களுடைய நலனுக்காக நம்முடைய சொந்த விருப்பங்களை தியாகம் செய்கிறவர்களாக இருக்க வேண்டும்.

மேலும், கிறிஸ்தவர்களாகிய நாம் ஐக்கியமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். ஒருவர், பலவீனமுள்ளவராயிருந்தாலும், நாம் அவரை ஏற்றுக்கொள்ளும்போது தான், நாம் ஒருவருக்கொருவர் ஐக்கியமாயிருக்க முடியும். எப்படியெனில், இயேசு கிறிஸ்து தாமே நம்முடைய பலவீனங்களின் மத்தியில் கூட நம்மை ஏற்றுக் கொண்டதைப் போல, பலமுள்ளவர்கள் பலவீனர்களை ஏற்றுக் கொண்டு தாங்க வேண்டும். இவ்வொற்றுமையின் நோக்கம் தேவனுடைய நாமம் மகிமைப்பட வேண்டுமென்பது தான். இதை நிறைவேற்ற நாம் ஒருவருக்கொருவர் ஐக்கியமாயிருக்க வேண்டும்.

இவ்வசனப்பகுதி, அநேக பழைய ஏற்பாட்டு மேற்கோள்களை உள்ளடக்கியது. அது கிறிஸ்துவின் மூலமாக நிறைவடைகிறது. அதாவது, யூதர்களும், புறஜாதிகளும் ஒரே சரீரத்தில் ஐக்கியமாகி, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தும்படியாக, இயேசு கிறிஸ்து தாமே இப்பூவுலகம் வந்து சிலுவையில் மரித்தார். இதன் விளைவாக கிறிஸ்துவை விசுவாசிப்பதனால் உண்டாகும் ஆவிக்குரிய நன்மைகளை நாம் இம்மையிலும், மறுமையிலும் சுதந்தரிக்க முடியும்.

செயலில் கிறிஸ்தவம்

# இயேசு ஜனங்களை எப்படியாகப் பார்த்தார்

## *How Jesus Saw People*

*Nela Pollard*

**இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து ராஜ்ஜியத்தின் சுவிஷேத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார். அவர் திரளான ஜனங்களைக் கண்ட பொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்து போனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால் அவர்கள் மேல் மனதுருகி தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம். ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றார்** [மத்தேயு9:35–38].

மேற்கண்ட வசனப்பகுதியில் பரிசுத்த ஆவியானவர் மத்தேயு ஆசிரியர் மூலமாக நம் மனதை உருக்கும் காட்சியை காட்சிப்படுத்துகிறது. நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து ஊழியத்தின் பாதையிலிருந்த போது தாம் எதிர் கொண்ட ஜனங்களின்மீது, அவர் எப்படிப்பட்ட கண்ணோட்டம் உடையவராக இருந்தார் என்பதை நாம் இவ்வசனப்பகுதியில் காணமுடியும். கிறிஸ்து ஜனங்களை எப்படியாகக் கண்டார் என்பது, நாமும் ஜனங்களை எவ்விதமாகக் காண வேண்டும் என்பதற்கு மிகச்சிறந்த உதாரணமாயிருக்கிறது.

**கிறிஸ்து ஜனங்களைக் காயப்பட்டிருக்கிறவர்களாகக் கண்டார் [9:35].**

உண்மையாகவே அவர்கள் காயப்பட்டவர்களாக அதாவது வியாதியஸ்தர்களாயிருந்தார்கள். அப்படிப்பட்டவர்களைப் பார்த்து கிறிஸ்து மனதுருகினார். காரணம், ஜனங்களின் நிலை அவரை அதிகமாகப் பாதித்தபடியால் உடனடியாக, அவர் நடவடிக்கைகளில் இறங்கினார். அதாவது, அவர்களுக்கு உதவி செய்தார். நாமும் இதே விதமான அணுகுமுறையைக் கடைபிடிக்க வேண்டும். ஜனங்களுடைய மனதில் ஆழமாகப் பதிந்திருக்கும் பிரச்சனைகளைக் குறித்து உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும். கிறிஸ்தவர்களான நாம் மற்றவர்களுடைய உணர்வுகளைக் குறித்து அக்கறையுடையவர்களாக இருக்க வேண்டும். மற்றவர்கள் நமக்கு எதைச்செய்ய நாம் விரும்புகிறோமோ அதை நாம் அவர்களுக்குச் செய்ய வேண்டும் [மத்7:12].

**இயேசு கிறிஸ்து அவர்களை நம்பிக்கையற்றவர்களாகக் கண்டார் (9:36)**

நமதாண்டவர் அவர்களை நம்பிக்கையை இழந்து விட்டு அதைத் தேடுகிற மக்களாகக் கண்டார். அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலத் தொய்ந்து போனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தார்கள். அவர்களின் இந்த நிலைமை தான் கிறிஸ்துவின் கவனத்தை ஈர்த்தது. ஆகவே, அவர் அவர்களுக்கு வழிகாட்டி உதவ விரும்பினார். இன்றும் அவர் உலக மக்களின் மீது அக்கறை உடையவராக இருக்கிறார். ஆகவே, இன்று அதை நிறைவேற்ற நம் மூலமாகச் செயல்பட அவர் விரும்புகிறார். அன்று போலவே இன்றும் திரளான ஜனங்கள் வழிகாட்டுதலும், நம்பிக்கையும் இல்லாமல் இருப்பதை நாம் புரிந்துகொண்டு, அப்படிப்பட்ட ஜனங்கள் மேல் நாம் மனதுருக வேண்டும்.

**இயேசு கிறிஸ்து அவர்களை ஓர் அறுவடையாகக் கண்டார் (9:37,38)**

அங்கே கூடியிருந்தவர்கள் வெறுமனே இருக்காமல், கிறிஸ்து செயல்பட அதிகப்படியான வாய்ப்பைக் கொடுத்தார்கள். எப்படியெனில், அந்தத் திரளான ஜனங்களிடத்தில் ஊழியம் செய்ய கிறிஸ்து தமது சீடர்களை அனுப்பினார். அதேபோல், இன்றும் ஜனங்கள் மீதான அவருடைய அக்கறை தணியவில்லை. ஆம், ஊழியப்பாதையில் இருப்பவர்கள், நம்பிக்கை இல்லாமல் இருப்பவர்களையும் காயப்பட்டவர்களையும் சந்தித்து சத்தியத்தை விதைத்து அதன்மூலம் ஆத்துமாக்களை அறுவடை செய்யவேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

ஒருமுறை ஊழியர் கூட்டத்தில் நான் இருக்கும்போது பொருளாதார உதவி தேவைப்படும் ஒரு சகோதரனைப் போய்ச் சந்திக்கும்படி அழைப்பு வந்தது. உதவி தேவைப்படும் நபரைச் சந்திக்க அவருடைய வீட்டிற்குச் சென்று அந்நபரைப் பார்த்த உடனே எனக்கு வெறுப்புத்தான் வந்தது. பிறகு, என்னுடைய செயலைக்குறித்து நான் வருத்தப்பட்டு அதற்காக தேவனிடம் மன்னிப்புக் கேட்டேன். அதன்பின்பு, நான் அந்த ஆத்துமாவின்மீது பரிதாபம் கொண்டேன். நான் போய்ச் சந்தித்த நபருக்கு, தேவனுடைய வார்த்தைகளினால் ஆறுதலைச் சொல்லி, சில பொருளாதார உதவிகளையும் செய்ய தேவன் எனக்கு வாய்ப்புக் கொடுத்தற்காக நான் தேவனுக்கு நன்றிகளை ஏறெடுத்துக் கொள்கிறேன். இன்று நாம் சந்திக்கும் பலர் ஆத்துமாக்களைக் குறித்த அக்கறையில்லாமல் இருக்கலாம். அப்படிப்பட்ட இழந்துபோன நிலைமையுள்ளவர்களுக்கு கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தைச் சொல்லி மீட்படையச் செய்ய வேண்டும்.

**பிரியமானவர்களே! நாமும் ஜனங்களை கிறிஸ்து பார்த்த விதமாகவே பார்ப்போம்.** ✝

# கிறிஸ்துவின் கேள்விகளுக்குப் பதிலளிக்க நமக்குத் துணிச்சல் இருக்கிறதா

## *Do We Dare to Answer Christ's Question*

Ardon Hinton

உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? [மத்.5:47]. இங்கே கேள்வி என்னவென்றால், மற்றவர்களை விட நீங்கள் அதிகமாக என்ன செய்கிறீர்கள்? என்பது தான். இவ்வசனப் பகுதியில் நாம் பார்க்கும்போது நம்மை நேசிப்பவர்களையே நேசிக்காமல் பிறரையும் நேசிக்க வேண்டுமென்றும் நமக்கு உதவுபவர்களுக்கே உதவாமல் மற்றவர்களுக்கும் உதவ வேண்டுமென்றும் பார்க்கிறோம். இப்போது, மற்றவர்களை விட நீங்கள் அதிகமாக என்ன செய்கிறீர்கள்? என்ற கேள்விக்கு வருவோம். இக்கேள்வியானது பல கோணங்களைக் கொண்டுள்ளது. அதிலொன்று அநேக ஜனங்கள் தங்களைச் சுற்றிலும் இருப்பவர்களை விட தாங்கள் சிறந்தவர்களாகவும் இல்லை, மோசமானவர்களாகவும் இல்லை, மாறாக சராசரியாக இருக்கிறோம் என்பதில் திருப்திபட்டுக் கொள்கிறார்கள். ஆனால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்மைப் பின்பற்றுபவர்கள் சராசரியாக அல்ல, சிறப்பானவர்களாக இருக்க வேண்டுமென்று அழைக்கிறார்.

மீண்டும் கிறிஸ்துவின் கேள்விக்குத் திரும்புவோம். இக்கேள்விக்கு இப்போது நாம் என்ன பதில் கொடுக்க முடியும்? தேவனுடைய போதனைகளைக் கற்றுக்கொள்ள நாம் முயற்சி எடுக்கிறோம்? தேவனுடைய பிள்ளைகளாக நம் நம்பகத்தன்மை மற்றும் உண்மைத்தன்மை எப்படி இருக்கிறது? கிறிஸ்தவத்தின் சவாலான கடினமான தியாகப்பூர்வமான வாழ்க்கை முறையை நடைமுறைப்படுத்த என்ன முயற்சி எடுக்கிறோம்? மேற்சொல்லப்பட்ட காரியங்களில் சிறந்தவர்களாக இருக்க நாம் பாடுபடுகிறோமா அல்லது இருக்கிற நிலையிலே திருப்திப்பட்டுக் கொள்கிறோமா?

நீங்கள் ஆவிக்குரிய பிரகாரமாக உங்கள் ஆலயத்தோடு உங்களை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்கிறீர்களா? கிறிஸ்து என்ன சொல்லியிருக்கிறாரோ அதை நடை முறைப்படுத்த முயற்சி எடுக்கிறீர்களா? பல தேசங்களில், கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தை வெளிப்படுத்தும் இலட்சக்கணக்கான மக்கள் அரசின் அடகு முறைகளுக்கும், உபத்திரவங்களுக்கும் உட்படுத்தப் படுகிறார்கள். கிறிஸ்துவின் சத்துருக்கள் கிறிஸ்தவர்கள்

மீது மிகப்பெரிய தாக்குதலைத் தொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், நம்மில் பலருக்கு, அப்படிப்பட்ட அநுபவங்கள் இல்லாத படியால், நாம் சௌகரியமாக வாழ்ந்து கொண்டு மெத்தனப் போக்கைக் கடைபிடிக்கிறோமா?

இயேசு பிரதியுத்தரமாக: ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான்; அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு அவனைக்காயப்படுத்தி, குற்றுயிராகவிட்டுப் போனார்கள். அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியாரின் அந்த வழியே வந்து அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு பக்கமாய் விலகிப்போனான். பின்பு சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில், அவனைக் கண்டு, மனதுருகிக் கிட்டவந்து அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்துக் காயங்களைக் கட்டி அவனைத்தன் சுய வாகனத்தின் மேல் ஏற்றி, சத்திரத்துக் கொண்டுபோய் அவனைப் பராமரித்தான்.

மறுநாளிலே தான் புறப்படும்போது இரண்டு பணத்தை எடுத்து, சத்திரத்தான் கையில் கொடுத்து: நீ இவனை விசாரித்துக் கொள், அதிகமாய் எதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேன் என்றான். இப்படியிருக்க, கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்று பேரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித் தோன்றுகிறது என்றார். அதற்கு அவன் அவனுக்கு இரக்கஞ்செய்தவனே என்றான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீயும் போய் அந்தப்படி செய் என்றார் (லூக்கா10:30-37).

இந்தப் பரிட்சயமான உவமையை நாம் மீண்டும் மீண்டும் வாசித்துப் பார்த்து, இதில் இடம்பெற்றுள்ள சமாரியனைப் போல் இருக்கவும் பக்கமாய் விலகிப்போன மற்றவர்களையும் போல் இராதபடிக்கும், அதிகமாய்த் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

நீதிக்கான, சத்தியத்திற்கான, தேவனுடைய ராஜ்ஜியத்திற்கான போர்க்களத்தில் நாம் நிற்பது மாத்திரம் போதுமானதல்ல, நாம் மற்றவர்களை விட சிறந்தவர்களாக இருப்பதுதான் அவசியமாயிருக்கிறது. மலைப்பிரசங்கத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்விதம் எச்சரித்தார். வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால் பரலோக ராஜ்ஜியத்தில் பரவேசிக்க மாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (மத்.5:20). இங்கே, கூடியிருந்தவர்களெல்லாம் பக்தியுள்ளவர்களாகத் தான் இருந்தார்கள். ஆனால், நம்முடைய வாழ்வு அவர்களுடைய பக்தி வாழ்வைக் காட்டிலும் சிறந்ததாக இருக்க வேண்டும். ✝

# பரலோகம் போகும் ஒரே ஜனமா?




நான் கிறிஸ்துவின் சபையைச் சார்ந்தவன் என்று ஒருவரிடம் சொல்லும்போது, அதற்கு அவர் நீங்கள் மட்டும்தான் பரலோகம் போவீர்கள் என்று நினைத்துக் கொள்ளுகிற கூட்டம் நீங்கள் தானே? என்பார். இந்த விமர்சனத்திலிருந்து வெளிவர சிறந்த வழி எது? அதற்கான ஆலோசனைகளைக் கவனிப்போம்.

**ஆலோசனை 1**

நீங்கள் இக்கேள்வியைக் கேட்டது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்! இக்கேள்விக்கு நீங்கள் எப்படி பதிலளிப்பீர்கள்? பரலோகத்தில் யார் இருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்?

அந்த நபர் பதிலளித்த பிறகு....... அவரிடம்

நீங்கள் ஏன் அப்படி கூறினீர்கள் என்று சொல்லுங்கள்? இந்த முடிவுக்கு நீங்கள் ஏன் வந்தீர்கள்? இதைக்குறித்து வேதாகமம் என்ன சொல்லுகிறது என்பதைக் காண விரும்புகிறீர்களா?

**ஆலோசனை 2**

இவ்வுலகில் நல்லது என்று ஒன்று நிச்சயமாக இருக்கிறது. பரலோகத்தில் யார் யார் பிரவேசிப்பார்கள் என்பதைத் தேவன் தான் அறிவார். இதை நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா? கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்று வேதம் சொல்லுகிறது (2தீமோ.2:19). ஆனால், இன்று பக்தியுள்ள ஜனங்களில் பெரும்பகுதியினர் தாங்கள் பின்பற்றுகிற மார்க்கம்தான் சிறந்தது என நினைக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் யாரெல்லாம் பரலோகம் போவார்கள் என்பது கர்த்தருக்கு மாத்திரமே தெரியும் என்று சொல்லுவது சரியானதாக பாதுகாப்பானதாக இருக்குமல்லவா?

**ஆலோசனை 3**

யாரெல்லாம் பரலோகம் போவார்கள் என்பதைப்பற்றி இன்று அதிகப்படியான குழப்பங்கள் நிலவுகிறது. நீங்கள் பரலோகம் போக விரும்புவதைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். நான் உங்களிடம் ஒன்று கேட்கிறேன். இன்றிரவு நீங்கள் மரித்தால் எவ்வித ஐயப்பாடுமின்றி என்றென்றும் தேவனோடு இருப்பீர்களென்று நிச்சயமாகச் சொல்ல முடியுமா? ஆம், என்றால் எது உங்களை இவ்வளவு நிச்சயமாகச் சொல்ல வைக்கிறது? இல்லையென்றால், தேவன் வேதாகமத்தில் எழுதிக்கொடுத்திருக்கிற வழிமுறைகளைக் கற்றுக்கொள்ள விரும்புகிறீர்களா?

**அந்த நபர் இந்த ஆலோசனைகளை ஏற்றுக் கொள்கிறார் என்றால்.....**

நீங்கள் என்னோடு வேதாகமத்தைப் படித்து அதை உங்கள் எண்ணங்களோடும், நம்பிக்கைகளோடும் ஒப்பிட்டுப் பாருங்கள். நீங்கள் விரும்பியதை என்னிடம் கேட்க முடியும். நாம் இருவரும் இணைந்து தேவனுடைய வார்த்தைகளிலிருந்து பதிலைத் தேடுவோம். நான் ஒன்றை விசுவாசிப்பதினால் நீங்களும் அதை விசுவாசிக்க வேண்டும் என்று உங்களிடம் கேட்கமாட்டேன். மாறாக, வேதாகமத்தில் தெளிவாக என்ன எழுதியிருக்கிறதோ அதை விசுவாசிக்கும்படி வலியுறுத்துவேன். நீங்கள் அதை மட்டும் விசுவாசித்தால் போதும். இப்போது நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? கிறிஸ்துவின் சபையார் மட்டுமே பரலோகம் போவார்கள் என்று வேதாகமம் உறுதியாகக் கட்டளையிடுகிறபடியால், அவர் பாதம் பணிவோம்! பரலோகம் சேர்வோம்!

# ஆத்தும ஆதாயம் செய்கிறவன் ஞானவான்
# He Who Wins Souls is Wise

Rachel Nayagam

கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே! தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட நம் அனைவருக்கும் ஒரு பணி இருக்கிறது.எல்லோருக்கும் பரலோகம் செல்ல வேண்டும் என்ற ஆசை இருக்கிறது, நல்லது. ஆனால், தனி ஆளாகப் பரலோகம் சென்று விடலாம் என்று முயற்சிக்கிறோமா? அது ஒருபோதும் நடக்காது. கிறிஸ்துவின் சபைகளிலே சுவிசேஷக் கூட்டங்கள், வேதாகமக் கருத்தரங்கங்கள், வாலிபர், சிறுவர் முகாம், என்று பலவிதமான கூட்டங்கள் நடந்து கொண்டுள்ளன, நல்லது. அவைகள் அவசியம்தான். ஆனால், அவைகளை விட அத்தியாவசியமான ஒன்றாக தனிநபர் ஊழியம் காணப்படுகிறது. முதல் நூற்றாண்டு சபை வெற்றிகரமாக வளர்ந்ததற்கும், இன்று காணப்படும் தேக்க நிலைக்கும் காரணம் என்னவென்று பார்க்கும்பொழுது ஏதோ ஒன்றை நாம் இழந்திருக்கிறோம் என்பது தெரியும். கட்டாயமாக, உபதேசத்திலோ, வசனத்திலோ எந்தவொரு மாற்றமும் இல்லை. தனிநபர் அர்ப்பணிப்புதான் காணாமல் போயிருக்கிறது. நம்முடைய இரட்சிப்பு சரியாக இருந்தால் போதும், பிறர் எப்படியோ போகட்டும் என்ற எண்ணத்துடன் வாழ்கிறோம். நம்முடைய வேலைகள் பலவற்றையும் திட்டமிட்டுச் செய்கிறோம். வாகனங்களில் பல இடங்களுக்குப் பயணிக்கிறோம். ஆனால், சுவிசேஷத்தைப் பிறரிடம் பகிர்ந்துகொள்ள எந்தவொரு முயற்சியும் எடுப்பதில்லை. **ஆத்துமாவை ஆதாயம் செய்து கொள்ளுகிறவர்கள் ஞானவான்கள்** (நீதி.11:30; தானி.12:3).

## 1. நாம் தனிநபர் ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டும்?

இயேசு கிறிஸ்து அப்படிச் செய்தார். வெகு ஜனங்களோடு பிரசங்கம் செய்தது பற்றி 16 இடங்களில் மட்டும்தான் கொடுக்கப்பட்டுள்ளது. மற்றவைகள் எல்லாம் தனி ஆட்களோடு செய்த உரையாடல்கள்தான் (யோவான் 3:1-13; 4:1-26). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உலகத்தின் போக்கு முழுவதையும் மாற்றுவதற்காக வந்தார். அதற்காக அவர் அதிகம் பயன்படுத்திய முறை தனிநபர் ஊழியம்தான். **அவர் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி நமக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்** (1பேதுரு 2:21). நாம் அனைவருமே தனிநபர் ஊழியம் செய்ய எதிர்பார்க்கப்படுகிறோம். அது மட்டுமல்ல, அது ஒரு கட்டளையாகவே உள்ளது.

[மத்.28:19; தீமோ.2:2; பேதுரு 3:15]. நமக்குப் பதிலாக வேறு யாரோ இதை செய்யட்டும் என நினைக்கக் கூடாது. யாரையாவது செய்யச் சொல்லுங்கள் என்ற மனநிலையைத் தவிர்க்க வேண்டும். பிராதன கட்டளை நிறைவேற்றப்பட வேண்டுமானால் தனி நபர்கள் தங்களை இதில் ஈடுபடுத்த வேண்டும்.

மேலும், நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள இது மிகவும் துணை செய்கிறது. பிறருடைய ஆத்துமாவை ஆதாயம் செய்வதென்பது அந்த நபருக்காக நாம் என்னதான் வேலைகளையும், முயற்சிகளையும் உதவிகளையும், செய்தாலும் அதைவிட சிறந்த ஒன்றாக இது இருக்கிறது [மத்.16:26]. நாம் பிறருடைய ஆத்துமாக்களுக்குக் கடனாளியாயிருக்கிறோம் [ரோமர்1:14-15]. இதற்காகத்தான் கிறிஸ்துவின் நற்செய்தி நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**2. தனி நபர் ஊழியத்தின் அனுகூலங்கள்**

இதற்கென்று குறிப்பிட்ட வயதோ, திறமையோ, கல்வியோ, முக்கியம் இல்லை. பொதுவான இடங்களுக்குச் சென்று பாடல் பாடவும், பிரசிங்கிக்கவும் அனைவராலும் முடியாது. ஆனால், தனியாக, தனி ஆட்களைச் சந்தித்து அவர்களுக்கு நம் விசுவாசத்தைப் பகிர்ந்து, வசனத்தைப் போதிப்பது எளிது. ஒரு வாகனத்தைச் சரி செய்வது, பலகாரம் ஒன்றை எப்படிச் செய்வது, ஒரு செடியை எப்படி வைத்து வளர்ப்பது என்பதையெல்லாம் அயலகத்தாருக்குச் சொல்லிக் கொடுக்க நமக்குத் தெரிந்திருக்கும் போது, இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்பதைப் பகிர்ந்து கொள்வது கஷ்டமான காரியம் அல்ல. நாம் என்னென்ன பக்தி காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைச் சொன்னாலே போதும். சிலருக்குப் புத்தகங்கள் வெளியிடுவது, கைப் பிரதிகள் அடித்து விநயோகிப்பது, வானொலி, தொலைக்காட்சி, இவைகளில் பிரசங்கிப்பது போன்ற வாய்ப்புகள் கிடைக்கிறது நல்லது. தனி நபர்களைச் சந்தித்து சுவிசேஷம் சொல்வதற்கு இதைவிட அதிக வாய்ப்புகள் கிடைக்கிறது. எப்படியென்றால், மருத்துவமனைகள், தொழிற்புரியும் இடம், வீடுகள், அலுவலகம், பள்ளிக்கூடம், பொழுதுபோக்கும் நேரங்கள், இப்படிப் பல தருணங்களைப் பயன்படுத்தி தனியாட்களுடன் சத்தியத்தைப் பகிர்ந்து கொள்ளலாம். பொதுவான ஊழியம், தனிநபர் ஊழியம், எதில் ஆத்துமாவை கொள்ளைப் பொருளாகச் சம்பாதிக்க முடியுமென்றால், தனிநபர் ஊழியத்தில் தான். இதில் தான் அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றிய விவரங்கள், அவர்கள் பிரச்சனைகள், எதிர்பார்ப்புகள் போன்றவைகளை எளிதில் அறிந்து கொள்ள முடியும்.

**3. தனி நபர் ஊழியம் செய்ய தேவையான தகுதியாம்சங்கள்**

ஒரு உண்மையுள்ள கிறிஸ்தவனாக இருத்தல் அவசியம் [அப் 1:1; ரோமர் 2:21; 2தீமோ.2:2]. செய்தியும் செய்தியாளரும் ஒத்திருக்க வேண்டும். லூக்கா 19:41-ல் இயேசு கிறிஸ்துவைப் பார்க்கும்பொழுது, அவர் சமீபமாய் வந்த போது நகரத்தைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர் விட்டார். என்று பார்க்கிறோம். பவுலும் இதைப் போன்றே [ரோமர் 9:3;10:1;அப்.17:16] ஆகிய இடங்களில் ஆத்துமப் பற்றோடு ஊழியம் செய்தார். யாத்.32:31,32 - ல் மோசே ஜனங்களுக்காக தேவனிடத்தில் கெஞ்சி மன்றாடுவதை வாசிக்க முடியும். இப்பேற்பட்ட மனநிலை ஒவ்வொருவருக்கும் வேண்டும்.

தனி நபர் ஊழியத்தில் ஒரு தெளிவு அவசியம். சந்திக்கும் நபர்களின் வாழ்க்கை நிலை, தேவனுடைய கிருபை பாவிகளுக்கு எப்படி கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமை, எப்படி பாவங்களைக் கழுவுகிறது, சுவிசேஷத்தின் வல்லமை, தேவனின் மன்னிக்கும் தன்மை, இரட்சிப்புக்கான தேவனின் மெய்யான திட்டம் இவைகளைப் பற்றிய தெளிவு அவசியம். இம்மாதிரியான ஊழியப் பாணி இல்லாவிட்டால் கிறிஸ்துவின் சபையைக் கட்டவே முடியாது.

மேலும், அவன் புரிந்து கொள்ளுதல் உள்ளவனாக இருக்க வேண்டும். அதாவது ஜனங்களையும், சுவிசேஷத்தையும் புரிந்து கொண்டவர்களாக இருக்க வேண்டும் [யோவான் 2:25, தீமோ : 2; 24-26]. சூழ்நிலைகளைக் கையாளும் திறமை வேண்டும் [ஏசாயா : 50 : 4] மட்டுமல்ல, ஜெபத்தின் வல்லமையை அறிந்திருக்க வேண்டும். ஜெபம் பண்ணும் பழக்கம் மிகவும் அவசியம் [ரோமர் 10:1; எபே. 6:8, 19]. இவைகளைச் செய்யாமல் ஊழியம் செய்வதென்பது தேவனுடைய உதவி எனக்கு வேண்டாம் என்று சொல்லுவதைப் போன்றது.

தனிநபர் ஊழியத்திற்கு விசுவாசம், தாழ்மை மிக அவசியம். அப்போஸ்தலரின் நாட்களில் பிலிப்பு இதற்கு மிகச் சிறந்த உதாரணம். பிலிப்பைப் பார்க்கும்போது நல்ல அறிக்கை பண்ணுகிறவனாக [அப் 6:3-5] நல்ல ஆவியுடையவனாக [அப் 6:3-5, கலா : 22, 23] வேதத்தையும் தன் ஆண்டவரையும் நன்கு அறிந்தவனாக [அப் : 8: 35] கீழ்ப்படிதலுள்ளவனாக [அப் 8: 29, 30] முயற்சி உள்ளவனாக இருந்துள்ளான்.

ஆக, அருமையானவர்! மேலே வாசித்தவைகளைச் சிந்திப்போம். வெறுங்கையோடு தேவனைச் சந்திக்கச் செல்ல வேண்டாம். நியாயத்தீர்ப்பின் நாளிலே நம்மைப் பார்த்து தேவனும், இயேசு கிறிஸ்துவும் என்னைப் பற்றி நீ எதுவுமே சொல்லவில்லையே! என்று கேட்கும் வண்ணம் நாம் இப்பூமியிலே வாழ்ந்து விடக் கூடாது. எனவே, கர்த்தர் கிருபையாய்க் கொடுத்த இவ்வாழ்க்கையில் தனியாக, தனியாட்களுக்கு சுவிசேஷம் சொல்வோம், ஊழியம் செய்வோம், ஆத்துமாவை ஆதாயம் செய்வோம். ஆத்துமாவை ஆதாயம் செய்கிறவன் ஞானவான். அப்படிச் செய்ய கர்த்தர் இரக்கம் பாராட்டுவாராக! ஆமென்!!

# மோசேயின் வாழ்க்கையில் நான் யார்?

## Who Am I In The Life Of Moses?

Rebecca Rushmore

என்னை உங்களால் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறதா? கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கவனமாக வாசித்து, நீங்கள் கண்டுபிடிக்கும் ஒவ்வொரு நபருக்கும் 10 மதிப்பெண்களை உங்களுக்கு நீங்களே கொடுத்துக் கொள்ளுங்கள். அடையாளத்தை நீங்கள் உறுதிசெய்துவிட்டால் சரிபார்க்க தேவனுடைய வார்த்தையிலிருந்து வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள்.

1. நான் மோசேயின் தகப்பன் (யாத்.6:20)
2. நான் மோசேயின் தாய் (யாத்.6:20)
3. நான் மோசேயின் சகோதரன் (யாத்.6:20)
4. நான் மோசேயின் சகோதரி (யாத்15:20)
5. நான் மோசேக்கு பேர் வைத்தேன் (யாத்.2:10)
6. நான் மோசேயின் மாமன் (யாத்.3:1)
7. நான் மோசேயின் மனைவி (யாத். 2:21)
8. நான் மோசேக்கு விரோதமாகக் கலகம் செய்த போது, என்னையும் என்னைப் பின்பற்றினவர்களையும் பூமி தன் வாயைத் திறந்து விழுங்கும்படி செய்தார் (எண். 16:1-33)
9. நான் மோசேயும் இஸ்ரவேலரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை என் தேசத்தின் வழியாய் கடந்து போக அனுமதிக்கவில்லை (எண். 20:14-21).
10. நான் மோசேக்குப் பிறகு இஸ்ரவேலர்களை வழி நடத்தினேன் (யோசுவா 1:1-9).

# மோசேயின் வாழ்க்கையில் நான் எங்கே இருக்கிறேன்?

## Where Am I In The Life Of Moses?

Rebecca Rushmore

என்னை உங்களால் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறதா? கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கவனமாக வாசித்து, நீங்கள் கண்டுபிடிக்கும் ஒவ்வொரு இடத்திற்கும் 10 மதிப்பெண்களை உங்களுக்கு நீங்களே கொடுத்துக் கொள்ளுங்கள். அடையாளத்தை நீங்கள் உறுதிசெய்துவிட்டால் சரிபார்க்க தேவனுடைய வார்த்தையிலிருந்து வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள்.

1. நான் இந்த தேசத்தில் பிறந்தேன் (யாத்.1:1-2:15).
2. என் தாய் என்னைப் பாதுகாப்பாக இந்த நதியில் விட்டுவிட்டாள் (யாத்.2:1-10)
3. என்னுடைய நாற்பதாவது வயதில் எகிப்திலிருந்து இந்த தேசத்திற்கு ஓடி வந்தேன்.
4. நான் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது முட்செயில் தேவன் எனக்குத் தரிசனமானார் (யாத்.3:1)
5. இஸ்ரவேலர்கள் வெட்டாந்தரையில் நடந்துபோவதுபோல் போகத்தக்கதாக தேவன் இக்கடலில் தண்ணீரை இரண்டாகப் பிரித்தார் (யாத்.13:18;14:21-22).
6. ஜனங்களுக்குத் தண்ணீர் கொடுப்பதாக தேவன் கன்மலையை அடிக்கச் சொன்னார், நான் அடித்தேன். அதற்குப் பிறகு நான் இந்த இடத்திற்குப் பெயர் வைத்தேன் (யாத்.17:1-7).
7. இந்த இடத்தில் அமலேக்கியர் வந்து இஸ்ரவேலரோடே யுத்தம் பண்ணினார்கள் (யாத்.17:8).
8. தேவன் இந்தமலையில் பத்துக் கட்டளைகளைக் கொடுத்தார். (யாத்.19:20)
9. இந்த இடத்தில் தேவன் கன் மலையைப் பார்த்து பேசு என்று சொன்னபோது நான் அதை அடித்தேன் (எண்.20:1-13)
10. நான் மரிப்பதற்கு முன்பு இந்த இடத்திலிருந்து வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பூமியைக் காண்பதற்கு தேவன் எனக்கு அனுமதி கொடுத்தார் (உபா.34:1-8).

# நான் ஆராதிக்க வரும்போது

## WHEN I COME TO WORSHIP

Michael L. King

தேவனுடைய நன்மையை வலியுறுத்தி அவரை ஆராதிப்பதின் மூலமாகத்தான் அவருக்கு நன்றி செலுத்தமுடியுமென்று எழுத்தாளராகிய யாக்கோபு தன்னுடைய பெயரைத் தாங்கி வரும் நிரூபத்தில் குறிப்பிடுகிறார். இந்நிரூபம் நடைமுறை கிறிஸ்தவத்தைப் பற்றிய புத்தகம் என்று பலரால் குறிப்பிடப்பட்டது போலவே, நடைமுறைக் காரியங்களைப் பற்றித்தான் இந்நிரூபம் பேசுகிறது.

இந்நிரூபத்தில் 1ஆம் அதிகாரம் 18-22-வசனப்பகுதிகளில் நடைமுறைக் காரியங்கள் குறித்து எழுதப்பட்டுள்ளதைக் கவனியுங்கள். அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜநிப்பித்தார். ஆகையால் என் பிரியமான சகோதரரே யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாகவும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள். மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கப்பட மாட்டாதே, ஆகையால் நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள். அல்லாமலும், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுங்கள். அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாத படிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்.

யாக்கோபு, இந்நிரூபத்தில் தேவனை நன்மையான ஈவுகளின் ஆதாரமாகக் காட்டுகிறார் (வசனம்17). நம் வாழ்க்கையில் நன்மையானவைகளெல்லாம் தேவனிடத்திலிருந்துதான் வருகிறது. அதேவேளையில், தீமையானவைகளை மனிதன் தனக்குத்தானே வருவித்துக் கொள்கிறான். இதினிமித்தம் நன்மையான ஈவுகள்,

பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய அவன் ஒன்றையும் பெற்றுக்கொள்ள மாட்டான் [யோவான் 3:27]. மனிதனுக்கு, வேத வாக்கியங்கள் வெளிப்படுத்தப்படாமல் இருந்திருந்தால் தேவனுடைய அன்பையும், நன்மையையும் குறித்து அவன் அறியாமலே இருந்திருப்பான். தேவனுடைய சித்தம் நன்மையானதாகவும், சுத்தமுள்ளதாகவும் இருக்கிறபடியால் நாம் எல்லாவற்றிலும் பரிசுத்தமாயிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பே யூதர்கள் மத்தியிலும், கிறிஸ்தவர்கள் மத்தியிலும் எரேமியா தீர்க்கர்கனால் தீர்க்க தரிசனமாக உரைக்கப்பட்ட புதிய உடன்படிக்கை உண்மையாகவே ஆச்சரியமான ஒன்றுதான். இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்நாட்களுக்குப் பிற்பாடு நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து அதை அவர்கள் இருதயத்திலே எழுதி நான் அவர்கள் தேவனாயிருப்பேன் அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும் எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து அவர்கள் பாவங்களை நினையாதிருப்பேன் [எரே.31:31–34].

புதிய உடன்படிக்கையின் மக்களாகிய நாம் அதை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக உணர்ந்து கொண்டோம் [எபே.1:3 2பேதுரு 1:3]. நாம் கர்த்தருடைய சபையில் இருப்பதன் மூலமாகத்தான் இவைகளையெல்லாம் ஆராதனையின் மூலமாக அறிந்து, உணர்ந்து கொண்டு, தேவனுடைய ஈவுகள் எத்தனை நன்மையானது, பூரணமானது, நாம் அவைகளுக்கு எவ்வளவு கடன்பட்டிருக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். நமக்கு ஈவுகளைத் தந்தருளின மாபெரும் தேவனுக்கு நன்றி செலுத்தும் விதமாக, ஆராதிக்க நாம் ஒன்று கூடும்போது, நாம் கேட்கிறதற்குத் தீவிரமாயிருக்க வேண்டும். யூதப்பாரம்பரிய பழமொழி ஒன்று இவ்விதம் குறிப்பிடுகின்றது. நீதிமான்கள் குறைவாகப் பேசி, நிறைவாகச் செய்வார்கள்; துன்மார்க்கர் அதிகமாகப் பேசி ஒன்றும் செய்யமாட்டார்கள் என்று. மேலும், ஞானத்திற்கும் உதடுகளை அடக்குவதற்கும் இடையே ஒரு சம்பந்தம் உண்டு.

புத்திமான் தன் உதடுகளை அடக்குகிறான் [நீதி.10:19]. Adam Clarke என்னும் வேதவல்லுனர் சொல்லும்போது, பேசுகிறதற்குத் தீவிரமாய் இருப்பவர்கள் பொதுவாக, கோபக்குணம் உடையவர்களாகத்தான் இருப்பார்கள் என்று சொல்லுகிறார். யாக்கோபு 1:19-ல், **ஆகையால், என் பிரியமான சகோதரரே யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும் பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள் என்கிறார்.** அதாவது, பேசுகிறதற்குத் தீவிரமாயிருப்பவர்கள் தாங்கள் பேசும் வார்த்தைகளைக் குறித்து யோசிக்காமல் கோபத்தின் வார்த்தைகளை வீசுவார்கள். ஆனால், நாம் நம்முடைய அன்பையும், பக்தியையும் தேவனுக்கு வெளிப்படுத்தும் விதமாய் ஆராதனைக்காகக் கூடி வரும்போது, ஆராதனையை வியர்த்தமாக்கும் எந்தவொரு காரியத்திலும் நாம் ஈடுபடக்கூடாது. **தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள் ; மூடர் பலியிடுவதைப் போல பலியிடுவதைப்பார்க்கிலும் செவிகொடுக்கச் சேர்வதே நலம். தாங்கள் செய்கிறது தீமையென்று அறியாதிருக்கிறார்கள். தேவசமூகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு; தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியில் இருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக** [பிரசங்கி 5:1,2]. ஞானி இங்கே சொல்லும்போது நாம் பூமிக்குரியவர்களாயிருக்கிறபடியால், நாம் துணிகரமாய் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையைச் சொல்லாமலும் இருக்க வேண்டும் என்று எச்சரிக்கிறார்.

## கிறிஸ்தவனுக்கான தேவ அன்பின் இனிய வார்த்தைகள்

**நீ என் நாமம் தரிக்கப்பட்டவன்**

**நான் உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன்**

**நான் உன்னைத் தப்புவிப்பேன்**

**நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்**

**நான் உன்னை மீட்டுக்கொண்டேன்**

**நீ என்னுடையவன்**

# பழங்கால, ஆனால், விநோதமான பிரச்சனை

# AN AGED, OLD, BUT STRANGE PROBLEM

Charles Cash

கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன் [சங்கீதம்122:1]. இங்கே, ஒரு மனிதனைப் பற்றிப் பார்க்கிறோம். இந்த மனிதனால் ஆராதனைக்குப் போகும் நேரம் வரை காத்திருக்க முடியவில்லை. இந்த மனிதன் தேவனுடைய சமுகத்தில் பிரவேசிக்க அடக்கமுடியாத ஆசையினால் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறார். தேவன் எல்லா இடங்களிலும் எல்லா நேரங்களிலும் வியாபித்திருந்ததாலும் கூட, சங்கீதக்காரன், ஒரு குறிப்பிட்ட அனுபவத்திற்காக ஏங்குகிறார். இவரைப் பொறுத்தவரை, ஆராதனை என்பது செய்யலாம் அல்லது செய்யாமல் இருக்கலாம் என்கிற நிலை இல்லை. மாறாக, அது கொழுந்துவிட்டு எரிகிற தேவையாயிருக்கிறது. Gus Nichols என்பவர் ஒருமுறை இப்படியாகச் சொன்னார். நான் ஆராதனைக்குப் போக வேண்டுமா அல்லது போகவேண்டாமா என்று தீர்மானிக்க வேண்டிய அவசியமில்லை. நான் அந்தத் தீர்மானத்தை, கிறிஸ்தவனானபோது அதாவது சுமார் அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துவிட்டேன். இன்னும் எளிமையாகச் சொல்ல வேண்டும் என்றால், அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு என்னை நான் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தேன், இன்றளவும் கர்த்தருக்கு நான் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றிக் கொண்டுதான் இருக்கிறேன் என்றார். அடிப்படையாகவே மனிதனுக்கு இரண்டு வகையான தேவைகள் உண்டு. அவை, உட்புறமான தேவைகள் மற்றும் வெளிப்புறமான தேவைகள். உணவு, தண்ணீர், காற்று போன்றவைகள் உள்ளான அளவில் தேவைப்படும் விதத்தில்தான் மனிதனின் சரீரம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அடுத்ததாக, வெளிப்புறமான தேவைகளை நாம் நம் பழக்கவழக்கங்களுக்கு ஏற்றபடி தேடிக்கொள்ளுகிறோம். அதாவது, உடை,இணை,இருப்பிடம், போன்றவை. இதில், ஆராதனை உட்புறமான தேவைகள் வகையைச் சார்ந்தது. ஏனென்றால், தன்னைவிட மேலான ஒன்றைத் தொழுதுகொள்ள வேண்டும் என்ற எண்ணம் தொன்றுதொட்டு மனிதனுக்குள் இருந்து வருகிறது. ஆகையால், எதையுமே தொழுதுகொள்ளாத எந்த ஒரு ஜனமோ,

தேசமோ இருந்ததில்லை. இது, தேசங்களின் மொழியில், இலக்கியதில், வரலாற்றில், தெளிவாகத் தெரிகிறது. ஏன் அப்படி? இதற்கான பதில் என்ன? தேவன்! இது தேவனுடைய வடிவமைப்பின் விளைவாக இருக்கிறது.

ஆராதனையானது மனிதனை நம்பிக்கையின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லுகிறது. ஆம், தம்மைத் தொழுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டுமென்று பிதாவானவர் விரும்புவதாக, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்கிறார் [யோவான்4:23]. ஆகவேதான், ஆதித் திருசபைக்கு இப்படியாக எச்சரிக்கை விடப்பட்டது. சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம் என்று [எபிரெயர்10:25]. இங்கே, தேவன் நேரடியாகவும், வெளிப்படையாகவும் மனிதன் ஆராதனையை அலட்சியப்படுத்துகிற காரியத்தைப் பற்றி பேசுகிறார். ஆம், இது ஒரு பழங்கால ஆனால் விநோதமான பிரச்சனை.

ஆராதனை என்பது, ஒரு கிறிஸ்தவன் தேவனுடைய சமூகத்தில் வீற்றிருந்து அவரைத் துதித்து, அவர் சிருஷ்டிகர், அவர் ஜீவாதாரம், என்று உணர்ந்து கொள்வதின் தேவையைப் பூர்த்தி செய்கிறது. **எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர்; ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கின்றோம், அசைகிறோம், இருக்கிறோம் என்று நாம் விசுவாசிக்கிறோம்** [அப்.17:25,28]. தேவனை நாம் ஆராதிக்கும்போது அவரைத் துதிப்பது, போற்றுவது, பாடுவது, ஜெபிப்பது போன்ற காரியங்களில் ஈடுபடும்பொழுது, விசேஷமாக ஆவிக்குரிய பிரகாரமாகப் புத்துணர்வு அடைந்து மேம்படுகிறோம். Marshall keeble என்னும் வேத அறிஞர், ஆராதனை பற்றி குறிப்பிடும்போது, எரிபொருள் நிலையத்திற்குப் போய் ஒரு ஒரு வாகனத்திற்கு எரிபொருள் நிரப்புவதற்கு ஒப்பாகக் குறிப்பிடுகிறார். நாம், சக கிறிஸ்தவர்களோடு சேர்ந்து பாடல் பாடுவது, ஜெபிப்பது கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுவது, தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படும்போது அதை ஆர்வமுடன் கேட்பது போன்றவைகளால் ஆவிக்குரிய பிரகாரமாக புத்துயிர் அடைகிறோம். ஆராதனையில் கிறிஸ்தவர்களோடு கலந்து கொள்ளும்போது அது நம் ஆத்துமாவை உற்சாகப்படுத்தி பெலப்படுத்துகிறது. இந்த உணர்வை ஒரு கிறிஸ்தவன் வேறெங்கும் காணடியாது. கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை அவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஆராதனைக்கு இணையான ஒன்று இவ்வுலகில் இல்லவே இல்லை என்பதை உணரும்பொழுது புத்துணர்ச்சி அடைந்து புது வாழ்வுக்கு ஆயத்தமாவார்கள். ✞

# சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்

கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்
சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்
உங்கள் சாந்த குணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திரிப்பதாக
கர்த்தர் சமீபமாயிருக்கிறார்
நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து
உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய
ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும்
தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்
அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம்
உங்கள் இருதயங்களையும் சிந்தைகளையும்
கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்
கடைசியாக சகோதரரே
உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ
நீதியுள்ளவைகளெவைகளோ கற்புள்ளவைகளெவைகளோ
அன்புள்ளவைகளெவைகளோ நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ
புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ
அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்
நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும்
கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ
அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது
சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்

(பிலிப்பியர் 4:4-9)

# வளையும் தன்மை

## Flexibility

*David Deffenbaugh*



வளையும் தன்மை என்பது கிறிஸ்தவ வாழ்க்கையை வெற்றிகரமாக வாழ்வதின் ஒரு பகுதியாகும். மனந்திரும்புதலுக்கு வளையும் தன்மை அவசியமாகும். பாவத்தில் இழந்துபோயிருப்பவர்கள் எல்லோரையும் நாம் ஒரே நேரத்தில் சந்தித்து அவர்களுக்குப் போதிக்கமுடியாது. ஆனால், இரட்சிக்கப்படுவதற்கு ஒரேயொரு சுவிசேஷம் தான் உண்டு. அதை வெளிப்படுத்தத் தயாராக இருக்க வேண்டும். பலவீனரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப் போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன் [1 1கொரி.9:22]. இது தான் வளையும் தன்மையாகும். இக்கலையில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மிகவும் தேர்ந்தவராயிருந்தார். எப்படியெனில், கிணற்றில் தண்ணீர் எடுக்க வந்த ஸ்திரீயிடம் ஜீவத்தண்ணீரைப் பற்றி பேசினார் [யோவான் 4:7-13]. ஒரு யூத அதிகாரியிடம் மறுபடியும் பிறப்பதைக் குறித்துப் பேசினார் [யோவான் 3:1-3].

கிறிஸ்துவைப் போல் நாமும் வாழ்வதற்கு வளையும் தன்மை மிகவும் அவசியமாக இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல், ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவர்கள் என்றும், கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நம்மிலும் இருக்கக்கடவது என்றும் எடுத்துக்கூறி நம்மை உற்சாகப்படுத்துகிறார் (பிலிப்பியர் 2:3-5). எல்லாமே என் விருப்பப்படி நடக்கவேண்டும் என்றும், என் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்துவது, வளையும் தன்மையும் அல்ல, கிறிஸ்துவைப் போல் இருப்பதும் அல்ல.

திருமண வாழ்க்கையிலும் வளையும் தன்மை மிகவும் அவசியமாக இருக்கிறது. கணவனும் மனைவியும் விவேகத்துடன் வாழவேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள் (1பேதுரு 3:7). மனைவி தன் கணவனுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று போதிக்கப்படுகிறாள் (எபே.5:22). **வளையும் தன்மை வெற்றிகரமான வாழ்க்கையின் ஓர் அங்கமாகும்.**

பெருங்காற்று வீசும்போது பெரிய மரமாக இருந்தாலும், சில வேளைகளில் அவை வேரோடு சாய்ந்து விடுகின்றது. ஆனால், பெருங்காற்றில் வளைந்து கொடுக்கும் தன்மையுள்ள ஒரு செடி சிறியதாக இருந்தாலும் அது எவ்வித பாதிப்புமின்றி அப்படியே நிலை நிற்கிறது. இது தான் வளைந்து கொடுக்கும் தன்மை ஆகும்.

வளைந்து கொடுப்பவர்கள் தங்கள் வாழ்க்கை முழுவதும் பாக்கியவான்களாக இருக்கிறார்கள். ஒருவேளை, இது நேரடியான வேதாகமப் போதனையாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், இது நிச்சயமாகவே வேதாகம போதனையைப் பிரதிபலிக்கிறதாக இருக்கிறது. சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் (மத்தேயு 5:5) என்ற இயேசுவின் போதனைக்கு ஏற்ப இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்களுக்கு முன்பாகப் பிரகாசிக்கும்படியான (மத்தேயு 5:16) வாழ்க்கை வாழ்வதே வளையும் தன்மையுள்ள வாழ்க்கையாகும். ✝

# உபத்திரவம் வரும்போது
## When Trouble Comes

*Clarence De Jr. Loach*

இவ்வுலக வாழ்க்கையில் பாடுகளும், உபத்திரவங்களும் உண்டு. கிறிஸ்தவர்கள் இதற்கு விதிவிலக்கல்ல. காரணம், அப்போஸ்தலனாகிய பவுல் பலவிதமான பாடுகளை அனுபவித்திருக்கிறார்.

நம் வாழ்க்கையில் பலவிதமான பாடுகளைப் படுகிறோம். அதாவது, நம் குடும்பங்களில், நாம் வேலைபார்க்கும் இடங்களில், கல்விக்கூடத்தில், இன்னும் சபையில் கூட பலவிதமான பிரச்சனைகளை நாம் எதிர்கொள்கிறோம். உபத்திரவங்கள் பல ரூபங்களில் வருகிறது. அவைகள், விமர்சனங்கள், வியாதி, பிரியமானவர்களின் மரணம், பொருளாதார மந்தநிலை மற்றும் ஆவிக்குரிய பின்னடைவு போன்றவைகளாகும்.

நாம் உபத்திரவப்பட தேவன் ஏன் அனுமதிக்கிறார்? அவர் நம்மீது அக்கறைப்படாமல் இருப்பதினாலா அல்லது அவர் நம்மை நேசிக்காமல் இருப்பதினாலா? என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள் [யாக்.2 :1,2]. யாக்கோபு ஆசிரியர் குறிப்பிடுவது போல், சோதனையில் நாம் மகிழ்ச்சியாயிருக்க முடியுமா? இவ்வசனப்பகுதியில் அவர், சோதனையின் மகிழ்ச்சியான முடிவுகளை வலியுறுத்துகிறார்.

கோதுமையிலிருந்து பதர் தனியாகப் பிரித்தெடுக்கப்படுவதைப்போல, சோதனை வேளையில் நமக்குள் அசுத்தத்தை நீங்கி, நம் விசுவாசம் சுத்திகரிக்கப்படுகிறது. இது நம்முடைய விசுவாசத்தின் உண்மைத் தன்மையை நிரூபிக்கிறது. ஆகையால், உண்மையான விசுவாசம் இதுபோன்ற சோதனைகளில் தான் பெலப்படுத்தப்படுகிறது.

நாம் வெறுமனே கிறிஸ்தவர்களென்று சொல்லிக் கொள்ளுகிறோமா? அல்லது உணர்வுகளின் அடிப்படையில் செயல்படுகிறோமா அல்லது சத்தியத்தில் உறுதியாயிருக்கிறோமா என்பது நாம் சோதிக்கப்படும்போது தான் தெரியவரும். இதில் நம் விசுவாசமானது உண்மையாக இருந்தால், உபத்திரவமானது இயற்கையாகவே பாவத்தைக் குறித்து ஆழமாகச் சிந்திக்கவைத்து, சுயநீதியின் கட்டுப்பாட்டிலிருந்து நம் இருதயத்தை விலக்கிக் காக்கும். நம்முடைய பெலவீனத்தில் நாம் போராடி ஜெபித்து, தேவகிருபையைப் பெற்றுக்கொண்டு, பெலனடைந்து, வரவிருக்கும் உலகத்தை எண்ணி நம்பிக்கையில் பெலனடைவோம்.

சோதனைகள் உண்மையான விசுவாசத்தைப் பெலப்படுத்துகிறது. இவைகள் நம்மை இவ்வுலகத்திற்குரிய காரியங்களிலிருந்து விலக்கிக் காத்துக் கொண்டு, நம் நம்பிக்கையைத் தீவிரப்படுத்துகிறது.

சோதனைகள் வரும்போது நாம் அதை எப்படி சகித்துக் கொள்ள முடியும்? தேவையான காரியங்களைப் பற்றி யாக்கோபு ஆசிரியர் இங்கே பேசுகிறார்.

1. மகிழ்ச்சியான மனநிலை – அதை மிகுந்த சந்தோஷமாக எண்ண வேண்டும் (யாக்கோபு 1:3)

2. புரிந்து கொள்ளும் மனம் – அறிந்துகொள்ளுதல் (யாக்கோபு 1:3)

3. கீழ்ப்படியும் விருப்பம் – பொறுமையானது பூரணகிரியை செய்யக்கடவது (யாக்கோபு 1:4)

4. விசுவாசமுள்ள இருதயம் – சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன் (யாக்கோபு 1:6–8)

5. பணிவான ஆவி – தாழ்ந்த சகோதரன் தான் உயர்த்தப்பட்டதைக் குறித்து மேன்மை பாராட்டக் கடவன் (யாக்கோபு 1:9–11)

**உங்கள் விசுவாசத்தைப் போதித்து வளர்த்திடுங்கள். அப்போது உங்கள் வாழ்வில் பெரும்புயல் போன்ற சோதனைகள் வந்தாலும் முடிவிலே நீங்கள் சுத்தப் பொன்னாக விளங்குவீர்கள்.**

அனுதின கிறிஸ்தவ ஜீவியம்

# பெருமையின் வேர்

# The Root Of Pride

*Kevin Cauley*



அதற்கு நாகமான் கடுங்கோபங்கொண்டு, புறப்பட்டுப்போய்: அவன் வெளியே வந்து நின்று; தன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தொழுது, தன் கையினால் அந்த இடத்தைத் தடவி, இவ்விதமாய்க் குஷ்டரோகத்தை நீக்கி விடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன். நான் ஸ்நானம் பண்ணிச் சுத்தமாகிறதற்கு இஸ்ரவேலின் தண்ணீர்கள் எல்லாவற்றைப்பார்க்கிலும் தமஸ்குவின் நதிகளாகிய ஆப்னாவும், பர்பாரும் நல்லதல்லவோ என்று சொல்லி, உக்கிரத்தோடே திரும்பிப் போனான் [2ராஜா.5:11,12].

கோபத்தைப் பற்றியும், பெருமையைப் பற்றியும் எனக்கு சிறிதளவு தெரியும். இவ்விரு பாவங்களோடு நான் பல வருடங்களாகப் போராடி வருகிறேன். இப்பிரச்சனைகளை மேற்கொள்ளவும், எனக்கு உதவி செய்யவும் சகோதரர்கள் இருக்கிறபடியால் நான் பாக்கியம் பெற்றவனாக இருக்கிறேன். சிலர் என்மீது உண்மையான அக்கறை எடுத்து உதவி செய்தார்கள். தேவன் என்னுள் கிரியை செய்து கொண்டிருக்கிறார். தேவனுடைய சீர்படுத்துதல் அல்லது சிட்சை எந்த ரூபத்தில் வந்தாலும் அதை நான் ஆனந்தமாக ஏற்றுக் கொள்கிறேன்.

இங்கே பெருமையின் வேர் நான் என்னும் எண்ணம்தான். நான் என்னும் எண்ணம் மாம்சத்தை ஆதாரமாகக் கொண்டது. மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள், முதலானவைகளே [கலா.5:19,20]. இவ்வசனங்களைக் குறித்து ஆழ்ந்து யோசியுங்கள். இது பற்றி மாற்கு 7:21-23-ம் வசனப்பகுதியில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் எடுத்துரைத்துள்ளார்.

பெருமை என்பது வஞ்சகமுள்ளது, அபாயகரமானது. பெருமையால் மனிதன் எளிதாக வஞ்சிக்கபட முடியும். பொதுவாக நாம் நம் செயல்பாடுகளை நியாயப்படுத்தத் தூண்டப்படுகிறோம். இதையே வேறுவிதமாகச் சொன்னால், சுய நீதியை நாம் நடைமுறைப்படுத்துகிறோம். இதைத்தான் நாகமான் செய்தான். அவன் எலிசாவை விட்டுப் போனபிறகு, தேவன் தனக்கு என்ன வைத்திருந்தாரோ அதைவிடத் தான் மதிப்புமிக்கவன் என்பதைத் தனக்குள்ளே சொல்லிக்கொண்டு தன் கோபத்தை நியாயப்படுத்தப் பார்த்தான். இப்படிச் செய்ததினால், அவன் தன்னைத்தானே தரம் தாழ்த்திக்கொண்டான்.

பெருமை என்பது மனிதனுக்குள் பெரும்பிரச்சனையாக இருக்கிறது. இக்குணம் மனிதர்களைத் தாழ்வான நிலைக்குத் தள்ளிவிடுகிறது. மேலும், பெருமையானது, தேவன் நம்மில் அன்பு கூருவதுபோல, நம்மில் நாம் அன்பு கூராமல் இருக்கும்படி தடுத்துவிடுகிறது. நாம் நினைத்துப்பார்க்க முடியாத அளவு, தேவன் நம்மில் அன்பு கூருகிறார். எப்படியெனில், தேவன் தம்முடைய ஒரே பேறான, குமாரனையே நமக்காக ஒப்புக் கொடுத்தார் (யோவான் 3:16). இதினிமித்தம், தேவனுடைய பார்வையில் நாம் விசேஷித்தவர்களாயிருக்கிறோம். மாறாக, நாம் விசேஷித்த வர்களல்ல, மதிப்புள்ளவர்களல்ல என்று சொல்லிக் கொள்வது நம்மை நாமே வஞ்சிக்கிற செயலாக இருக்கிறது. ஏனென்றால், நம்மில் நாமே அன்பு கூரவில்லையென்றால் சகோதரர்களிடத்தில் நாம் எப்படி அன்பு கூர முடியும்? உன்னிடத்தில் நீ அன்பு கூருவதைப் போல் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்று கிறிஸ்து சொன்னார் (மத்தேயு 22:39).

பெருமை வஞ்சனையுள்ளது, அது நம்மை, நாம் இவ்வுலகப் பொருளுக்கு ஒப்பான மதிப்புடையவர்களாக எண்ண வைக்கிறது. அப்போஸ்தலனுடைய பவுலும் இப்படிப்பட்ட காரியங்களினிமித்தம் நாம் வஞ்சிக்கப்படாமலிருக்க வேண்டும் என்று எச்சரிக்கிறார். மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான் (கலா.6:7,8). பெருமை மாம்சத்தில் விதைக்கப்படுகிறது. அது கட்டுப்படுத்தப்படாமல் போனால், நம்மை முற்றிலுமாக அழித்துவிடும், ஆகவே எச்சரிக்கையாயிருப்போம்!

**உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின் படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் (யோவான்2:15-17).**

# தாய்மை
# Motherhood

*Raymond Elliott*



தேவபக்தியுள்ள தாய்மார்களை நாம் எப்போதுமே நினைவுபடுத்திக் கொள்வது சிறந்ததாயிருக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அவமானங்களையும், பாடுகளையும் சகித்துக்கொண்டு தொங்கிக்கொண்டிருக்கையில், தம்முடைய தாயை நினைத்து யோவான் அப்போஸ்தலனிடம் தம்முடைய பிரிவிற்குப் பிறகு, தாயைப் பார்த்துக் கொள்ளும்படி அன்பின் கட்டளையிட்டார் [யோவான் 19:20,27]. எந்த ஒரு மொழியிலும் இனிமையான வார்த்தை அம்மாதான். அம்மா என்னும் வார்த்தைக்கான அர்த்தத்தைப் புரிந்து கொள்ள அகராதி தேவையில்லை. திருமணத்தின் பிரதான நோக்கங்களுள் ஒன்று பிள்ளைப்பேறு [ஆதி.1:27]. இதில், தாய்மையின் பங்கை ஒருபோதும் லேசாக எடுத்துக்கொள்ளக் கூடாது. அதேபோல், இந்த நவீன காலத்தில், தாய்மைக்கென்று கொடுக்கவேண்டிய களத்தைச் சிறிதளவும் குறைக்கக்கூடாது.

தேவனுடைய சிருஷ்டிப்பின் மகுடம், மனிதனுடைய விலா எலும்பிலிருந்து இறுதிப்படைப்பாகிய பெண்ணை உருவாக்கியது தான். மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று தேவன் கண்டு, அவனுக்கு ஏற்றத் துணையைக் கொடுத்தார். பின்பு, ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான். ஏனெனில், அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள் [ஆதி.3:20]. சாலொமோன் ஞானி சொல்லும்போது, புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு என்று சொல்லுகிறார் [நீதி.19:14]. இப்பூமியில் ஒரு பெண்ணைப் பொறுத்தவரை, தாய்மை அடைவதுதான் மிகவுயர்ந்த கனத்திற்குரியதாயிருக்கிறது. அதிலும் குறிப்பாக, அப்பெண் தேவனுக்குப் பிரியமான தாயாக இருப்பது இன்னும் விசேஷித்ததாயிருக்கிறது.

> எந்த ஒரு மொழியிலும் இனிமையான வார்த்தை அம்மாதான். அம்மா என்னும் வார்த்தைக் கான அர்த்தத்தைப் புரிந்துகொள்ள அகராதி தேவையில்லை.

ஒரு தாய் தன்னுடைய பிள்ளைகளின் ஆவிக்குரிய பயிற்சிக்குப் பெரும்பங்கு ஆற்றுகிறாள். குடும்பத்தில் எப்படிப்பட்ட காரியங்களாக இருந்தாலும், அதில் தாயின் தாக்கம் அளவில்லாதது. அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் ஒரு முறை தன் தாயைப் பற்றிக் கூறும்போது, இன்று நான் என்னவாக இருக்கிறேனோ அல்லது என்னவாக இருப்பேன் என்று எதிர்பார்க்கிறேனோ அவை எல்லாவற்றிற்கும் நான் என் தாய்க்குக் கடன்பட்டிருக்கிறேன் என்றார்.

இன்னுமாக, தன்னுடைய பிள்ளைகள் கர்த்தருக்காக வாழத் தூண்டுகோலாக இருந்த தேவ பக்தியுள்ள சில தாய்மார்களை வேதாகமத்தின் வெளிச்சத்தில் நாம் காண முடியும். ஆம், மோசேயின் தாய். அந்த இளம் வயது தாய் மோசேயை சரியான பாதையில் வழிநடத்தினபடியால், மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து அநித்தியமான பாவ சந்தோஷங்களை அநுபவிப்பதையே தெரிந்து கொண்டான் (எபிரெயர் 11:24,25) என்று காண்கிறோம். அதேபோலவே வேதாகமத்தை வாசிக்கும் எல்லோருமே அன்னாள் என்ற தாயின் அருமையான ஜெபத்தையும் அறிந்திருக்கிறார்கள். அன்னாள், தான் தாய்மையடையும்படியாக, கர்த்தர் தனக்கு ஒரு குமாரனைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் கர்த்தருக்காக ஒப்புக்கொடுப்பதாகப் பொருத்தனை பண்ணினாள். அதன்படியே கர்த்தரின் ஆசீர்வாதத்தால் ஒரு குமாரனைப் பெற்று அவனுக்குச் சாமுவேல் என்று பெயரிட்டு தேவசமூகத்தில் கொண்டுவந்து அவனை அர்ப்பணித்தாள்.

சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் பிரதான ஆசாரியனாகிய ஏலியின் மூலமாகப் போதிக்கப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்டு இவ்விதமாய் தேவனுடைய சமூகத்தில் வளர்ந்தான் பின்னாளிலே, இந்த சாமுவேல், இஸ்ரவேலிலே ஒரு தீர்க்கதரிசியாகவும், ஆசாரியனாகவும், நியாயாதிபதியாகவும் கர்த்தருடைய ஜனங்களுக்கு சேவை செய்து இஸ்ரவேலிலே மிகச்சிறந்த தலைவனாகத் திகழ்ந்தார். இன்றைய நாட்களில், நம்முடைய இல்லங்களிலும் இப்படிப்பட்ட அன்னாள்கள் இருந்ததால், பிரசங்க மேடைகளிலே அநேகப் பிரசங்கியர்கள் இருப்பார்கள்.

அடுத்ததாக, கர்த்தருக்கு முன்பாக எல்லாவிதத்திலும் நீதியாக நடந்த யோவான் ஸ்நானனின் தாயாகிய எலிசபெத்து கர்த்தரிட்ட சகல கற்பனைகளின் படியேயும் நியமங்களின் படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள் [லூக்கா 1:6]. எலிசெபத்து தன்னுடைய குமாரனுக்கு தேவன் சொன்னபடியே, யோவான் என்று பெயரிடுவதற்குத் தீர்மானமாயிருந்தாள். அதேபோல், இயேசுவின் தாயாகிய மரியாள், நம் ஆண்டவரை இப்பூமியில் ஈன்றெடுக்க தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரமாயிருந்த படியால், ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவளாயிருந்தாள் [லூக்கா 1:42]. இதினிமித்தம், மரியாள் தனித்துவம் வாய்ந்தவளாகத் திகழ்ந்தாள். அதாவது, மரியாளோ அந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்து சிந்தனை பண்ணினாள் [லூக்கா.2:19].

கடைசியாக, தீமோத்தேயுவின் பாட்டி மற்றும் தாய் பற்றி அவர்கள் தேவபக்தியுள்ள ஸ்திரீகள் என்று வேதாகமம் குறிப்பிடுகிறது. ஆம், லோவிசாள் மற்றும் ஐனிக்கேயாள் என்ற தேவபக்தியுள்ள ஸ்திரீகளான இருவரும், தீமோத்தேயு சிறுவயதாயிருந்த போது, கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களைக் கற்று கொடுத்திருக்கிறார்கள் [2தீமோ.3:14,15]. இப்படிப்பட்ட பரிசுத்த தேவபக்தியுள்ள தாய்மார்கள், இன்று கிறிஸ்தவ இல்லங்களில் உள்ள தாய்மார்கள் பின்பற்றும்படியான பாத்திரமாக வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள்.


**உலகில் பொய்மையில்லா உண்மை தாய்மை!** ✝

---

## கிறிஸ்தவர்களுக்கு தேவ ஆலோசனைகள்

- **அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்யுங்கள் (கலா. 5:13)**
- **ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லுங்கள் (கொலோ. 3:16)**
- **முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள் (1 பேதுரு 4:9)**
- **ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள் (யாக்கோபு 5:16)**

## சத்திய வழி




❖ பேச்சாளர் : சகோ. P.R. சுவாமி (ஊழியர்)
❖ ரேடியோ : ஞாயிறு to வெள்ளி 5.30 p.m.
❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி


<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.
போன் : 080-25463507, செல் : 09844070763

---

## கிறிஸ்துவின் வசனம்



❖ பேச்சாளர் : சகோ. B. அர்ஜுனன்
❖ நம்பிக்கை TV : திங்கள் & சனி மாலை 7:30 – 7:45 மணி
❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்
❖ ரேடியோ : 31 Meter Band (சனி மாலை 5.30 5.45)
Srilanka all Asia Service



<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;
கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.
திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

---


## கிருபையுள்ள வார்த்தை



❖ பேச்சாளர் : சகோ. P.C. பிலேமோன் ராஜா
❖ தமிழன்/நம்பிக்கை : ஞாயிறு காலை 6:45 & வெள்ளி காலை 6:15 மணி
❖ பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)
❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை
❖ **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL
❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.
செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## திருமறை தியானம்



### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:10 மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 மணி |

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

வேதாகம அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

தொடர்புக்கு

இயக்குநர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள் (TRACTS) வேண்டுவோர் எங்களைத் தொடர்புகொள்ளுங்கள்

E.Z.S. ராஜநாயகம் : 98427 30382
P.R. சுவாமி : 098440 70763
P.C. பிலேமோன் ராஜா: 9244204420
B. அர்ஜுனன் : 994435 58041

## ' சத்தியத்தின் குரல் ' சந்தா விண்ணப்பம்

❑ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( **4** இதழ்கள் ) (அ) ரூ. 200 ( **8** இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு என்னுடைய ........................................ முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ...................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ "சத்தியத்தின் குரல்" நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**

"சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் - 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**

பெயர் : ______________________________

தெரு / ரோடு : ______________________________

நகரம் : ____________________ பின் கோடு : ____________

மாநிலம் : ______________________________